D:\Recentajobs\Hann-bible.P6.5....Ms1

வேதபாடசாலை - 27

யோவான் எழுதிய சுவிசேஷம்
(பகுதி 5)

(அதிகாரங்கள் 14-16)

பரிசுத்த ஆவியானவரின்
ஊழியம்

The Gospel of John
Verse by Verse Ch.14-16
ICM Book - 27
Tamil

© IBL
2003

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to

India Bible Literature
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail: ibl.maa@iblchennai.org

அத்தியாயம் ஒன்று

‘‘கேள்விகளும் பதில்களும்’’

(யோவான் 13:33 - 14:14)

யோவான் சுவிசேஷத்தைப் பற்றிய இந்த ஆய்வின் ஒவ்வொரு விரிவுரை நூலின் துவக்கத்திலும் நான் என் நோக்கத்தை விளக்கியிருக்கிறேன். யோவான் சுவிசேஷத்தை வசனம் வசனமாக விளக்கும் வேதபாட சாலையின் நூற்று முப்பது வானொலி ஒலிபரப்புகளைக் கேட்பவர்களுக்கு சிறு விளக்கவுரை நூல்களை அளிப்பதே எங்கள் நோக்கமாகும். இந்தச் சிறு நூலை வாசிப்பதற்கு முன்பாக, இந்த வரிசையில் ஏற்கெனவே வெளிவந்துள்ள முதல் நான்கு நூல்களையும் வாசிப்பீர்களானால், தொடர்ச்சியைப் புரிந்துகொள்ள உதவியாயிருக்கும். இந்தச் சிறு விளக்கவுரை நூல்களில் இது ஐந்தாவது நூலாகும்.

இப்போது நாம் படிக்கப் போகும் பகுதியின் பின்னணியை அறிந்துகொள்ள வேண்டுமானால் புத்தகம் எண் 26-ஐப் படிக்க வேண்டும். அது இந்த ஆய்வுக்கு முன் வந்த நூலாகும். நீங்கள் யோவான் சுவிசேஷத்தை வசனம் வசனமாக ஆய்வுசெய்ய விரும்புவீர்களானால், முதல் நான்கு நூல்களும் உங்களிடம் இல்லாவிட்டால், எங்களுக்கு எழுதுங்கள். அந்த நூல்களை அனுப்பி வைப்போம்.

நான் ஏற்கெனவே 26-ஆம் புத்தகத்தில் விளக்கியபடி, பன்னிரெண்டாம் அதிகாரத்தின் மையத்தில் யோவான் சுவிசேஷத்தின் முதல் பாதிப் பகுதி இயேசுவானவரின் ஊழியத்தைப்பற்றிக் கூறுகிறது; அவர் பிரசங்கம் செய்தும், போதித்தும், குணமாக்கியும், தமது அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சியளித்தும் தமது ஊழியத்தைத் தொடர்ந்து வந்தார். இந்த அப்போஸ்தலர்கள் அவர் தமது மூன்றாண்டு கால ஊழியத்தில் செய்யத் துவக்கியதைச் செய்து முடிப்பார்கள். யோவான் தனது சுவிசேஷத்தின் இரண்டாவது பகுதியில், இயேசுவானவரின் நீண்ட பிரசங்கத்தைப் பதிவு செய்ய நான்கு அதிகாரங்களை ஒதுக்கியிருக்கிறார்; இது சுவிசேஷங்களிலேயே பெரிய பிரசங்கத் தொகுப்பாகும்; இது ‘‘மேலறைப் பிரசங்கம்’’ என்று அழைக்கப்படுகிறது (யோவான் 13:16).

பண்டைக் காலத்துப் போதகர்கள் தாங்கள் போதிக்கும்போது கேள்வி பதில் வழிமுறையை அடிக்கடி பயன்படுத்தினார்கள். உண்மையில், மற்றொரு கேள்வியைக் கேட்பதின் மூலம் அவர்கள் கேள்விகளுக்குப் பதிலளித்தார்கள். ஹில்லல் என்ற ரபீயிடம் ‘‘ஏன் ரபீக்கள் ஒரு கேள்விக்குப் பதிலாக மற்றொரு கேள்வியையே கூறுகிறார்கள்?’’ என்று கேட்டார்கள். அவர் ‘‘ஏன் நாங்கள் அப்படிச் செய்யக் கூடாது?’’ என்று பதில் கேள்வி எழுப்பினார். இந்தச்

சுவிசேஷம் வலியுறுத்துகிறபடி இயேசுவானவர் வெறும் போதகராக இருக்கவில்லை. என்றாலும், ஒரு பரிபூரணமான ஆசிரியராக அவர் தாம் போதிக்கும் போது கேள்வி பதில் வழிமுறையைப் பயன்படுத்துகிறார். இந்த மாபெரும் சொற்பொழிவை அவர் தமது அப்போஸ்தலர்களுக்காகக் கொடுத்தார்; அவர்களின் இருதயத்திலும் சிந்தையிலும் அவர் தூண்டுதலளிக்கும் கேள்விகளை வேண்டுமென்றே எழுப்பினார்.

இயேசுவானவர் தமது மரணத்துக்கு முன்பாகத் தமது சீஷர்களை இறுதியாகச் சந்தித்த போது, அவர் தமது இந்த மிக நீளமான பிரசங்கத்தைக் கொடுத்தார். அவருடைய போதனை முழுவதும் ஒரு இளைப்பாறுதல் முகாம் பின்னணியில் கொடுக்கப்பட்டபடியால், நான் இந்த போதனையை ''இறுதியான கிறிஸ்தவ இளைப்பாறுதல் முகாம்'' என்று குறிப்பிடுகிறேன். தமது மூன்றாண்டுகாலப் பொது ஊழியத்தின் துவக்கத்தில் இயேசுவானவர் ஒரு பெரிய பிரசங்கத்தைக் கொடுத்தார். நாம் அதை ''மலைப் பிரசங்கம்'' என்று அழைக்கிறோம். நான் அந்தச் சொற்பொழிவை ''முதல் கிறிஸ்தவ இளைப்பாறுதல் முகாம்'' என்று அழைக்கிறேன். ஏனென்றால், இயேசுவானவர் அந்தப் பிரசங்கத்தையும் ஒரு ஓய்வான இளைப்பாறுதல் முகாம் பின்னணியில் (retreat setting)தான் கொடுத்தார். மலையுச்சியில் அவருடைய அறைகூவலைப் பெற்ற சீஷர்களிலிருந்து அவர் பன்னிருவரைத் தமது அப்போஸ்தலர்களாக அல்லது ''அனுப்பப்படுகிறவர்களாக'' தெரிந்து கொண்டார். மூன்றாண்டுகள் இயேசுவானவர் அவர்களுக்குப் போதித்தார், வழிகாட்டினார், அவர்களை ஊழிய முயற்சிகளுக்கு அனுப்பும்போது அவர்களுக்கு பயிற்சியளித்தார். இப்போது மறுபடியுமாக அவர்களோடு தனிப்பட்ட தியானத்தில் ஈடுபட்டிருக்கிறார். அவரோடு மூன்றாண்டு காலம் அவர்கள் பயிற்சிபெற்ற பிறகு அவர் அவர்களுக்குத் தேர்ச்சியை அளிக்கப் போகிறார்.

பதின்மூன்றாம் அதிகாரத்தின் கடைசி வசனங்கள் பேதுரு இயேசுவானவரிடம் கேட்ட இரண்டு கேள்விகளைக் குறிப்பிடுகின்றன: ''ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக் கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்'' என்று பேதுரு கூறினான். இயேசுவானவர் இதற்கு மறுமொழியாகப் பேதுரு தம்மை மூன்று தரம் மறுதலிக்கப் போகிறதை முன்னறிவித்தார். பிறகு அடுத்த அதிகாரத்தின் துவக்கத்தில் பேதுருவின் இந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலளிக்கத் தொடங்குகிறார். பேதுரு இயேசுவானவரிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டு, அவர் அதற்குப் பதிலளித்த பிறகு, தோமா, பிலிப்பு, யூதா இவர்களும் அவரிடம் கேள்வி கேட்டார்கள். அவர்களின் கேள்விகளும் அதற்கு இயேசுவானவர் அளித்த பதில்களும் பதினான்காம் அதிகாரத்தின் மையமாகக் காணப்படுகின்றன.

பதின்மூன்றாம் அதிகாரத்தின் இறுதியில் இயேசுவானவர் மென்மையான அன்பைக் காட்டும் இந்த வார்த்தைகளைப் பயன் படுத்தியபோது, அவர் வேண்டுமென்றே கேள்விகள் கேட்கப்படுவதை ஊக்குவித்தார் என்று நான் நம்புகிறேன்: ''பிள்ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனே கூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனாலும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக் கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்'' (13:13). இந்த இரண்டு அதிகாரங்களிலும், பதின்மூன்றாம் அதிகாரத்தில் முப்பத்தொன்றாம் வசனத்திலிருந்து, பதினான்காம் அதிகாரத்தில் முப்பத்தொன்றாம் வசனம் வரையில், இயேசுவானவரின் வருகையையும் போவதையும் குறித்த கருப்பொருள் இல்லாத ஐந்து வசனங்களை ஒன்றாகப் பார்க்க முடியாது - இயேசுவானவர் இந்த உலகத்துக்கு வந்தார், இப்போது அவர் தமது பிதாவானவரிடம் திரும்பச் செல்லப் போகிறார்.

அவர் மறுபடியும் மறுபடியுமாக இந்தக் கருத்துப் படிவத்தை (concept) வலியுறுத்தியபோது, அவர் சீஷர்கள் அனைவருடைய மனதிலும் பேதுரு கேட்ட இந்த இரண்டு கேள்விகளையும் எழுப்பினார், இயேசுவானவர் வேண்டுமென்றே இதைச் செய்தார்; ஏனென்றால், இந்த இரண்டு கேள்விகளுக்கும் உரிய பதில் அவர் தமது சீஷர்களோடு பகிர்ந்துகொள்ள விரும்பிய சத்தியத்தின் மையமாக இருக்கிறது.

இயேசுவானவர் பேதுருவின் முதல் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக ''நான் போகிற இடத்துக்கு இப்பொழுது நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே வருவாய்'' என்று கூறினார். இயேசுவானவர் உண்மையில் பேதுருவின் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். தாம் எங்கே செல்கிறோம் என்பதை அவர் திட்டவட்டமாக அவனுக்குக் கூறவில்லை. ''இப்போது உன்னால் வர முடியாது, ஆனால் பின்னால் நீ வருவாய்'' என்று மட்டுமே அவர் கூறினார். பிறகு பேதுரு தனது இரண்டாவது கேள்வியைக் கேட்டான்: ''ஆண்டவரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன் வரக் கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்'' என்று அவர் கூறினான்.

இயேசுவானவர் தாம் போவதைப் பற்றிக் கூறியபோது, தமது மரணத்தைப் பற்றியே கூறுகிறார் என்பதைப் பேதுரு உணர்ந்தான் என்பது தெளிவாகிறது. முந்தைய சிறு நூலில் நான் கூறியபடி, சமயத்தலைவர்கள் ஆண்டவரையும் அவருடைய அப்போஸ்தலர்களையும் கைது செய்யும்படி ரோமாபுரியை வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். பெரிய ஆபத்து வரவிருந்தது; இந்த மனிதர்கள் பயந்து போயிருந்தார்கள். தாங்களும் இயேசுவானவரோடு கூட மரிக்கும்படி

கேட்டுக்கொள்ளப்படுவதற்கு வாய்ப்பு இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். குறிப்பாக, அவர் தாம் மரிக்கப் போவதாகக் கூறும்போது, அவர்களும் கோதுமை மணியைப் போல நிலத்திலே விழுந்து சாகவேண்டியிருக்கும் (12:24) என நினைத்தனர்.

இயேசுவுக்காகத் தன் உயிரையும் கொடுப்பதாகக் கூறிய பேதுருவுக்கு அவர் அச்சுறுத்தும் வார்த்தைகளையே பதிலாகக் கொடுத்தார்: ''எனக்காக உன் ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று, மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.' இந்த வார்த்தைகள் பேதுருவின் இருதயத்தில் எத்தகைய துக்கத்தையும் வேதனையையும் உண்டாக்கியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

இயேசுவானவர் இந்த வார்த்தைகளைப் பேதுருவிடம் கூறிய போது, அவருடைய முகபாவனையைக் குறித்தோ அல்லது குரலின் தொனியைக் குறித்தோ எதுவும் கூறவில்லை. என்னால் இதை நிரூபிக்க முடியாவிட்டாலும், இயேசுவானவர் இந்த வார்த்தைகளைப் பேதுருவிடம் கூறியபோது, இயேசுவின் கண்கள் பேதுருவுக்காக அதிக அன்பினால் கலங்கியிருந்தன என்றும் அவருடைய குரல் அதிகமான மென்மையை வெளிப்படுத்தியது என்றும் என்னால் கூற முடியும்.

பேதுருவுக்கு இந்த வார்த்தைகளைக் கூறுவதற்குச் சில வினாடிகளுக்கு முன்புதான் அவர் அவர்கள் அனைவரையும் 'பிள்ளைகளே'' என்று அழைத்திருந்தார். இது அன்பையும் பாசத்தையும் குறிக்கும் வார்த்தையாக இருக்கிறபடியால், இந்த வேளையில் இவர் அவர்களோடு அன்போடும் மென்மையாகவும் உரையாடினார் என்பதை நாம் அறிகிறோம். பேதுருவோடு அவருடைய உரையாடலிலும் இந்த அன்பும் மென்மையும் வெளிப்பட்டது என்று நான் நம்புகிறேன். ''அப்படியா, பேதுரு? உண்மை என்னவென்றால் நாளை காலையில் சேவல் கூவுவதற்கு முன்பாக நீ என்னை ஒரு முறையல்ல, மூன்று முறை மறுதலிப்பாய்'' என்று அவர் கூறியபோது அவர் முகத்தில் புன்சிரிப்பு காணப்பட்டிருக்கும் என்றே நான் நினைக்கிறேன்.

இயேசுவானவர் பேதுருவுக்குக் கூறிய இந்த வார்த்தைகள் எவ்வாறு சுற்றியிருந்த மற்றவர்களையும் கலங்கப்பண்ணியது என்பதைக் கவனியுங்கள். அவர்கள் ஆவியில் கலக்கமடைந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். இயேசுவானவர் அடுத்து அவர்கள் அனைவருக்கும் கூறிய இந்த வார்த்தைகள் பொருத்தமானவையாகவே இருந்தன: ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக;

தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.''

''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'' என்று இயேசுவானவர் அவர்கள் அனைவரிடமும் கூறினார் என்பதைக் கவனியுங்கள். ''உங்கள்'' என்பது பன்மைச் சொல்லாகும். ''தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்'' என்று அவர் கூறியபோது அனைவரிடமும் இதைக் கூறினார் என்பது தெளிவாகிறது. இது அவர் தெய்வத்துவத்தை உரிமை கொண்டாடுவதாக இருக்கிறது; ஏனென்றால் அவர் தம்மைத் தேவனோடு ஒரே மட்டத்தில் வைக்கிறார். பிறகு அவர் நன்கு அறிமுகமான இந்த வார்த்தைகளோடு தமது பெரிய பிரசங்கத்தைத் துவங்குகிறார்; அடக்க ஆராதனைகளில் இந்த வார்த்தைகளை வாசிக்க நாம் விரும்புகிறோம்.

''நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக் கிறீர்கள்''. இந்த மனிதரின் சிந்தையில் மற்றொரு கேள்வியை எழுப்ப வேண்டும் என்பதே அவருடைய இந்த வாசகத்தின் நோக்கம் என்று நான் நம்புகிறேன். தாம் எங்கே செல்கிறோம் என்பதையும், அங்கே செல்லும் வழியையும் அவர்கள் அறிந்திருப்பதாக இயேசுவானவர் கூறியபோது, நாம் ''சந்தேகம் கொள்ளும் தோமா'' என்று அழைக்கும் அப்போஸ்தலன் இயேசுவானவர் எதிர்பார்த்த கேள்வியைக் கேட்கிறான்: ''ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம்?''

தோமாவின் இந்தக் கேள்விக்கு இயேசுவானவர் அளித்த பதில் யோவான் சுவிசேஷத்திலும் முழு வேதாகமத்திலும் மிகவும் அற்புதமான வசனங்களில் ஒன்றாக இருக்கிறது: ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்'' என்று அறிக்கையிடும் இயேசுவானவர் மேலும் தொடர்ந்து ''என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்று அறிவிக்கிறார்.

இயேசுவானவர் தோமாவின் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும்போது மூன்று முக்கிய காரியங்களைக் குறித்து உரிமை கொண்டாடுகிறார். தாமே வழி, தாமே சத்தியம், தாமே ஜீவன் என்று அவர் உரிமை கொண்டாடுகிறார். அவர் தாம் அவர்களுக்காக ஆயத்தம் பண்ணும் இடத்துக்குத் தாமே வழியாக

இருப்பதாகக் கூறியபோது, அவர் சிலுவையில் தமது மரணத்தைக் குறிப்பிடுகிறார். நமது ஆண்டவரின் சிலுவை மார்ப்பதக்கத்தில் அணிந்துகொள்ளும் வெறும் ஆபரணம் அல்ல. இயேசு கிறிஸ்துவின் சிலுவை நமது இரட்சிப்புக்கான வழியையும், தேவனிலும் இரட்சகராகத் தம்மிலும் விசுவாசம் வைப்பவர்களுக்குத் தாம் ஆயத்தம் பண்ணுவதாக வாக்குத்தத்தம் செய்துள்ள இடத்துக்கு வழியையும் குறிக்கிறது.

சிலுவையில் இயேசுவானவரின் மரணம் ஒரு ஆசாரியனாக அவருடைய ஊழியத்துக்கு அடையாளமாக இருக்கிறது. மனிதனின் சார்பாக ஆசாரியன் தேவனுடைய பிரசன்னத்தில் பரிந்து பேசுகிறான். இயேசுவானவர் சிலுவையில் மரித்தபோது அவர் இதையேதான் செய்தார். அவர் நமது பாவங்களுக்கான பரிபூரண பலியாக ஆனதின் மூலமாக, நீங்களும் நானும் பரலோகத்துக்குச் சென்று அங்கே தேவனோடு நித்தியத்தைக் கழிப்பதற்கான வழியை உண்டு பண்ணினார் (யோவான்; ஏசாயா).

இயேசுவினால் குறிப்பிட்ட ஒரு வெள்ளிக்கிழமை மதியம் இந்த உலகத்துக்கு வந்து நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்து, நாம் இரட்சிக்கப்படுவதற்கான வழியை உண்டுபண்ணியிருக்க முடியும். ஆனால் அவர் சிலுவையில் மரிப்பதற்காக மட்டுமே இந்த உலகத்துக்கு வரவில்லை என்கிறபடியால், உலகத்தில் பிறந்து முப்பது மூன்று ஆண்டுகாலம் இங்கே வாழ்ந்தார். இந்தச் சுவிசேஷத்தில் அவருடைய வாழ்வின் இறுதிநாட்களை விவரிப்பதற்கு அதிகமான அதிகாரங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது, சிலுவையில் அவருடைய மரணமும், மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்ததும் அவருடைய வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் மிக முக்கியமான பகுதி என்பதை நமக்குக் காட்டுகின்றது. அவர் சிலுவையில் மரித்தபோது ஏன் அந்தப் பெரிய வெள்ளிக்கிழமை மதிய நேரத்தை மட்டும் இங்கே கழித்திருக்கக் கூடாது? ‘‘அவர் சத்தியமாகவும் இருக்கிறார்’’ என்பதே இந்தக் கேள்விக்குப் பதிலாகும்.

இந்தச் சுவிசேஷத்தின் அறிமுக வார்த்தைகளை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? ‘‘அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.’’ அவர் வார்த்தையாக இருந்தார் - தேவனுடைய சிந்தனைக்கு அவர் ஊடகமாக இருந்தார் - அந்த வார்த்தை மனிதனால் புரிந்து கொள்ளக்கூடிய தேவனுடைய சிந்தனை முழுவதையும் அவனுக்கு அறிவித்தது. வார்த்தையாக, அவர் ஆதியிலேயே தேவனோடிருந்தார், அவர் தேவனாக இருந்தார். ‘‘அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறான வருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது.’’

தேவனுடைய மக்கள் மோசே மற்றும் தீர்க்கதரிசிகளின் மூலமாக வந்த பரிசுத்த ஏட்டின் மூலமாக ஏற்கனவே சத்தியத்தைப் பெற்றிருந்தார்கள். ஆனால் இந்த உலகத்து மக்கள் வெறும் பரிசுத்த ஏட்டைப் பெற்றால் போதும் என்று தேவன் விரும்பவில்லை. அவர்கள் தேவனுடைய செய்தியை வெளிப்படுத்திச் செயல்படுத்திக்காட்டும் ஒரு ஜீவனுள்ள வார்த்தையைப் பெறவேண்டுமென்று அவர் விரும்பினார். இந்த வார்த்தை மானிட மாம்சத்தில் ஒரு பரிபூரண வாழ்க்கையை வாழ்ந்துகாட்ட வேண்டுமென்று அவர் விரும்பினார். பரிசுத்த ஏட்டின் சத்தியத்தை நாம் மானிட வாழ்க்கையில் எவ்வாறு வாழ்ந்து காட்ட முடியும் என்பதை நாம் காணவேண்டுமென்று அவர் விரும்பினார். ‘‘நானே சத்தியமாயிருக்கிறேன்’’ என்று இயேசுவானவர் கூறியதற்கு இதுவே அர்த்த மாகும். இவர் இருந்த ஒவ்வொன்றிலும், செய்த ஒவ்வொன்றிலும் அவர் சத்தியமாக இருந்தார். இந்த உரிமை கொண்டாடுதல் அவர் அவர்களுக்குப் போதித்த அனைத்து வேளைகளையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

‘‘நானே ஜீவனாயிருக்கிறேன்’’ என்பது அவருடைய உரிமை கொண்டாடலின் மூன்றாவது பகுதியாகும். அவர் பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார் என்றும், அந்த வகையில் எப்படி வாழ்வது என்பதை நமக்குக் காட்டினார் என்பதும் இதற்கு அர்த்தமாகும். அதாவது, அவர் நித்திய வாழ்வை நமக்கு மாதிரியாகக் காட்டினார்; தமது சுவிசேஷம் முழுவதிலும் யோவான் இந்த வாழ்க்கையின் தரத்தை நமக்குச் சுட்டிக்காட்டி வருகிறார். தாம் போதித்து சந்தித்தவர்களுக்கு மறுபடியும் பிறப்பதின் அனுபவத்தைக் கொண்டு வருவதின் மூலமாக ‘‘பரிபூரண ஜீவன்’’ என்று அவர் அழைக்கும் ஜீவனைக் கொடுக்கும் படியும் தாம் வந்ததாக அவர் உரிமை கொண்டாடுகிறார் என்பதும் இதற்கு அர்த்தமாகும் (10:10).

இந்த மூன்று உரிமை கோருதலிலும் முதல் சொல்லே மிக முக்கியமான வார்த்தையாக இருக்கிறது: ‘‘நானே என்பது.’’ இயேசுவானவர் தோமாவுக்கு அளித்த பதிலைக் குறித்து நாம் சிந்திக்கும்போது, யோவான் சுவிசேஷத்தில் இயேசுவானவரின் மேன்மையான ‘‘நானே’’ என்ற கூற்றுகளில் மற்றொன்றைக் காண்கிறோம். ‘‘நான் ஒரு இரட்சிப்பின் வழியைக் குறித்துப் பிரசங்கிக்கும்படி வந்திருக்கிறேன். தரமான வாழ்க்கையை விவரிக்கும் சில சத்தியங்களையும் நான் போதிக்கிறேன்’’ என்று அவர் கூறவில்லை. ‘‘நானே’’ என்பதே முக்கியமான வார்த்தையாக இருக்கிறது. நானே இரட்சிப்பின் வழியாக இருக்கிறேன். நானே நீங்கள் கேட்கும் சத்தியமாக இருக்கிறேன். நானே மனிதருக்கு ஒளியான சத்தியமாக இருக்கிறேன்.

மறுபடியுமாக, யோவான் சுவிசேஷத்தின் துவக்கப் பகுதியில் யோவான் ஸ்நானன் அல்ல, இயேசுவே வரவிருக்கிறவர் என்பதைக் குறிப்பிடுவதைப்

பாருங்கள். யோவான் ஸ்நானன் தொடர்ந்து நான் அவரில்லை என்று கூறிக் கொண்டிருந்தான். இயேசுவானவரோ தொடர்ந்து ''நானே'' என்று கூறிக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இயேசுவானவரைக் குறித்து யோவான் அதிகக் கவனிப்போடு கூறும் காரியம் அவர் யார் என்ற உண்மையாகும். மறுபடியும் மறுபடியுமாக ''நானே'' என்று கூறுவது இயேசுவானவர் தாம் போதித்தபடியே எல்லாமுமாக இருந்தார் என்பதைக் காட்டுகிறது. ''நானே ஜீவனாயிருக்கிறேன்'' என்று அவர் உரிமைகொண்டாடியபோது, தேவன் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் எதிர்பார்க்கும் வாழ்க்கைத் தரத்துக்கு ஒரு மாதிரியாகத் தாம் வாழ்ந்துகாட்டியிருக்கும் வாழ்க்கை யையும் அது குறிக்கிறது என்று கூறலாம்.

தாமே ஜீவனாக இருப்பதாக அவர் உரிமைகொண்டாடுவதின் அடிப்படை அர்த்தத்தை இந்தச் சுவிசேஷத்தின் துவக்கத்தில் காணலாம். யோவான் சுவிசேஷத்துக்கு வசனம் வசனமாக விளக்கவுரை கூறும் இந்தச் சிறுநூல் வரிசையின் முதல் புத்தகத்தில் யோவான் தனது துவக்க வசனங்களில் தான் என்ன கூறப்போகிறோம் என்பதை நமக்குத் தெரிவிப்பதாக நான் கூறியிருந்தேன். எனவே, தொடர்ந்து நாம் இந்தச் சுவிசேஷத்தைப் படித்துவரும்போது, இந்த முன்னுரை ஒரு உள்ளடக்க அட்டவணை போலிருப்பதில் நாம் வியப்படையக் கூடாது. இது யோவான் சுவிசேஷத்தில் நாம் வாசித்துக் கொண்டிருப்பதை விவரிக்கிறது.

இந்த முன்னுரையில், மக்கள் இயேசுவானவருக்குச் சரியாகச் செவிசாய்க்கும் போது, அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும் வல்லமையைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்றும், அவர்கள் தேவனாலே பிறக்கிறார்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ''அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்'' (1:12, 13). அவர் மக்களுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கைக்கு மாதிரியைக் கொடுத்திருக்கிறாரோ, அந்த வாழ்க்கையை வாழ்வதற்குத் தேவையான வல்லமையை யும் அவர் அவர்களுக்குக் கொடுக்கிறபடியால், தாமே ஜீவனாக இருப்பதாக அவர் உரிமைகொண்டாடுகிறார்.

தேவன் ஒரு முக்கியமான சத்தியத்தைப் போதிக்கும்போது, ஒரு கொள்கையைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பழைய ஏற்பாட்டு மனிதர்களைக் குறித்த ஆய்விலிருந்து நாம் அறிகிறோம். ''ஒரு பெரிய கருத்தைத் தெரிவிக்க விரும்பினால், அதை ஒரு நபராகப் பொதிந்து கொடு'' என்பதே இந்தக் கொள்கையாகும். எடுத்துக்காட்டாக, தேவன் விசுவாசம் என்ற கருத்துப்

படிவத்தைத் தெரிவிக்க விரும்பியபோது, அவர் அதை ஆபிரகாம் என்ற மனிதனின் வாழ்க்கையில் பொதிந்து கொடுத்தார். யாக்கோபின் வாழ்க்கையில் கிருபை பற்றிய கருத்துப் படிவத்தையும், யோசேப்பின் வாழ்க்கையில் தேவனுடைய அருளைக் குறித்தக் கருத்துப் படிவத்தையும் வெளிப்படுத்தினார் (ஆதியாகமம் 12-24; 25-32; 37-50).

உங்களுக்காகவும் எனக்காகவும் தேவன் வடிவமைத்துள்ள தரமான வாழ்க்கையாகிய நித்திய வாழ்வைக் குறித்துத் தெரிவிக்க தேவன் விரும்பியபோது, அவர் அதை இந்த உலகத்தில் முப்பத்து மூன்று ஆண்டுகாலம் வாழ்ந்த இயேசுவானவரின் வாழ்க்கையின் மூலமாக வெளிப்படுத்தினார். தனது முன்னுரையில், யோவான் மாம்சமாக வெளிப்பட்ட வார்த்தை ஒளியாயிருக்கிறார் என்று மட்டும் யோவான் கூறவில்லை. இயேசுகிறிஸ்துவின் மூலமாகக் கிருபையும் சத்தியமும் வெளிப்பட்டது என்றும் கூறியிருக்கிறார். அதாவது, இயேசுவானவர் நமக்குக் கொடுக்க வந்த ஜீவனாகவும் ஒளியாகவும் இருக்கிறார். அவரே வழியாகவும் இருக்கிறார். அவர் மூலமாகவே நாம் தேவனுடைய உண்மையான பிள்ளைகளாக வாழ முடியும். மறுபடியும் பிறத்தலே அந்த ஜீவனைக் கொடுக்கும் மாற்றத்தின் வழியாக இருக்கிறது. புதிய பிறப்பும் புதிய பிறப்புக்கான வழிவகையும் ''நானே ஜீவனாயிருக்கிறேன்'' என்ற வார்த்தைகளில் காணப்படுகின்றன.

உயிர்த்தெழுந்த, ஜீவனுள்ள கிறிஸ்து ஜீவனாயிருக்கிறார்; இன்று அந்த ஜீவனைப் பெறுவதற்கான வழியாகவும் இருக்கிறார் என்பதே இதிலுள்ள சத்தியமாகும். யோவான் சுவிசேஷம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகர் ஒருவரின் வாழ்க்கையை மட்டும் கூறவில்லை. இன்றும் அவர் ஜீவிக்கிறார், அவரால் உங்களுக்குள்ளும் எனக்குள்ளும் ஜீவிக்க முடியும்.

வரலாற்றுபூர்வமாக இயேசுவானவர் இருந்தாரா என்று கேள்வியெழுப்பு கிறவர்களும் இருக்கிறபடியால், இயேசுவானவரின் உண்மையான சீஷர் ஒருவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்: ''அவர் இருந்தாரா, இருக்கிறாரா என்ற நிச்சயமில்லாமல் அவர்கள் இருக்கிறபோது, நான் அவர் இருக்கிறார் என்று விசுவாசிக்கிறேன். அவர் இன்னும் இருக்கிறார் என்பதை நான் அறிவேன்.''

மற்றொருவர் இதே கருத்தை இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்: ''இயேசுகிறிஸ்து தாம் கூறுகிறபடியே எல்லாமுமாக இருக்கிறார். தம்மால் செய்ய முடியும் என்று அவர் சொல்லும் அனைத்தையும் அவரால் செய்ய முடியும். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்று அவர் கூறுகிறாரோ அப்படியே நீங்கள் இருக்கிறீர்கள். உங்களால் என்ன செய்ய முடியும் என்று அவர் கூறுகிறாரோ அதை உங்களால் செய்ய முடியும். ஏனென்றால் அவர் உங்களுக்குள் இருக்கிறார்.''

இந்த இரண்டு மேற்கோள்களும் ‘‘நானே ஜீவனாக இருக்கிறேன்’’ என்ற இயேசுவானவரின் அற்புதமான மூன்றாம் உரிமை கொண்டாடலுக்குத் தனிப்பட்ட முறையிலான செயல்படுத்துதலாக இருக்கின்றன.

வேறு வழி இல்லை

‘‘நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்’’ என்று அவர் உரிமைகொண்டாடும்போது, அவர் அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. மேலும் தொடர்ந்து, ‘‘என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்’’ என்றும் அவர் கூறியிருக்கிறார். தம்மைக் குறித்த ஒரு உண்மையை அவர் வலியுறுத்துகிறார்.

இந்தச் சுவிசேஷம் முழுவதிலும் இயேசுவானவரின் ஆற்றல் வாய்ந்த உரிமை கொண்டாடுதல்களை யோவான் பதிவுசெய்து வைத்திருக்கிறார். இந்தச் சுவிசேஷத்தின் மூன்றாம் அதிகாரத்தில் இயேசுவானவர் நிக்கொதேமுவிடம் கூறியதை யோவான் தொகுத்துக் கொடுத்திருக்கிறார். இயேசுவானவர் கூறியதின் சாராம்சம் இதுவே: ‘‘நான் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருக்கிறேன். சிலுவையில் உயர்த்தப்படும் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக, நான் இந்த உலகத்தின் பாவப் பிரச்சினைக்குத் தேவனுடைய ஒரே தீர்வாக இருக்கிறேன். அதாவது, நான் தேவனுடைய ஒரே இரட்சகராக இருக்கிறேன். அவருக்கு வேறு இரட்சகர் கிடையாது. நானே அவருடைய ஒரே இரட்சகராக இருக்கிறேன், நீ அதை விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால், என்னை நீ விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீ என்னை விசுவாசிக்காவிட்டால் குற்றத்தீர்ப்புக்கு ஆளாவாய்’’ (3:14-18).

இது உறுதியான ஒரு கோட்பாடாகும். சத்தியம் என்பது எப்போதுமே முற்றிலும் உண்மையானதாக இருக்கிறது. இரண்டும் இரண்டும் நான்கு என்று கூட்டினால் எப்போதுமே நான்காகவே இருக்கும், வேறு எண்ணிக்கை வராது. இயேசுவானவர் தாம் சத்தியத்தின் உருவமாக இருப்பதாகவும், தாம் கூறும் அனைத்தும் சத்தியம் என்றும் உரிமை கொண்டாடுகிறார். எனவே அவர் கோட்பாட்டையே உறுதி செய்யவேண்டியிருக்கிறது. ‘‘என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்’’ என்று இயேசுவானவர் கூறியபோது, அவர் சத்தியத்தையே கூறியபடியால், இரட்சிப்புக்கான முயற்சிக்கு வேறெந்த வழியையும். அவர்தள்ளிவிட வேண்டியிருக்கிறது. எனவேதான் அப்போஸ்தலர்கள் ‘‘அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை’’ என்று பிரசங்கம் செய்தார்கள் (அப். 4:12).

சி. எஸ். லூயி கூறியதை நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். இயேசுவானவர் தம்மைப் பற்றி கூறியவற்றை நீங்கள் ஆய்வு செய்வீர்களானால் மூன்றில் ஒன்றையே தெரிந்துகொள்ளவேண்டும்: ‘‘அவர் ஒரு பொய்யர் என்று நீங்கள் தீர்மானிக்கலாம். அவர் மனநலம் குன்றியவர் என்று கூறலாம், அல்லது நீங்கள் முகங்குப்புற விழுந்து, அவரை ‘ஆண்டவரே’ என்று அழைத்து, ஆராதிக்கலாம்.’’

இப்படித் தம்மைப் பற்றி இயேசுகிறிஸ்து கூறியபின், இப்போது அவர் வேண்டுமென்றே ஒரு கேள்வியை எழுப்புகிறார். அது பிலிப்புவின் மனதில் ஒரு கேள்வியை எழுப்புகிறது. ‘‘என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; இது முதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார். பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உன்னுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படியிருக்க, பிதாவை எங்களுக்கு காண்பியும் என்று நீ எப்படி சொல்லுகிறாய்?’’ (7, 8) என்று இயேசுவானவர் அவனிடம் கேட்டார்.

இயேசுவானவர் இந்தச் சுவிசேஷத்தில் தமது பிதாவானவரைப் பற்றி நூற்று இருபத்து நான்குமுறை பேசியிருப்பதாக யோவான் எழுதியிருக்கிறார். இயேசுவானவர் தமது சீஷர்களோடு மேல் அறையில் பேசிய இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டும் நாற்பத்து மூன்று முறை தமது பிதாவானவரைக் குறிப்பிட்டதாக யோவான் எழுதியிருக்கிறார். ‘‘நீர் எப்போதுமே ‘பிதா, பிதா, பிதா’ என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறீர். பிதாவை எங்களுக்குக் காட்டும், அப்போது அவர் ஏன் உமக்கு முக்கியமானவராக இருக்கிறார் என்பதையும், எங்களுக்கும் ஏன் முக்கியமானவராக இருக்க வேண்டும் என்பதையும் நாங்கள் அறிந்து கொள்வோம்’’ பிலிப்பு கூறியதின் அர்த்தம் இதுவேயாகும்.

பிலிப்புக்கு இயேசுவானவர் அளித்த பதில் அவர் எவ்வாறு அசாதாரணமான முறையில் தெய்வத்துவத்துக்கு உரிமை கொண்டாடுகிறார் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. லூக்கா இயேசுவானவரை மேசியாவாக அறிமுகம் செய்கிறார்; அவர் நமது மானிடத்தன்மையோடு தம்மை ஒருமுகப்படுத்திக் கொண்டார். ஆனால் அவரை நாம் தேவனாக அறிந்து விசுவாசிக்க வேண்டுமென்று யோவான் விரும்புகிறார். ஐந்து முதல் எட்டு வரையிலான அதிகாரங்களில் இயேசுவானவரின் உரிமைக் கோரிக்கைகளை நாம் பட்டியலிட்டுப் பார்த்தபோது, இது வலிறுத்தப்படுவதை நாம் கண்டோம்.

இயேசுவே மேசியா, தேவனுடைய குமாரன் என்ற கருப்பொருளோடுகூட அவர் மானிட மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் என்ற சத்தியமும் சுவிசேஷம் முழுவதிலும் வலியுறுத்தப்படுகிறது (அதிகாரம் 5-8; 20:30, 31). ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' என்று இயேசுவானவர் பிலிப்புவிடம் கூறும்போது, இயேசுவானவர் தாம் தேவன் என்று உரிமைகொண்டாடுவதற்குத் தெளிவானதும் வலுவானதுமான ஆதாரத்தை நாம் பார்க்கிறோம். பிலிப்புவின் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக இயேசுவானவர் தொடர்ந்து, ''நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து வருகிறார். நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நம்புங்கள்; அப்படியில்லா விட்டாலும் என் கிரியைகளின் நிமித்தமாவது என்னை நம்புங்கள்.

''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (14:9-14).

இயேசுவானவர் கூறிய ஏதோ ஒன்றுதான் பேதுரு, தோமா, பிலிப்பு, யூதா இவர்களைக் கேள்விகேட்கும்படித் தூண்டியது என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள். பிலிப்புவின் இந்தக் கேள்விக்கான இயேசுவானவரின் பதிலை யோவான் ஒன்பது முதல் இருபத்தொன்று வரையிலான வசனங்களில் பதிவுசெய்திருக்கிறார். அதன் பிறகு யூதா இயேசுவானவரிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறான். யூதாவின் கேள்விக்கு இயேசுவானவரின் பதில் அதிகாரத்தின் முடிவு வரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு அப்போஸ்தலர் களுக்கும் இயேசுவானவர் கொடுக்கும் பதில்கள், இயேசுவானவர் தாம் கைதுசெய்யப்பட்டு, கொல்லப்பட்டு, உயிரோடெழுப்பப்படுவதற்கு முன்பாகத் தமது சீஷர்களோடு மேற்கொண்ட உரையாடலின் மையமாக இருக்கின்றன.

சீஷர்கள் சுவிசேஷத்தினால் உலகத்தை ஆண்டவருக்காக ஆயத்தம் செய்யும்படிச் செல்லும் போது, அவர்கள் பெற்றிருக்க வேண்டிய இயக்காற்றலைக் குறித்து (Dynamism - சிறப்பான இயல்புகள்) இந்த மேலறை உரையாடலின் முக்கிய பகுதி கூறுகிறது. அவர்கள் எப்படி வாழ வேண்டும் என்றும், எப்படி உலகத்தின் சகல ஜாதியாருக்கும் போதிக்கவேண்டும் என்றும் அவர் அவர்களுக்குப்

போதித்துக் காட்டியிருக்கிறார், பயிற்சியளித்திருக்கிறார். இப்போது தாம் பதினைந்தாம் அதிகாரத்தில் திராட்சச் செடி குறித்த உருவகத்தில் (15:1-16) வலியுறுத்தப்போகிற கருத்துப் படிவத்தை இங்கே அறிமுகம் செய்கிறார். அவர் ஏற்கெனவே, ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்று போதித்தபோது (யோவான் 10:30) அவர் இந்தக் கருத்தைப் போதித்திருக்கிறார். பிலிப்புக்கு அவர் தாம் அளித்த பதிலில் ''நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா?'' என்று கேட்கிறார். பிறகு கடந்த மூன்று ஆண்டுகளாக அவர்கள் கண்ட அற்புதங்களின் மறுக்க முடியாத உண்மையின் அடிப்படையில் இந்த உரிமைகொண்டாடலை விசுவாசிக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுகிறார்.

அவர் ''நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்'' என்று கூறியபோது, தமது கைகளை ஒன்றாகச் சேர்த்துக் காட்டியிருக்கலாம். ஏனென்றால் அவர் கூறியதின் சாராம்சம் இதுவேயாகும்: ''நானும் பிதாவும் முற்றிலும் ஒன்றாயிருக்கிறோம். நான் பிதாவோடு ஐக்கியமாக இருக்கிறேன். பிதா என்னோடு ஐக்கியமாக இருக்கிறார். நான் பிதாவுக்குச் சொந்தமானவனாக இருக்கிறேன். பிதா எனக்குச் சொந்தமானவராக இருக்கிறார். நான் பிதாவில் இருக்கிறேன், பிதா என்னில் இருக்கிறார். நான் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் செய்யும் ஒவ்வொரு செயலும் பிதாவோடுள்ள எனது உறவிலிருந்தே வருகிறது.''

''இப்போது கடந்த மூன்றாண்டுகளாக நான் பேசிய வார்த்தைகளை நீங்கள் கேட்டும், நான் செய்த கிரியைகளை நீங்கள் கண்டும் வியப்படைந்திருக்கிறீர்கள். நாங்கள் இருவரும் ஒன்றாக இருக்கிற படியாலும், பிதா என்னிலும் நான் பிதாவிலும் இருக்கிறபடியாலும், என் மூலமாக உலகத்தில் பிதாவானவரின் வார்த்தைகள் பேசப்படுகின்றன என்பதையும், என் மூலமாக உலகத்தில் பிதாவானவரின் கிரியைகள் செய்யப்படுகின்றன என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். எனவே, நான் பேசி நீங்கள் கேட்கும் ஒவ்வொரு வார்த்தையும் பிதாவின் வார்த்தையாகும். நான் செய்து நீங்கள் காணும் ஒவ்வொரு கிரியையும் பிதாவின் கிரியையாகும். இது நான் பிதாவானவரோடு ஒன்றாக இருப்பதினால் நடைபெறுகிறது'' என்பதே இயேசுவானவர் கூறியதின் சாராம்சமாகும்.

இப்போது நாம் மேலறைச் சொற்பொழிவின் மிக முக்கியமான பகுதிக்கு வருகிறோம். இயேசுவானவர் கூறியதை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்: ''நான் சத்தியத்தையே சொல்லுகிறேன். என்னில் விசுவாசம் வைத்திருக்கும் எவனும் நான் செய்யும் இந்தக் கிரியைகளைச் செய்வான். நான் பிதாவானவரிடத்தில்

போகிறபடியால் அவன் இதிலும் மேன்மையான காரியங்களையும் செய்வான். இப்போது நான் உங்களைவிட்டு விலகிச் செல்கிறேன். அப்படிச் செல்லும்போது, தேவன் உங்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுக்கும்படி நான் வேண்டிக்கொள்வேன். அந்தத் தேற்றரவாளன் வரும்போது, இப்போது நான் பிதாவனாவரோடு ஒன்றாக இருப்பது போல, நீங்கள் ஆவியானவரோடே ஒன்றாக இருப்பீர்கள். உங்கள் மூலமாக என்னுடைய வார்த்தை உலகத்தில் பேசப்படும், உங்கள் மூலமாக என்னுடைய கிரியை உலகத்தில் செய்யப்படும்'' (9-13).

''நான் பிதாவானவரிடம் போகிறேன், நான் பிதாவானவரோடு ஒன்றாக இருப்பதுபோல, நீங்கள் ஆவியானவரோடு ஒன்றாக இருப்பீர்களானால், நீங்கள் இதைவிடப் பெரிய கிரியைகளைச் செய்வீர்கள்.'' என்ற ரீதியில் இயேசுவானவர் வாக்குத்தத்தம் அருளும்போது, புதிய ஏற்பாட்டிலுள்ள அறைகூவல்களில் மிகப் பெரிய அறைகூவல் ஒன்றை நாம் காண்கிறோம்.

இயேசுவானவர் பிதாவில் இருப்பதும், பிதா இயேசுவானவரில் இருப்பதுமான இந்தக் கருத்தை அப்போஸ்தலர்கள் புரிந்துகொள்ளும் வரையில், அவருடைய வாக்குத்தத்தத்தின் மகிமையான உண்மையை அவர்களால் கிரகித்துக்கொள்ள முடியாது; தம்மில் விசுவாசம் வைப்பவர்கள் தம்மைப் போலப் பேசுவார்கள் என்றும் கிரியை செய்வார்கள் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்கிறார். அவரில் விசுவாசம் வைப்பவர்கள் அவரை விட வல்லமையான காரியங்களைச் செய்வார்கள் என்ற வாக்குத்தத்தத்தையும் அவர்களால் புரிந்துகொள்ளமுடியாது.

இந்தக் கிரியைகள் தரத்தில் அல்ல, அளவில் அதிகமாக இருக்கும் என்பதே இதன் அர்த்தமாகும். பின்னர் அவர் இந்த உரையாடலில் தாம் அந்தப் பதினொருவரிடம் உலகத்தை ஆதாயம் செய்யும் தமது பணியை விட்டுவிட்டுப் போவது அவர்களுக்குப் பிரயோஜனமாக இருக்கும் என்று கூறுகிறார் (16:7). பின்னர் அவர் திராட்சச் செடி உருவகத்தின் மூலம் எடுத்துக்காட்டாகக் காண்பிக்கப்போகும் இந்த சிறப்பான இயல்புகளை அவர்கள் புரிந்துகொண்டு அனுபவிப்பார்களானால், அது தேவையான புதிய ஒழுங்காக இருக்கும் என்பதுவும், அதன் மூலம் ஒரே சமயத்தில் பலர் உலகெங்கும் சென்று இந்தக் காரியங்களை செயல்படுத்த முடியும் என்பதுமே இயேசுவானவர் கூறிய இந்த வார்த்தைகளின் அர்த்தமாகும்.

கிறிஸ்து ஒரே வேளையில் எல்லா இடத்திலும் இருக்கக்கூடிய தெய்வீகப் பண்புகளிலிருந்து தம்மை வெறுமையாக்கினார் என்று பவுல் அப்போஸ்தலன்

எழுதியிருக்கிறார் (பிலி. 2:7). இயேசுவானவரின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் வியக்கவைக்கும் பரிமாணம் என்னவென்றால், அவர் வானொலி, தொலைக்காட்சி, நூல்களை எழுதுதல், கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துதல், செல்போன்களைப் பயன்படுத்துதல் இவைகள் எதுவும் இல்லாமலேயே முழு உலகத்திலும் தாக்கம் ஏற்படுத்தினார்; அவர் தமது வாழ்நாள் முழுவதிலும் சில நூறு கிலோமீட்டர்களுக்கு அப்பால் பயணம் செய்யவில்லை. இயேசுவானவர் இந்த வார்த்தைகளைக் கூறியபோது, இந்த மனிதர்கள் விரைவிலேயே தமது ''சரீரமாக'' இருப்பார்கள் என்பதையும், அவர்களிலும் அவர்கள் மூலமாகவும் தாம் உலகெங்கும் பிரசன்னமாக இருக்கமுடியும் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

இயேசுவானவர் அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சி கொடுப்பதில் தமது மூன்றாண்டுகாலக் குறுகிய வாழ்க்கையை முதலீடு செய்தார். நான் ''முதல் கிறிஸ்தவ இளைப்பாறுதல் முகாம்'' என்று குறிப்பிடும் பிரசங்கத்தில் அவர்களுக்கு அறைகூவல் விடுத்தார். அதன்பிறகு, தம்மால் ''அனுப்பப்படுகிறவர்களாக'' இருக்கும்படி அவர் தமது அப்போஸ்தலர்களைத் தெரிந்துகொண்டார். இன்று நாம் ''அருட்பணியாளர்'' என்று குறிப்பிடும் சொல்லுக்கும் இதற்குமுள்ள அர்த்தம் ஒன்றாகவே இருக்கிறது. இயேசுவானவரின் அந்தப் பிரசங்கம் மூன்று அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது ''மலைப் பிரசங்கம்'' என்று அழைக்கப்படுகிறது (மத்தேயு 5-7).

அவரது மூன்றாண்டு காலப்பொது ஊழியம் முழுவதிலும் அவர்கள் அவரோடு இருந்தார்கள். அவருடைய போதனைகள் அனைத்தையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவருடைய அற்புதங்கள் எல்லாவற்றையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள். சமயத் தலைவர்களுக்கு விரோதமான உரையாடல்களையும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களோடு இயேசுவானவரின் உரையாடல்கள் முழுவதையும் அவர்களால் கேட்க முடியாவிட்டாலும், அவைகளின் பின்னணிகளையும், விளைவுகளையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள்.

இவர்களில் சிலர் இயேசுவானவரைச் சந்தித்தபோது, தாம் வசிக்கும் இடத்துக்கு வந்து பார்க்கும்படி அவர் அவர்களுக்கு அறைகூவல் விடுப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு வேதாகம மொழிபெயர்ப்பில், அவர் தமது சீஷர்களுக்குப் பிரதான கட்டளைக் கொடுத்தபோது, அவர்கள் கவனிக்கும்படி தாம் கட்டளையிட்ட அனைத்தையும் போதித்து சகல ஜாதியாரையும் சீஷராக்குங்கள் என்று அவர் கூறியதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது (மத். 28:18-20). அவர்கள் அவரோடு கூட வசித்திருக்கிறார்கள். இந்த மூன்றாண்டும் அவர் எப்படி வாழ்ந்தார் என்பதைக் கண்டிருக்கிறார்கள்.

இந்த மனிதர்களோடு இயேசுவானவர் மூன்று காரியங்களைச் செய்தார் என்று ஒருவர் கூறியிருக்கிறார்: அவர் அவர்களுக்குப் போதித்தார், அவர் அவர்களுக்குக் காட்டினார், பயிற்சியளித்து ஊழிய அனுபவத்துக்காக அவர்களை அனுப்பினார். இப்போது முழு உலகத்தையும் ஆதாயப்படுத்தும்படி அவர் எப்படித் தமது சீஷர்களுக்குக் கட்டளை கொடுத்து அவர்களை அனுப்பினார் என்பதுபற்றி யோவான் கூறுவதை நாம் பார்ப்போம்.

கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக வந்தன என்று யோவான் தனது முன்னுரையில் எழுதியபோது, சத்தியம் மோசேயின் மூலமாகவும் இயேசுவின் மூலமாகவும் வந்தது என்பதே அவர் கூறியதின் அர்த்தமாகும். ஆனால் இயேசுவானவர் சத்தியத்தோடுகூட வந்தார்; அந்தச் சத்தியத்தின்படி செயல்பட்டு வாழத்தேவையான கிருபையோடு அதைப் போதித்தார். அதாவது, தேவனுடைய கிருபையினால் நம்மைக் காக்கமுடியாத இடத்துக்குத் தேவனுடைய சித்தம் நம்மை ஒருபோதும் கொண்டு செல்லாது. மேலும் இயேசுவானவர் ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிவதற்கான கிருபையைக் கொடுக்காமல், அந்தக் கட்டளையைக் கொடுக்கமாட்டார்.

இயேசுவானவர் பிலிப்புக்கும் யூதாவுக்கும் பதிலளிக்கும்போது, உலகத்தைத் தமக்காக ஆதாயப்படுத்திக்கொடுத்த இயக்காற்றலைக் குறித்து விவரிக்கிறார். அவர் இந்த அப்போஸ்தலர்களுக்குக் கட்டளை கொடுத்து ஐந்தாறு ஆண்டுகளுக்குள்ளாக ரோம் உலகம் முழுவதும் இயேசுகிறிஸ்துவை அறிந்து, அவரை விசுவாசிக்கத் துவங்கியது.

பதினாறாம் அதிகாரத்தில் இந்த ஒழுங்கு ''பிரயோஜனமானது'' அல்லது அத்தியாவசியமானது என்று அவர் கூறுவதை நாம் பார்க்கிறோம். இயேசுவானவர் இவர்களுக்குப் பதிலளிப்பதை இவ்வாறு சுருக்கிக்கூறலாம்: ''இந்தச் சரீரத்தை நான் விட்டுச்செல்வது பிரயோஜனமாயிருக்கும். ஏனென்றால், நான் இந்தச் சரீரத்தை விட்டுவிடும்போது, உங்களில் ஒருவர் எந்த இடத்தில் இருந்தாலும், அந்த இடத்தில் நானும் இருப்பேன்.''

இதற்கு அர்த்தம் என்னவென்றால், நீங்கள் அவரோடு கூட ஐக்கியமாகி, அவர் உங்களிலும் உங்கள் மூலமாகவும் கிரியைசெய்யும் போது, ஒரு நாளில் ஊழியத்தை நீங்கள் முடித்து, களைப்போடு படுக்கையில் சாய்ந்தாலும், உலகத்தின் மறுபக்கத்தில் உங்கள் சகோதர சகோதரிகள் படுக்கையைவிட்டு எழுந்து கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வதைத் துவங்கியிருப்பார்கள். உலகெங்கிலும் அவருக்கு ஊழியம் செய்யாத ஒரு கணம் கூட இருக்காது. அவர் தமது சபையிலும் சபை மூலமாகவும் தம்மை வெளிப்படுத்தாத வேளையும் இருக்காது.

இது இயக்காற்றல் கொண்ட போதனையாகும், இந்தப் போதனையோடு தொடர்பாக அவர் என் நாமத்தினால் நீங்கள் பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் செய்வார் என்ற வாக்குத் தத்தத்தையும் கொடுக்கிறார்.

நாம் விரும்பிய எதையும் நம்மால் பெறமுடியும் என்பது இதற்கு அர்த்தமல்ல. நாம் ஜெபிக்கும்போது சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். நாம் ''அவருடைய நாமத்தில்'' ஜெபிக்கவேண்டும்; அதாவது, குமாரனால் பிதாவுக்கு மகிமையைக் கொண்டுவரக்கூடிய வழியில் நாம் அதைக் கேட்க வேண்டும். அவருடைய நாமத்தில் கேட்பது என்றால் அவருடைய இடத்திலிருந்து கேட்பதாகும் அல்லது ''இயேசுவானவர் எதைக் கேட்பார்?'' என்ற கேள்வியைக் கேட்பதாகும். நாம் தேவனை நேசித்து, அவருடைய நோக்கங்களுக்கேற்றபடி அழைக்கப்பட்டிருப்போமானால், ''சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார் (ரோமர் 8:28). இந்த வார்த்தைகளை நாம் வாசிக்கும்போது ''யாருடைய நன்மைக்கு - நமக்கா அல்லது தேவனுடைய நன்மைக்கா?'' என்ற கேள்வியை நமக்கு நாமே கேட்டுக்கொள்ள வேண்டும்.

யோவான் புதிய ஏற்பாட்டின் முடிவுக்கு அருகிலிருக்கும் சிறிய நிருபத்தில் நாம் ஜெபிக்கும்போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகளை வலியுறுத்துகிறார்; நாம் தேவனுடைய சித்தத்தின்படி கேட்கவேண்டும் (1 யோவான் 5:14). கிறிஸ்துவின் நாமத்தில் கேட்பது என்றால், கிறிஸ்து யார் என்பதின் சாராம்சத்திற்குப் பொருத்தமான வகையில், பிதாவை மகிமைப்படுத்தக் கூடியதைக் கேட்க வேண்டும். இப்படி நாம் எதைக் கேட்டாலும் அவர் அதைச் செய்வார்.

இப்போது அவர் இந்த சிறப்பான இயல்புகளுக்கான திறவுகோலைக் குறித்து அவர்களுக்குப் போதிக்கிறார்: ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும் படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; நான் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன். இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.

''நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள். என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு

அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன் என்றார்''.

பிலிப்புவின் கேள்விக்கு அவருடைய இந்த நீளமான பதில் யூதா என்ற மற்றொரு அப்போஸ்தலனில் கேள்வியை உருவாக்கும் வகையில் அமைந்திருப்பதுபோலத் தோன்றுகிறது. அந்த வேளையில் யூதாஸ் அல்லது யூதா என்பது மிகவும் பொதுவான ஒரு பெயராக இருந்தது. யூதா என்ற அப்போஸ்தலனே இந்தக் கேள்வியைக் கேட்கிறார்: ''ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போகிற காரணமென்ன?'' இயேசுவானவர் இதற்கு மறுமொழியாக ''ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது'' என்று கூறுகிறார் (23-24).

யூதாவின் கேள்வி செயல்பூர்வமான அருமையான கேள்வியாக இருக்கிறது. தாம் மரிக்கப்போவதாக இயேசுவானவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்போது அவர்களால் வரமுடியாத ஒரு இடத்துக்குத் தாம் போவதாக அவர் கூறியதற்கு அதுவே அர்த்தமாகும். அவர்களால் வரமுடியாத இந்த இடத்துக்கு அவர் சென்ற பிறகு, அவர்கள் தம்மோடு இன்னும் நெருக்கமாக உறவுகொண்டிருப்பார்கள் என்றும் அவர் கூறினார். யூதாவின் கேள்வியின் சாராம்சம் இதுவே: ''எங்களைச் சுற்றியுள்ள அவிசுவாசிகள் நாங்கள் உம்மோடு நெருக்கமான உறவைப் பெற்றிருக்கிறோம் என்ற உண்மையை அறியாதிருக்கும்போது, நீர் எப்படி எங்களோடு இந்த நெருக்கமான உறவைப் பெற்றிருக்கப்போகிறீர்?''

அவர் யூதாவின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது, ஏற்கெனவே பிலிப்புவின் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாகத் தாம் கூறியதை மறுபடியுமாகக் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள்; அப்போது அவர் ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்'' என்று கூறியிருந்தார் (15). பிலிப்பு மற்றும் யூதாவின் கேள்விகளுக்கு இயேசுவானவர் பதிலளித்தபோது, ''விசுவாசம் என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு அவர் மற்றுமொரு பதிலைக் கொடுக்கிறார். விசுவாசம் கீழப்படிதலோடு தொடர்புடையது என்று அவர் போதிக்கிறார்.

உலகத்தில் இயேசுவுக்குச் சகோதரனாக இருந்த யாக்கோபு தனது சகோதரனின் போதனையை ஒப்புக்கொள்கிறார். ''தனிப்பட்ட விசுவாசம்'' என்று எதுவுமே

கிடையாது என்றும் விசுவாசம் உண்மையான விசுவாசத்தை உறுதிப்படுத்தும் வகையில் எப்போதுமே நிரூபணமான கிரியைகளோடுதான் வருகிறது என்றும் யாக்கோபு போதிக்கிறார். யாக்கோபு கூறுகிறபடி விசுவாசம் எப்போதுமே கிரியைகளோடு அல்லது கீழ்ப்படிதலோடு வெளிப்பட்டு, அதை உறுதிப்படுத்தும் (யாக்கோபு 2:14-24). ''விசுவாசம் மட்டுமே நம்மை இரட்சிக்கும்; ஆனால் விசுவாசம் மட்டுமே என்று ஒரு காரியம் இல்லை'' என்பதே யாக்கோபு நமக்குப் போதிப்பதின் சாராம்சமாகும். ஜெர்மனியைச் சேர்ந்த லுத்தரன் போதகரான டயட்ரிச் போன்ஹோபர் ''விசுவாசிக்கிறவன் மட்டுமே கீழ்ப்படிகிறான், கீழ்ப்படிகிறவன் மட்டுமே விசுவாசிக்கிறான்'' என்று எழுதியிருக்கிறார்.

கீழ்ப்படிதலே மெய்யான ஒரு சீஷன் இயேசுவுக்கான தனது அன்பை வெளிப்படுத்தும் வழி என்று கிறிஸ்து போதிக்கிறார். அதாவது, அவர் ''நீ மெய்யாகவே என்னை நேசிப்பாயானால், எனது கட்டளைக்குக் கீழ்ப்படிவதின் மூலம் உனது அன்பைச் செயல்படுத்தி உண்மையாக்கிக் காண்பிப்பாய்'' என்று கூறுகிறார் (15, 21).

பிலிப்புவின் கேள்விக்குப் பதிலளிக்கும்போது தாம் கூறிய (9-16) அதே காரியத்தையே இயேசுவானவர் இப்போது யூதாவுக்குப் பதிலளிக்கும்போதும் கூறுகிறார். பிலிப்புக்கு அவர் அளித்த பதிலை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களானால், எப்படி அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதும், அவருடைய வாக்குத்தத்தமும் ஒன்றோடொன்று ஒரு கால் புள்ளியால் (,) இணைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண்பீர்கள்: ''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது ... வேறொரு தேற்றவரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.'' ''நீ உன் பங்கைச் செய்வாயானால் நான் என் பங்கைச் செய்வேன்'' என்பதே இயேசுவானவர் பிலிப்பிடம் கூறியதின் சாராம்சமாகும். யூதாவுக்கு அவர் அளித்த பதிலிலும் இதே கொள்கை பின்பற்றப்படுவதைக் கவனியுங்கள்: கீழ்ப்படிதலானது, பிதா குமாரன் பரிசுத்த ஆவியோடு உறவுக்குள் வழிநடத்துகிறது. இயேசுவானவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறவர்களிடத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் வந்து அவனோடே வாசம் பண்ணுவார்கள் (23-26).

தேவன் நமது வாழ்க்கையில் ஒன்றைச் செய்ய விரும்பும்போது, எப்போதுமே நாணயத்தில் இரு பக்கங்கள் இருப்பதுபோல, தேவனுடைய பங்கும் நம்முடைய பங்கும் இருப்பதை நாம் காண்கிறோம். பிலிப்பு மற்றும் யூதாவின் கேள்விகளுக்கு மறுமொழியாக இயேசுவானவர் போதித்ததை நாம் தியானிக்கும்போது, நமக்கு நாமே ''மறுபடியும் பிறப்பதில் தேவனுடைய பங்கு என்ன, நம்முடைய பங்கு

என்ன? நாம் மறுபடியும் பிறக்கும் அந்த அற்புதமான காரியத்தில் நாம் ஒரு பங்கைச் செய்யவேண்டியிருக்கிறதா?'' இயேசுவான வரையும் யாக்கோபையும் பொருத்தவரையில் நாம் மறுபடியும் பிறக்கும்போது நிறைவேற்ற வேண்டிய ஒரு பங்கு இருக்கிறது. நமது பங்கை ஒரே வார்த்தையில் வெளிப்படுத்தலாம்: ''விசுவாசித்தல்.'' மறுபடியும் பிறப்பதில் நமது பங்கு மெய்யான விசுவாசமாகும்.

நாம் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று இயேசுவானவர் நிக்கொதேமு விடம் கூறியபோது, அவன் இரண்டு முறை ''எப்படி?'' என்று கேட்டான். இயேசுவானவரின் பதிலை ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால் ''விசுவாசித்தல்'' என்பதே பதிலாகும். நாம் விசுவாசிக்கிறோம், பிறகு தேவன் தமது பங்கைச் செய்கிறார், நாம் மறுபடியும் பிறக்கிறோம். தேவனுடைய பங்கு காற்றைப் போலப் புதிரானதாக இருக்கிறது. மூன்றாம் அதிகாரத்திலிருந்து நாம் மறுபடியும் பிறப்பதற்கு அதில் தேவனுடைய பங்கைப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லை என்பதைப் பார்த்தோம். சரீரப்பிரகாரமாகப் பிறப்பதற்கு நாம் பிறப்பியலைப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை அல்லவா? நமது பங்கை மட்டுமே நாம் புரிந்துகொள்வது போதுமானதாகும்; மறுபடியும் பிறப்பதில் விசுவாசிப்பதே நமது பங்காகும்.

இயேசுவானவர் தமது சீஷர்களுக்கு வரவிருக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய அற்புதமான உண்மையை அறிமுகம் செய்தபோது, பரிசுத்த ஆவியானவரோடு உறவுக்கு வழிநடத்தும் இயக்காற்றல் (dynamic) எது? நமது வாழ்க்கையில் ஆவியானவரின் ஊழியம் விடுவிக்கப்பட வேண்டுமானால், நாம் ''கீழ்ப்படிய'' வேண்டும். ''நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனை களைக் கைக்கொள்ளுங்கள். நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்'' (14:15, 23-26). தம்மை நேசித்து, அந்த அன்பை அவருக்குக் கீழ்ப்படிவதின் மூலம் செயல்பூர்வமாக்கி உறுதிப்படுத்துகிறவர்களுக்கு இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரை அருளுகிறார்.

பெந்தெகொஸ்தே நாளில், அனைத்து அற்புத அடையாளங்களும் நடந்துகொண்டிருந்த போது, பேதுரு, உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்து தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருப்பதாகக் கூறினார் (அப். 2:33; 5:32). கிறிஸ்து உண்மையாகவும், வல்லமையாகவும் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பதற்கு முன்பாக நாம் ''கீழ்ப்படிய'' வேண்டும் என்பதே முன் நிபந்தனையாக இருக்கிறது.

வரவிருக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய கருத்துப் படிவத்தை இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களுக்கு அறிமுகம் செய்த போது, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதற்கும், அவரோடு தொடர்புகொள்வதற்கும் கீழ்ப்படிதலே திறவுகோல் என்பதைத் தெளிவுபடுத்தினார். எனவே, அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டிருக்கிறார் என்று பேதுரு கூறுவதில் நாம் வியப்படையக் கூடாது.

நடபடிகள் நூலின் துவக்க அதிகாரங்களின்படி, பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அதை நிறைவேற்றும்படி சீஷர்களைப் பலப்படுத்துவதற்காகவே பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். இயேசுவானவர் முதலில் பிரதான கட்டளையைக் கொடுத்தபோது, அவர்கள் வல்லமையினால் தரிப்பிக்கப்படும் வரையில் காத்திருக்கும்படி கூறினார்; பெந்தெகொஸ்தே நாளில் இந்த வல்லமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது (அப். 1:8; 2:1, 4; 5:32). விசுவாசிகள் சந்தோஷமான அனுபவத்தைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படவில்லை. இயேசுவானவருடைய கட்டளைகளுக்கு, குறிப்பாக பிரதான கட்டளைக்கு, கீழ்ப்படியும்படி விசுவாசிகளைப் பலப்படுத்துவதற்காகவே அவர் கொடுக்கப்பட்டார்.

தாம் அவர்களை அநாதைகளைப்போலக் கைவிட விரும்பாதபடியால், தாம் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரைக் கொடுப்பதாகவும் இயேசுவானவர் மேலறையில் தமது சீஷர்களிடம் கூறினார். பிறகு புரிந்துகொள்ளக் கடினமான ஒரு வாக்குத்தத்தத்தை அவர் கொடுக்கிறார். யூதாவின் கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக இயேசுவானவர் கூறும் பதிலிலுள்ள இந்த வசனத்தைப் போன்ற வசனங்களிலிருந்து தேவன் மூன்று ஆள்தத்துவங்களாக இருக்கிறார் என்றும், இந்த ஆள்தத்துவங்களில் ஒவ்வொருவரும் தேவனே என்றும் முடிவுக்கு வரலாம். திரித்துவத்தின் இந்த மூன்று ஆள்தத்துவங்களும் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள்: பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன். பிலிப்பு மற்றும் யூதாவின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்படி இயேசுவானவர் கொடுக்கும் இந்தப் போதனையிலிருந்து நீங்களும் நானும் இயேசுவானவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியும்போது இந்த மூவரும் வந்து நமக்குள் வாசம் பண்ணுகிறார்கள் என்று அறிகிறோம்.

இயேசுவானவர் 14-ஆம் அதிகாரத்தில் கூறுவதின் சாராம்சம் இதுவே: ''நான் போகிறேன். ஆனால் நான் பிதாவானவரிடம் திரும்பிச் சென்ற பிறகு, நான் இந்த உலகத்துக்குரிய சரீரத்தை விட்டபிறகு, நீங்களும் நானும் முன்பைவிட நெருக்கமாக இருக்கப்போகிறோம். நான் என்னை உங்களுக்கு வெளிப்

படுத்துவேன். நான் ஜீவிக்கிற படியால் நீங்களும் ஜீவிப்பீர்கள். கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளாக நான் வாழ்ந்து வந்த இந்தச் சரீரத்தினால் நான் கட்டுப்படுத்தப்படாமல் இருக்கும்போது, இன்னுமதிகமாக நாம் நெருக்கமான வர்களாகவும் ஒன்றானவர்களாகவும் இருப்போம்.''

எவ்வாறு இயேசுவானவரின் இந்த வார்த்தைகள் யூதாவைக் கேள்வி கேட்கும்படி தூண்டின என்பதை நம்மால் புரிந்துகொள்ளமுடிகிறது. ''ஆண்டவரே, இந்த உறவை நாங்கள் எவ்வாறு பெறுவோம்? எங்களைச் சுற்றியுள்ள அவிசுவாசிகள் நம்முடைய உறவைக் குறித்து அறியாதபடி, நாங்கள் எப்படி உம்மோடு நெருக்கமான உறவைப் பெற முடியும்? எப்படி நீர் இதைச் செய்ய போகிறீர்?''

யூதாவின் கேள்விக்கு இயேசுவானவர் அளித்த பதிலை நாம் ஆழமாக ஆராய்ந்து பார்ப்போமானால், பரிசுத்த ஆவியானவரின் மூலமாகக் கிறிஸ்துவோடு கூட நெருக்கத்துக்கு வழிநடத்தும் இயக்காற்றல் எது என்பதைக் கண்டு கொள்வோம். அவர் கூறிய பதில் இதுவே: ''ஒருவன் என்னில் அன்பாயிருந் தால், அவன் என் போதனைக்குக் கீழ்ப்படிவான். அவன் என் போதனைக்குக் கீழ்ப்படியும்போது, என் பிதாவானவர் அவனை நேசிப்பார், நாங்கள் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம். என்னில் அன்பாயிராதவன் என் போதனைக்குக் கீழ்ப்படிய மாட்டான். நாங்கள் அவனோடு உறவை ஏற்படுத்திக்கொள்ள மாட்டோம்'' (23-26).

இந்த உறுதிப்பாட்டோடு அவர் திறமை மிகுந்த இந்தப் பதிலுக்கு முத்திரையிடுகிறார்: ''என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ள மாட்டான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது. நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' (24-26).

இந்த அப்போஸ்தலர்கள் தம்மிடம் கேட்ட ஐந்து கேள்விகளுக்கான பதிலை இயேசுவானவர் தொகுத்துக் கூறும்போது, கலக்கமடைந்திருந்த அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைக் கூறுகிறார்: ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.

நான் போவேன் என்றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே, நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார். இது நடக்கும்போது நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே இதை உங்களுக்குச் சொன்னேன்.''

அவருடைய ஆறுதலளிக்கும் சமாதான வார்த்தைகளைத் தொடர்ந்து, சில கடினமான உண்மைகளைக் குறிப்பிடுகிறார்: ''இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும்.

''எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்'' (27-31).

இந்த அப்போஸ்தலர்கள் தம்மிடம் கேட்ட கேள்விகளுக்குப் பதிலாக அவர் ஆழமான சத்தியத்தைப் போதித்திருக்கிறார். இரண்டாவது முறையாக, அவர்களுடைய இருதயம் கலங்காதிருப்பதாக என்று கூறி அவர்களை ஆறுதல்படுத்துகிறார். இயேசுவானவரைக் கொல்லும்படி ரோமரைத் தூண்டும்படி, யூதர்கள் தந்திரமான வழிகளைத் திட்டமிட்டு வருகிறார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தபடியால் பயங்கரமாகப் பயந்துபோயிருந்தார்கள். இயேசுவானவர் தங்களுக்குக் கொடுத்த வாசகங்களின் மூலமாகத் தாங்களும் தங்கள் ஆண்டவரோடு கூட மரிக்கப் போகிறோம் என்று அவர்கள் நம்பினார்கள். பன்னிரெண்டாம் அதிகாரத்தில் இயேசுவானவர் அவர்களிடம் தாம் கனிகொடுக்கும் படியாக நிலத்தில் விழுந்து மரிக்கப்போவதாகக் கூறியிருந்தார்; தமது சீஷர்களும் இதைச் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டுமென்றும் அவர் சொல்லியிருந்தார். இறுதியில், அவர்களில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரும் தங்கள் ஆண்டவரைப் போலவே இரத்தச்சாட்சியாக மரிக்கப் போகிறார்கள்.

பாரம்பரியச் செய்தியின்படி, இந்தச் சுவிசேஷத்தின் ஆசிரியர் கொதிக்கும் எண்ணெயில் போடப்பட்டார், ஆனாலும் அவர் மரிக்கவில்லை. அவர் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். அதிலிருந்து தப்பிய அவர் முதிர் வயது வரையில் வாழ்ந்தார். இந்த சுவிசேஷத்தை எழுதினார். மத்தேயு, மாற்கு, லூக்கா சுவிசேஷங்கள் எழுதப்பட்டு, பல ஆண்டுகளுக்குப் பின்னரே இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது. இப்போது இயேசுவானவர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட மற்றப் பத்து

அப்போஸ்தலர்களும் இரத்தச்சாட்சிகளாக மரித்தார்கள். இயேசுவானவர் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறியபோது அதுவே அப்போது நடக்கப் போகிறது என்று அவர்கள் நம்பியிருக்கலாம்.

அவர்களுடைய கேள்விகளுக்குரிய தமது பதிலைக் கூறி முடிக்கும்போது, இயேசுவானவரின் இறுதி வார்த்தைகளில் ஒரு வாக்கியத்தை நான் காண்கிறேன். இது கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து பல காலம் அவருக்கு ஊழியம் செய்யும் அன்புக்குரிய ஒருவரை இழந்துபோகிறவர்களுக்கு அதிகமான ஆறுதலாக இருப்பதை நான் கண்டிருக்கிறேன். அன்புக்குரிய ஒருவர் மரித்துப்போகும்போது, நான் பலமுறை கல்லறையின் அருகே இந்த வசனத்தை வாசித்திருக்கிறேன்: ''நீங்கள் என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்திற்குப் போகிறே னென்று நான் சொன்னதைக் குறித்துச் சந்தோஷப்படுவீர்கள்'' (28).

இயேசுவானவரின் அடக்க ஆராதனைப் பிரசங்கம்

இந்த அதிகாரத்தைக் குறித்துச் சுருக்கமாகக் கூறவேண்டுமானால், இயேசுவானவர் தாம் விரைவில் மரிக்கப்போவதை அறிந்திருந்தார், அவரே தமது அடக்க ஆராதனைப் பிரசங்கத்தைச் செய்தார் என்று கூறலாம். இன்று பல நவீன சாதனங்கள் வந்திருக்கிறபடியால், ஒரு போதகர் தான் மரித்த பிறகு தனது சபையில் கொடுக்கப்பட வேண்டிய அடக்க ஆராதனைப் பிரசங்கத்தைத் தானே பதிவு செய்து வைத்திருக்க முடியும் என்பதைக் குறித்து நான் பலமுறை சிந்தித்திருக்கிறேன்.

இயேசுவானவரின் இந்தச் செய்தியை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்: ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. ஏனென்றால் ஒரு இடம் இருக்கிறது. நான் அந்த இடத்துக்குச் சென்று உங்களுக்காக அந்த இடத்தை ஆயத்தம் செய்வேன். பிறகு நான் மறுபடியுமாக வந்து உங்களை அந்த இடத்துக்குக் கூட்டிச் செல்வேன். நாம் நித்தியத்துக்குமாக அங்கே இருக்கலாம்!'' எபேசியருக்குத் தான் எழுதிய நிருபத்தில் பவுல் பரலோகம் என்பது இப்போது நாம் ஜீவிக்கக் கூடிய ஆவிக்குரிய பரிமாணம் என்று கூறினாலும், பரலோகம் என்பது நாம் ஆண்டவரோடு கூட நித்தியமாக வாழும் இடமுமாகும் என்றும் எழுதியிருக்கிறார் (1 தெச. 4:13-18).

தமது பிதாவானவரின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் இருக்கின்றன என்ற நற்செய்தியை இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களிடம் கூறியபோது, அதை இவ்வாறு விளக்கலாம்: 'பிரபஞ்சத்தில் வசிப்பதற்குப் பல இடங்கள் இருக்கின்றன. பரலோகம் ஒரு இடமாகும். விசுவாசிகளாகிய நாம் அங்கே

செல்லப் போகிறோம். அங்கே நாம் ஆண்டவரோடுகூட நித்தியமாக வாழ்வோம். அந்த இடத்தை நாம் விசுவாசிக்கிற படியால் நமது இருதயம் கலக்கமடைய இடம் கொடுக்கக் கூடாது.''

''ஒரு நபர் இருக்கிறபடியால், உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக'' என்பது இந்த அடக்க ஆராதனைப் பிரசங்கத்தின் இரண்டாவது குறிப்பாகும். பரிசுத்த ஆவியானவரின் வருகை, மேலறையிலிருந்த இந்த மனிதர்களுக்கு இயேசுவானவர் வாக்குத்தத்தம் பண்ணிய ஆறுதலின் மிகப்பெரிய ஆதாரமாக இருக்கிறார். ''தேற்றரவாளன்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள மூல கிரேக்கச் சொல் ''பாராக்கிளீட்'' (Paraclete) என்பதாகும். ''நமக்கு உதவிசெய்யும் நோக்கத்தோடு நம்மோடு கூட வந்து, நம்மோடு தன்னைச் சேர்த்துக் கொள்பவர்'' என்பது இதற்கு அர்த்தமாகும்.

பதினாறாம் அதிகாரத்தில் இயேசுவானவர் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இன்னுமதிகமாகக் கூறப்போகிறார். இந்த அதிகாரத்தில், ஆண்டவரால் ''தேற்றரவாளன்'' என்று விவரிக்கப்படும் நபரே அவர்கள் இருதயம் கலங்கக் கூடாது என்பதற்கு இரண்டாவது காரணமாக இருக்கிறார். இயேசுவானவர் அவர்களை விட்டுச் செல்லப் போகிறவராக, மரிக்கப்போகிறவராக இருந்தாலும், ''ஒரு நபர் இருக்கிறார்'' என்கிறபடியால் அவர்கள் கலங்கக் கூடாது.

அடக்க ஆராதனைப் பிரசங்கத்தில் (Funeral Sermon) மூன்றாவது குறிப்பு ''உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, ஏனென்றால் ஒரு சமாதானம் இருக்கிறது'' என்பதாகும். தேவனிலும் இயேசுவானவரிலும் விசுவாசம் வைக்கும் சீஷனுக்கு ஒரு இடம் இருக்கிறது, அங்கே நித்தியமாக ஆண்டவரோடு இருக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையில் அவிக்க முடியாத ஆக்கப்பூர்வமான துடிப்பைப் பெற வேண்டும். பரிசுத்த ஆவியானவர் என்ற நபர் இருக்கிறார் என்ற இயேசுவானவரின் வாக்குத்தத்தத்தை அவன் விசுவாசிக்கிறான். தேற்றரவாள னாகிய அவர் அவனோடு கூட வருகிறார், அவனுக்கு உதவி ஆறுதல் கொடுக்கும் படியாகத் தம்மை அவனோடு சேர்த்துக் கொள்கிறார். ஏற்கெனவே மேலே நான் மேற்கோளாகக் குறிப்பிட்டுள்ள வசனங்களில், இயேசுவானவர் அந்த இடத்திலும் அந்த நபரிலும் விசுவாசம் வைப்பவர்கள் மட்டுமே தாம் கூறிய சமாதானத்தை அனுபவிப்பார்கள் என்று இயேசுவானவர் வாக்குத்தத்தம் அருளுகிறார் (27-31).

அவர்கள் இயேசுவானவரை விசுவாசித்து, பரிசுத்த ஆவியானவரோடு உறவை அனுபவிக்கும்போது, ''எல்லாப் புத்திக்கும் மேலாக தேவசமாதானம்'' என்று பவுல் குறிப்பிடும் (பிலி. 4:6-10) சமாதானத்தையும் அனுபவிப்பார்கள்.

இது கிறிஸ்து கொடுக்கும் சமாதானமாக இருக்கிறது; இது ஆவியின் கனியாக விவரிக்கப் பட்டிருக்கிறது (கலா. 5:22-23). சீஷர்களின் சூழ்நிலைகள் விரோதமாக இருக்கும்போது, எவரும் அவர்கள் சமாதானத்தைப் பெறுவார்கள் என்று எதிர்பார்த்திராதபோது, இது பரிசுத்த ஆவியானவரின் மூலமாக அவர்களுக்கு அவரால் கொடுக்கப்படும் சமாதானமாக இருக்கிறது.

யோவானைத் தவிர மற்ற இந்த அப்போஸ்தலர்கள் கொடுமையான வழிகளில் இரத்தச்சாட்சிகளாக மரித்தபோது, அவர்கள் இயேசுவானவர் மேல் அறையில் அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்த சமாதானத்தோடு மரித்தார்கள் என்று நாம் நிச்சயமாக அறியலாம். இயேசுவானவர் அப்போஸ்தலருக்கு இந்த வாக்குத்தத்ததைக் கொடுத்த போது அவர் உலகப்பிரகாரமான சமாதானத்தைக் குறிப்பிடவில்லை. அவர் நமக்கு உள்ளான சமாதானத்தைக் கொடுப்பதாகவே வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். இந்தச் சமாதானத்துக்காகவே மனுக்குலம் முழுவதும் ஏங்குகிறது. இயேசுவானவர் உண்மையில் உலகப் பிரகாரமான சமாதானத்துக்கு எதிர்மறையானதைப் போதித்தார். அவர் இந்த இளைப்பாறுதலின் பின்னணியை விட்டுச் செல்லுமுன்பாக அவர்களிடம் ‘‘என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்’’ என்றார். (16:33; 1 யோவான் 5:4).

அத்தியாயம் இரண்டு

‘‘நேர்த்தியான உருவகம்’’

யோவான் சுவிசேஷத்தின் பதினான்காம் அதிகாரத்தின் இறுதி வார்த்தைகள் இயேசுவானவரும் அவருடைய அப்போஸ்தலர்களும் மேல் அறையை விட்டு வெளியேறவிருந்தார்கள் என்று கூறுகின்றன. அவர்கள் ஒரு தோட்டத்துக்குச் செல்லுகிறார்கள். அங்கே மேலறையில் இயேசுவானவர் அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த போதனைக்கு எடுத்துக்காட்டாகவும், அதைச் செயல்படுத்தும் விதமாகவும் ஒரு உருவகத்தை எடுத்துக் கூறுகிறார். பிதாவானவரும் அவரும் ஒன்றாயிருக்கிறபடியால், பிதாவின் வார்த்தையும் கிரியையும் உலகத்தில் இயேசுவானவரின் மூலமாகப் பேசப்பட்டன, செய்யப்பட்டன என்பதே இதுவரை இந்தப் பிரசங்கத்தின் மையமாக இருந்து வந்திருக்கிறது. அவர் பேசி அவர்கள் கேட்டவை அனைத்தும், அவர் செய்து அவர்கள் பார்த்தவை அனைத்தும் அவர் தமது பிதாவோடு பரிபூரண ஒத்திசைவில் இருந்தார் என்பதற்கான மகிமையான உண்மைநிலையாக இருக்கின்றன.

இப்போது அவர் இந்த அப்போஸ்தலர்களுக்கு ஒரு எளிமையான ஆனால் பொருள் பொதிந்த உருவகத்தைக் கொடுக்கிறார். அவர் கொடிகளைக் கொண்ட ஒரு திராட்சச் செடியை எடுத்துக் காட்டுகிறார்; அதில் கனிகள் நிறைந்திருக்கின்றன. ‘‘இந்தக் கொடிகள் இந்தச் செடியோடு இசைந்திருப்பதால் அபரிமிதமான கனிகளைக் கொடுக் கின்றன. நீங்கள் என்னோடு இசைவாயிருந்தால் நீங்களும் அதிகக் கனி கொடுப்பீர்கள்’’ என்று அவர் கூறினார்.

அவர் கனிகொடுப்பதின் மூன்று கட்டங்களை விவரிக்கிறார் - கனி கொடுக்காத ஒன்று, கனிகொடுக்கும் ஒன்று, அதிகமாகக் கனிகொடுக்கும் ஒன்று. இந்த உருவகத்தில் நான்கு அடையாளக் குறிகள் இருக்கின்றன, அவை ஆழமான அர்த்தத்தைக் கொண்டிருக்கின்றன: திராட்சச் செடி, கொடிகள், கனி, தோட்டக்காரன். இயேசுவானவர் இந்த உருவகத்துக்கு அர்த்தம் கூறிப்பொருத்திக் காட்டும்போது, அவரே திராட்சச் செடியாக இருக்கிறார். அப்போஸ்தலர்கள் கொடிகளாகவும், அவருடைய வார்த்தை பேசப்படும் அற்புதமான கனியாகவும் காணப்படுகின்றன. பூமியில் இவர்களின் மூலமாக அவருடைய ராஜ்யம்/சபையின் பணிகள் செய்யப்படுகின்றன. இந்த உருவகத்தில் தோட்டக்காரன் தேவனாக இருக்கிறார்.

இந்த நேர்த்தியான உருவகத்துக்குப் பொருள் கூறுவதிலும் பொருத்திக் காட்டுவதிலும், இரண்டு அடிப்படைக் கருத்துரைகள் தெளிவாகத் தெரிகின்றன:

அவரில்லாமல் இந்த அப்போஸ்தலர்களாலும், சீஷர்களாலும் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களில்லாமல் அவரும் எதைச் செய்யவும் சித்தம் கொண்டிருக்க வில்லை. இந்த உருவகத்தில் கனிகள் செடியில் உருவாகுவதில்லை என்பதைக் கவனியுங்கள். ஜீவனை அளிக்கும் சக்தி செடியிலிருந்து கொடிகளில் பாயும்போதுதான் கொடிகளில் கனிகள் உருவாகின்றன. இந்த உருவகத்தில் இயேசுவானவர் ‘‘கொடிகளைத் தேடும் திராட்சச் செடியாக’’ இருக்கிறார்.

அவர் இந்த உருவகத்தை அவர்களுக்குப் போதித்து, அதற்கு அர்த்தம் கூறி, அதைப் பொருத்திக் காட்டியபிறகு, ஒரு போதனையைக் கொடுக்கிறார். அதை நாம் ‘‘நீங்கள் ஏன் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கு எட்டுக் காரணங்கள்’’ என்று குறிப்பிடலாம். யோவான் சுவிசேஷத்தின் பதினைந்தாம் அதிகாரத்தில் இந்த முதல் பதினாறு வசங்களையும் வாசிக்கும்போது, இந்த எட்டுக் காரணங்களையும் கண்டு பிடிக்க முடிகிறதா என்று பாருங்கள்.

‘‘நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத் தோட்டக்காரர். என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப் போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள். என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திரா விட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்.

‘‘நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும நான் அவனிலும நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. ஒருவன் என்னில் நிலைத்திரா விட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைக்ள எரிந்து போம். நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.

‘‘பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறுதபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண் டிருந்தால்,

என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள். என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

‘‘நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள். இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.

‘‘நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக் கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்’’ (15:1-16).

ஒருவகையில் அப்போஸ்தலர்கள் இயேசுவானவரின் கீழ் மூன்றாண்டு கால இறையியல் பள்ளிக் கல்வியைப் பெற்றார்கள். நான் ‘‘இறுதியான கிறிஸ்தவ இளைப்பாறுதல் முகாம்’’ என்று அழைக்கும இந்தக் காலகட்டம் அவர்கள் பட்டம் பெறும் வேளை என்றும் அழைக்கப் படலாம். அப்போது இயேசு வானவர் கொடுக்கும் செய்தி பட்டமளிப்பு உரையாக இருக்கிறது. அவருடைய துடிப்பான பட்டமளிப்பு உரை அவர்களுக்கு அறைகூவல்விடுக்கிறது. அவர்கள் கனிகொடுக்க வேண்டும் என்பதற்குக் குறைந்தபட்சமாக எட்டுக் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதல் காரணம்

முதலாவதாக, கனிகொடுக்காத எவரும் அவருக்கு உண்மையான சீஷராக இருக்க முடியாது என்கிறபடியால், அவர்கள் கனிகொடுக்கவேண்டும் என்று இயேசுவானவர் கூறுகிறார் (2, 6). அவர்கள் அவரில் கனிகொடுக்காத கொடியாக இருப்பார்களானால், பிதாவானவர் அவர்களை வெட்டி எறிந்துவிடுவார் என்றே அவர் கூறுகிறார். பிறகு அந்தக் கொடி மனிதர் அதைச் சேகரித்து நெருப்பில் போடும் வரையில் தரையிலேயே கிடக்கும். இயேசுவானவர் கூறுவதின் சாராம்சம் இதுவே: ‘‘கனிகொடுக்காமல் என்னிலிருக்கும் கொடியைப் பிதாவாகிய தோட்டக்காரரால் சகித்துக்கொள்ள முடியாது.’’

தாம் மூன்றாண்டுகளாகப் பயிற்சிகொடுத்து வந்த இவர்களுக்கு இயேசுவானவர் தமது இறுதி வார்த்தைகளைக் கூறியபோது, அவர்கள் ஏன் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கு அவர் கூறிய முதல் காரணம் தெளிவானதும், இயக்காற்றல் மிகுந்ததுமான அறிவிப்பாக இருக்கிறது: ''நீங்கள் எனக்குச் சீஷராக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் இப்படித்தான் காட்டுகிறீர்கள்'' (8). கனிகொடுக்காத இயேசுவின் சீஷர் எவரும் இருக்கமுடியாது என்பதே இது நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடமாகும். ''இயேசுவானவரின் கடினமான வார்த்தைகள்'' எவை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு என்று ஒரு அறிஞர் கூறியிருக்கிறார்.

இருபது நூற்றாண்டுகளாக மானிட வரலாற்றை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து வந்திருக்கிறார்கள்: இயேசுவானவர் வாழந்ததற்கு முன்னால், இயேசுவானவர் வாழ்ந்ததற்குப் பின்னால். ஒருவர் முப்பத்துமூன்று ஆண்டுகளே வாழ்ந்து, உலகம் அவருடைய பிறப்பை ஒரு வரலாற்றுபூர்வமான ஒரு காலக்கோடாகக் கருதுமானால், அவர் உலகத்தில் அற்புதமான தாக்கத்தை விளைவித்திருக்கிறார் என்றே அர்த்தமாகும். அதாவது, இயேசுவானவர் கனிகொடுக்கும் வாழ்க்கை வாழ்ந்தார் என்பதே சரியாகும். எனவே தான் அவருடைய சீஷன் என்று உரிமைகொண்டாடும் எவரும் கனிகொடுப்பதின் மூலம் அதை நிரூபித்தாக வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவின் சீஷர் என்று உரிமைகொண்டாடி விட்டு, கனிகொடாமல் இருப்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

இரண்டாம் காரணம்

இதே வசனத்தில் தாம் அதிகமாக முதலீடு செய்துள்ள இந்த மனிதர்கள் ஏன் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கான இரண்டாவது காரணத்தை இயேசுவானவர் கூறுகிறார்: அவர்கள் கனிகொடுப்பதின் மூலம் பிதாவை மகிமைப்படுத்துகிறபடியால், கனிகொடுக்கவேண்டும் (8). இயேசுவானவர் எவ்வாறு பிதாவை மகிமைப்படுத்தினார்? அவர் பிதாவானவரிடம் ஜெபித்தபோது இந்தக் கேள்விக்கான பதிலைக் கூறினார்: ''பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்'' (17:4). இந்த அப்போஸ்தலர்கள் எவ்வாறு தேவனை மகிமைப்படுத்த முடியும்? அவர்கள் செய்யும்படி இயேசுவானவர் கொடுக்கும் பணியைச் செய்துமுடிப்பதின் மூலமாக மட்டுமே! நமக்குரிய செய்தி என்னவென்றால், நாம் கனிகொடுக்கும்போது தேவனை மகிமைப்படுத்து கிறபடியால் நாம் கனிகொடுக்க வேண்டும்.

மூன்றாம் மற்றும் நான்காம் காரணங்கள்

அவர்களும் அவருடைய சீஷர்களாக நாமும் ஏன் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கான மூன்றாம் மற்றும் நான்காம் காரணங்களை இயேசுவானவர் இவ்வாறு எடுத்துக்கூறியிருக்கிறார்: ''என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும் (அல்லது உங்களில் வேர்கொண்டிருக்கும் படிக்கும்) உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்'' (11). நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் சந்தோஷத்தை அனுபவிப்பதற்கு முன்னால் எந்தெந்த நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்களா? கர்த்தருக்குள் சந்தோஷம் ஆவியின் கனியாக இருக்கிறது (கலா. 5:22-23). ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசியால் ''வேதனையையும் பாடுகளையும் தவிர்க்க முடியாது. ஆனால் கவலையையும் நம்பிக்கையிழப்பையும் தவிர்க்க முடியும்'' என்று எனக்குப் பிடித்தமான ஒரு நூலாசிரியர் கூறியிருக்கிறார். ஏனென்றால் நீங்கள் அதிகமான பாடுகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதுகூட பரிசுத்த ஆவியானவரால் உங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கமுடியும்.

இந்த வசனங்களில விவரிக்கப்பட்டுள்ள சமாதானத்தையும் சந்தோஷத்தை யும், ''எந்த நிலைமையிலும சமாதானம்'' என்றும் ''எந்த நிலைமையிலும் சந்தோஷம்'' என்றும் குறிப்பிடலாம். நமது சூழ்நிலை எப்படிப்பட்டதாக இருந்தாலும், இயேசுவானவர் நமக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நம்மால் அனுபவிக்க முடியும்; ஏனென்றால் அவை நம்மிலிருந்துவருவதில்லை. அவை பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருகின்றன அல்லது நமது இருதயங்களில் ஜீவிக்கும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவனிடமிருந்து வருகின்றன.

மற்றொரு நூலாசிரியர் ''சிலர் சந்தோஷமானது பாளம், பாளமாக வானத்திலிருந்து விழுகிறது என்று நினைக்கிறார்கள். அது எப்படியோ சிலர்மீது விழுகிறது (பெரும்பாலும் மற்றவர்). ஆனால் சிலர் மீது விழுவதில்லை (அதாவது, நம் மீது). வேதவசனங்கள் இப்படிப் போதிக்கவில்லை'' என்று எழுதியிருக்கிறார். இயேசுவானவர் போதிப்பதின் அடிப்படையில் கனிகொடுப்பது சந்தோஷத்துக்கு ஒரு காரணமாக இருக்கிறது. ''அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவர்களைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட (சந்தோஷப்பட) அவனுக்கு இடமுண்டாகும்'' என்று பவுல் எழுதியிருக்கிறார் (கலா. 6:4).

நான் இளவயதுப் போதகனாக இருந்தபோது, ஊழியம் செய்த சபையின் மூத்த போதகர் கிறிஸ்துவிலும் ஊழியத்திலும் எனக்குப் போதனையளித்தார்.

மற்றொரு பட்டணத்தில் அவர் நிறுவிய கிளைச்சபையில் என்னை ஊழியம்செய்யும்படி வைத்தார். ஒரு புதிய சபையை நடத்துவதற்காக இந்தப் பெரிய சபையின் போதகர் குழுவிலிருந்து விலக நான் விரும்பவில்லை. அதிகமாகக் கனிகொடுக்கும் ஊழியத்தின் மூலம் தேவன் அவரை அற்புதவிதமாக ஆசீர்வதித்திருப்பதற்காக நான் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். ''தேவன் உனக்கும் ஒரு கனி கொடுக்கும் ஊழியத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை உன்னால் நிரூபிக்க முடியுமானால், நான் அதிக சந்தோஷத்தைப் பெறுவேன்'' என்று அந்த மூத்த போதகர் எனக்கு விளக்கிக் கூறினார். மேலே கூறப்பட்டுள்ள வசனத்தை எனது புதிய ஊழியத்துக்கு அவர் பொருத்திக் காட்டினார்.

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்து அந்தப் புதிய சபையில் ஒரு கனிகொடுக்கும் ஊழியத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தபோது, நான் என் போதகருக்கு அதிகமாக நன்றிக்கடன் பட்டிருப்பதை உணர்ந்தேன். ஏனென்றால் அவரே அந்தப் புதிய முயற்சி, இறுதியில் என் ஆண்டவருக்கும் எனக்கும் அதிகமான சந்தோஷத்தைக் கொண்டுவரும் என்பதை அறிந்திருந்தார். மற்றவர்களுக்கும் பதின்மூன்று ஆண்டு காலம் ஆகலாம் எனறு கூற நான் முன்வரவில்லை. இயேசுவானவர் விவரித்த சந்தோஷம் இப்படிப்பட்டதே என்பதைச் சுட்டிக்காட்டவே நான் இதைக் கூறுகிறேன். ''நீங்கள் எனக்குச் சந்தோஷத்துக்கான ஆதாரமாக ஆக வேண்டும் என்பதற்காகவும், நீங்களும் சந்தோஷத்தினால் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காகவுமே நான் இந்தக் காரியங்களை உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்பதே இயேசுவானவர் கூறியதின் அர்த்தமாகும்.

ஐந்தாம் காரணம்

தமது அப்போஸ்தலர்கள் கனிகொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு இயேசுவானவர் கூறிய ஐந்தாம் காரணம் அவரே அவர்களைக் கனிகொடுக்கும்படி தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதாகும். ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத் தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும் படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்'' (16).

இந்த மனிதர்கள் இயேசுவானவரைப் பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் சுய விருப்பத்தோடு தெரிந்துகொண்டு, அவருக்கு

ஒப்படைப்புக்கொண்டவர்களாக இருந்தார்கள். மீனவர்களாக இருந்தவர்கள் தங்கள் படகுகளையும் தங்களோடு எடுத்துக்கொண்டு வரவில்லை. அவர்கள் தங்கள் படகுகளையும் தங்கள் மீன்பிடிக்கும் தொழிலையும் விட்டுவிட்டு வந்திருந்தார்கள். இயேசுவானவர் இப்படிக் கூறியபோது அவர்களின் சிந்தனைகள் எப்படியிருந்திருக்கும் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? ''நீங்கள் தெரிந்துகொண்டீர்கள் என்பதை நான் அறிவேன். நீங்களே என்னைத் தெரிந்துகொண்டதாக நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால் நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நானே உங்களைத் தெரிந்து கொண்டு, ஏற்படுத்தினேன்'' என்றே இயேசுவானவர் கூறினார் (15:16).

இந்த வசனத்தில் ''ஏற்படுத்தினேன்'' என்றும் சொல் இன்று நாம் ஒரு போதகரைப் பிரதிஷ்டை செய்வதைக் குறிக்கவில்லை. அது புதிய ஏற்பாட்டில் மூன்று முறை மட்டுமே வரும் ஒரு கிரேக்கச் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். அது ஒரு விளக்குத் தண்டின் மேல் வைக்கப் பட்டிருக்கும் விளக்கைப்போலச் சரியான இடத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது (மத். 5:14-16). இயேசுவானவர் கூறுவதின் சாராம்சம் இதுவே: ''நான் உங்களைத் தெரிந்துகொண்டு, நீங்கள் கனிகொடுக்கும்படியாக, இருண்ட உலகத்தில் விளக்குத்தண்டின் மேல வைக்கப்பட்ட விளக்கு ஒளி கொடுப்பதுபோலச் சரியான இடத்தில் உங்களை வைத்திருக்கிறேன். நீங்கள் கனிகொடுக்கும் படி நான் தெரிந்துகொண்டபடியால் நீங்கள் கனிகொடுக்கவேண்டும்.''

ஆறாம் காரணம்

பிறகு அவர்கள் ஏன் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கு அவர் ஆறாவது காரணத்தைக் கூறுகிறார். அவர்கள் இயேசுகிறிஸ்துவின் அன்பை அனுபவித்திருக்கிற படியாலும், அவர்கள் அதை உலகத்தோடு பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகிறபடியாலும், அவர்கள் கனிகொடுக்க வேண்டும். ''பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால் என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்'' (9,10). பதின்மூன்றாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள புதிதான கற்பனையை அவர் மறுபடியுமாக எடுத்துக் கூறுகிறார் (34, 35). நாம் ஆண்டவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும் போது அவர்மீதான அன்பைச் செயல்பூர்வமாகக் கட்டுகிறோம் என்ற போதனையையும் அவர் திரும்பக் கூறுகிறார்.

அவர் இந்த மனிதருக்காகவும், அவர்கள் மூலமாக விசுவாசிக்கப் போகிறவர்களுக்காகவும் ஜெபித்தபோது, உலகத்தை அதிகமாக நேசித்த தேவன் அவர்களுடைய இரட்சிப்புக்காகத் தமது ஒரே குமாரனைக் கொடுத்திருக்கிறார் என்பதை உலகத்தார் அறிந்துகொள்ளும் வகையில் அவர்கள் வாழவேண்டும் என்று ஜெபிக்கிறார். தம்மைப் பின்பற்றுகிறவர்கள் காட்டும் அன்பின் மூலமாக, உலகத்தார் தேவன் தமது ஒரே பேறான குமாரனை நேசித்ததுபோலத் தங்களையும் நேசிக்கிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் ஜெபிக்கிறார் (3:16; 17:22, 23).

மூன்றாண்டுகளாக இந்த மனிதர்கள் இயேசுவானவரின் அன்பை அனுபவித்து வந்திருக்கிறார்கள். ஆனால் இழந்து போன உலகத்தார் அந்த அன்பை அனுபவிக்கவில்லை. எனவே தாம் மூன்றாண்டுகளாக நேசித்த இந்த மனிதர் அந்த அன்பை முழு உலகத்தோடும் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறுகிறார். அவருடைய அன்பை அறிந்தவர்கள் கனிகொடுக்கவேண்டும் என்பதற்கு மற்றொரு காரணம், அவர் தாம் அவர்களை நேசித்ததுபோல அவர்களும் உலகத்தாரை நேசிக்க வேண்டும் என்பதாகும்.

இந்தப் போதனையின் பின்னணியில் உலகத்திலேயே அதிகமான அன்பு எது என்பதையும் அவர் எடுத்துக் கூறுகிறார். ஒருவன் மற்றொருவனுக்காகத் தன் ஜீவனைக் கொடுப்பதின் மூலம் வெளிப்படுத்தும் அன்பைவிட மேலான அன்பு எதுவுமில்லை என்று அவர் கூறுகிறார். விசுவாசிகளுக்குப் போதனை யளிக்கும் புதிய ஏற்பாட்டு நிருபங்களில் இந்தப் போதனை செயல்பூர்வமாக்கிக் காட்டப் பட்டிருக்கிறது. கிறிஸ்து சபையை நேசித்து நமது இரட்சிப்புக்காகத் தமது ஜீவனைக் கொடுத்ததுபோல கணவன்மார் தங்கள் மனைவியரை நேசிக்க வேண்டும் என்ற கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் தங்கள் கணவனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் தங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுக்கும்போது, தங்கள் கணவனையும் மற்றவர்களையுமே மையமாகக் கொண்டிருக்க வேண்டும். சுயமையம் கொண்டிருக்கும் நமது கலாச்சாரங்களில் இந்தப் போதனைகளைப் பின்பற்ற முடியாத அளவுக்கு அநேக ஆண்களும் பெண்களும் தங்களைக் குறித்தே அதிகமான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களுக்காக ஜீவனைக் கொடுப்பதைவிட மேலான அன்பு கிடையாது என்றே இயேசுவானவரின் இந்த அறைகூவலுக்கு நாம் செவிசாய்ப்பது எவ்வளவு அவசியமாக இருக்கிறது!

ஏழாம் காரணம்

அவர்கள் கனிகொடுக்க வேண்டும் என்பதற்கான ஏழாவது காரணம் தோட்டக்காரரான தேவன் அவர்கள் கனிகொடுக்கவேண்டும் என்று திட்டவட்டமாக

எதிர்ப்பார்க்கிறார் என்பதாகும். இரண்டாம் வசனத்தைக் கவனமாக வாசித்து இதைப் புரிந்துகொள்ளுங்கள்: நமது பரம பிதாவானவர் இந்தச் செடியில் கனிகொடுக்கும் ஏதேனும் கொடியைக் கண்டால், அது இன்னும் அதிகக் கனிகொடுக்கும்படி அதை வெட்டிச் சுத்தம் பண்ணுகிறார்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர், பயபக்தியுள்ள ஒரு தம்பதியர் இயேசுவானவரின் இந்த உருவகத்தைப் புரிந்துகொள்ள எனக்கு உதவினார்கள். ஒரு பெரிய நிறுவனத்திலிருந்து தாங்கள் ஏன் சீக்கிரமாகவே ஓய்வுபெற்று, வடக்கு கலிபோர்னியாவில் ஒரு திராட்சத் தோட்டத்தை வாங்கினார்கள் என்பதை எனக்கு விளக்கமாக விவரித்தார்கள். திராட்சத் தோட்டத்தைப் பராமரிப்பது எப்படி என்று அவர்களுக்குத் தெரியாதபடியால் ஒரு அனுபவம் பெற்ற முதியவரை ஆலோசனை கூறுவதற்காக வைத்துக்கொண்டார்கள்.

முதலில் தோட்டத்துக்குச் சென்று கடந்த அறுவடையின் போது எந்தக் கனியும் கொடுக்காமல் காய்ந்துபோன கொடிகளை வெட்டிப்போட வேண்டுமென்று அந்த முதியவர் அவர்களுக்கு ஆலோசனை கூறினார்.

அதை அவர்கள் செய்துமுடித்த பிறகு, அந்தக் கொடிகளில் பச்சிளந்தளிர்கள் புறப்பட்டது அவர்களுக்கு அதிகமான ஊக்கத்தைக் கொடுத்தது. ஆனால் அந்த முதிர்வயதான தோட்டக்காரரோ ''இவை உறிஞ்செடுக்கும் கொப்புகளே. நீங்கள் இப்போது மறுபடியுமாக உங்கள் திராட்சத் தோட்டத்துக்குச் சென்று இந்தத் தளிர்களை வெட்டி விடவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் எதிர்பார்க்கும் தரமான திராட்சக் கனிகளை நீங்கள் பெறமுடியாது. இவை தாங்கள் ஒட்டியிருக்கும் கொடியிலிருந்து உயிர்ச்சத்தை உறிஞ்சிக் கொள்வதால் 'உறிஞ்செடுக்கும் கொப்புகள்' என்று அழைக்கப்படுகின்றன. அப்படி அவை சத்துப்பொருளை உறிஞ்சிக் கொண்டால் கொடிகள் கனிகொடுக்க முடியாது'' என்று கூறினார்.

இப்போது அந்தக் கொப்புகளை வெட்டிய பிறகு பச்சை நிறமான காய்கள் உருவாகுவதைக் கண்டு தாங்கள் ஊக்கம்பெற்றதாக அந்தத் தம்பதியர் என்னிடம் கூறினார்கள். ஆனால் மூன்றாம் முறையாக தோட்டக்காரர் ''இப்போது நாம் மறுபடியுமாகச் சென்று, இந்தக் காய்களை வெட்டிப் போடவேண்டும். இல்லாவிட்டால் அறுவடையின் போது தரமானதும் அதிகமானதுமான கனிகளை நீங்கள் பெற முடியாது'' என்று கூறினார்.

அப்போதுதான் தாங்கள் முதன் முறையாக அந்த இரண்டாம் வசனத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டாக அந்தப் பயபக்தியுள்ள தம்பதியர் என்னிடம் கூறினார்கள். பிதாவாகிய தோட்டக்காரர் செடியோடு இணைந்துள்ள ஒரு கொடி கனி கொடுப்பதைக் காணும்போது, அது அதிகக் கனி கொடுக்கும்படி அதை வெட்டிச் சுத்தம் செய்கிறார் என்று இயேசுவானவர் போதித்தார்.

அவர்கள் திராட்சத் தோட்டதைக் குறித்துக் கொடுத்த விளக்கம், எனது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் நான் அனுபவித்த காரியங்களோடு இயேசுவானவர் கூறிய உருவகத்தைப் பொருத்திக் காண அதிக உதவியாக இருக்கிறது என்று நான் அவர்களிடம் கூறினேன். 70-ஐ அடுத்த ஆண்டுகளில் தேவன் என்னுடைய ஊழியத்தை நோக்கிப் பார்த்து, நான் கனிகொடுப்பதைக் கண்டார் என்று நான் நம்புகிறேன். நான் அவரோடு இசைவாக இருந்து அவருக்காகக் கனிகொடுத்து வந்தேன். ஆனால் எனது வாழ்க்கையிலிருந்து வரும் கனியின் தரத்திலும் அளவிலும் அவர் திருப்திப்படவில்லை. எனவே அவர் ''நான் அவனை வெட்டி, அதிகக் கனிகொடுக்கும்படி செய்யப் போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டார்.

அப்படியே 1980க்கு முந்தைய ஆண்டுகளில் நான் ஒரு குணமாக்க முடியாத நோயினால் செயலிழந்து போயிருந்தேன். 80-ஐ அடுத்த ஆண்டுகளிலேயே நான் பாரிசவாயுவினால் பாதிக்கப்பட்டேன். பல ஆண்டுகள் நான் வீட்டிலேயே முடங்கிக்கிடக்க வேண்டியிருந்தது. என்னுடைய நோயைக் கண்ட மக்கள் ''இது எவ்வளவாகப் பின்னோக்கிப் போகும்படி செய்கிறது'' என்று அங்கலாய்த்தார்கள். ஆனால் நானோ ''இது பின்னோக்கிப் போவது அல்ல, வெட்டப்படுவதாகும். இது என் அன்பான பரமபிதா என்னை வெட்டிச் சுத்தம் பண்ணுவதாகும். நான் என் வாழ்க்கையில் ஒரு அங்குலம் ஆழமாகவும் நூறு மைல் அகலமாகவும் சென்று, பல காரியங்களில் பரபரப்பாக ஈடுபட்டுக் கனிகொடுத்தாலும், தேவன் விரும்புகிறவண்ணமாக அதிகக் கனிகொடுக்கவில்லை என்பதே காரணமாகும்'' என்று அவர்களுக்குச் சொல்வேன்.

1980 ஆம் ஆண்டிலிருந்து எனது வாழ்க்கையிலேயே அதிகக் கனி கொடுக்கும் ஊழியத்தில் நான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன். நான் சரீரப்பிரகாரமாக சக்தியோடும் ஆரோக்கியமாகவும் இருந்திருந்தாலும், ஒருபோதும் இத்தகைய கனிகொடுக்கும் ஊழியத்தின் ஆசீர்வாதத்தை அனுபவித்திருக்க முடியாது. இயேசுவானவரால் ''நிலைத்திருக்கும் கனி'' என்று அழைக்கப் படும் கனியைக் கொடுப்பதற்காக எனக்குக் கிடைக்கும் மாபெரும் வாய்ப்பை நான் இழந்துபோகக் கூடாது என்பதற்காகவே தோட்டக்காரராகிய தேவன் என்னை வெட்டிச் சுத்தம்பண்ணினார் (16). அதற்காக நான் அவரை அதிகமாக நேசிக்கிறேன்.

இயேசுவானவர் இந்த அப்போஸ்தலருக்குக் கொடுத்த ஏழாவது காரணம் பரம பிதா அவர்கள் அதிகக் கனிகொடுக்கும்படி எதிர்பார்க்கிற படியால், அவர்கள் கனி கொடுக்கவேண்டும் என்பதாகும். அவர் தமது அன்பின் காரணமாக,

நமது வாழ்க்கையில் அவருக்காகக் காணப்படும் கனியை அதிகமாக்கவும், தரமுள்ளதாக்கவும் நம்மை வெட்டிச் சுத்தம்பண்ணுகிறார்.

எட்டாவது காரணம்

அப்போஸ்தலர்கள் கனிகொடுக்கவேண்டும் என்பதற்கு எட்டாவதும் கடைசியானதுமான காரணத்தை இந்தப் போதனையின் துவக்க வசனத்தில் நாம் காணலாம். நான் இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள காரணங்களை அதன் வசன வரிசையில் எடுத்துக்கொள்ளவில்லை. முதலாவதாகக் கொடுக்கப்பட்டது மிக முக்கியமான போதனை என்பதால் நான் அதை இறுதியாக வலியுத்து கிறேன். தான் செடியாகவும், அவர்கள் கொடியாகவும் இருக்கிறபடியால் அவர்கள் கனிகொடுக்க வேண்டும் என்று இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களுக்கு அறைகூவல் விடுத்தபோது, தமது இரட்சிப்பின் சுவிசேஷத்தை உலகெங்கும் கொண்டுசெல்ல வேறு வழியில்லை என்பதற்காகவே அவர்கள் கனிகொடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இயேசுவானவர் தமது பரத்துக்கேறுதலுக்குப் பிறகு தேவ தூதர்களைச் சந்தித்ததைக் குறித்து ஒரு கவிதை இருக்கிறது. தேவதூதர்கள் பூமியில் அவருடைய முப்பத்து மூன்று ஆண்டுகால ஊழியத்தைப் பற்றியும் , சிலுவை மரணத்தைக் குறித்தும் அது அவருடைய உயிர்த்தெழுதலினால் உறுதிப்படுத்தப்பட்டதைப் பற்றியும் அவரிடம் கேட்கிறார்கள். பிறகு ஒரு தேவதூதன் அவரிடம் பிரதான கட்டளையைப் பற்றியும் உலகளாவிய சுவிசேஷப்பணி குறித்தும் கேட்கிறான். தாம் அந்த ஊழியத்தைப் பதினொரு அப்போஸ்தலர்களிடமும் கிட்டத்தட்ட ஐந்தாறு சீஷர்களிடமும் ஒப்படைத்திருப்பதாக இயேசுவானவர் கூறினார். ''அவர்கள் உமக்காக உலகத்தை எட்டத் தவறிவிட்டால் என்ன ஆகும்?'' என்று அந்தத் தூதன் கேட்கிறான். ''என்னிடம் வேறு திட்டம் இல்லையே!'' என்று இயேசுவானவர் பதிலளிக்கிறார்.

சுருக்கம்

தேவனுடைய திட்டத்தின்படி, தேவனுடைய மக்கள் மூலமாக, தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றும்படி, தேவனுடைய மக்களில் தேவனுடைய வல்லமையை வைப்பது தேவனுடைய திட்டமாக இருக்கிறது. இதுவே முதல் போதனையின் உள்ளடக்கமாகும்; இதை வலியுறுத்துவதற்காக நான் இதைக் கடைசியில் கொடுக்கிறேன். இந்த அருமையான உருவகத்தில், இயேசுவானவர் கொடிகளைத் தேடும் திராட்சச் செடியாக இருக்கிறார். கனிகள் செடியில் உருவாக்குவதில்லை, கொடியிலேயே வளருகின்றன. இதுவே ஆழமான சத்தியமாகும்.

தேவன் இந்த ஒழுங்கை ஏற்படுத்தும்போது, நான் அங்கே இருந்திருப்பேன் என்றால், இந்தத் திட்டத்துக்கு எதிராகவே நான் ஆலோசனை கூறியிருப்பேன்; ஏனென்றால், மனித இயல்பு மிகவும் பலவீனமானது. தேவன் இந்தத் தீர்மானத்தை எடுத்தபோது, மானிட மாம்சத்தின் பலவீனத்தைக் குறித்து அறிந்திருந்தார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? வேதாகமத்தில், ''மாம்சம்'' என்ற சொல்லுக்குப் பெரும்பாலும், ''தேவனுடைய உதவியைப் பெறாத மானிட இயல்பு'' என்பதே அர்த்தமாகும். இந்தப் பலவீனமான மனிதர் மூலமாகத் தமது சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளும்படி கட்டுப்பாடுகளுக்குள்ளாக்கிய ஒரு திட்டத்தை தேவன் ஏன் வடிவமைத்தார்?

இதுவே தேவனுடைய திட்டமாக இருக்கிறது என்பது இந்தக் கேள்விக்குரிய குறுகலான பதிலாகும். ஒரு உணர்வோடு ''தேவன் ஏன் இதைச் செய்தார்?'' என்று நாம் கேட்கிறோம். எப்போதுமே ''தேவன் மட்டுமே அறிவார்!'' என்பதே பதிலாக இருக்கிறது. இயேசுவானவர் இந்தப் பகுதியில் இந்தக் கேள்விக்குச் சில பதில்களைக் கொடுக்கிறார். நிலைத்திருக்கும் கனிகளைக் கொடுக்கும்படி தேவன் ஏன் மானிடக் கொடிகளைப் பயன்படுத்துகிறார் என்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. தேவனுடைய ஜீவனும் வலலமையும் இந்தக் கொடிகளின் வழியாக வழிந்தோடி, அவை கனிகொடுக்கும்போது, அவர் மகிமைப்படுத்தப்படுகிறார், இந்தக் கொடிகள் அதிகமான சந்தோஷத்தை அனுபவிக்கின்றன. என்றாலும், தேவனும் உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்துவும் வேறு திட்டத்தைப் பெற்றிருக்க வில்லை என்பதே இந்தக் கேள்விக்கு அடிப்படைப் பதிலாகும்.

மேல் அறையில் தாம் போதித்த கருத்துப்படிவங்களின் சாராம்சத்தை எடுத்துக்காட்டவும், பொருத்திக்காட்டவும் இயேசுவானவர் எப்படி இந்தச் செடி மற்றும் கொடிகளின் உருவகத்தைப் பயன்படுத்துகிறார் என்பதைக் கவனித்தீர்களா? ''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்'' (14:12).

அவர் கனிகளைக்கொண்ட கொடிகளையும் செடிகளையும் சுட்டிக் காட்டியபோது சொல்லியவைகளின் சாராம்சம் இதுவே: ''செடியிலிருந்து ஜீவனானது இந்தக் கொடிகளில் பாய்ந்து, இந்தக் கனிகளை உருவாக்கும் வகையில் இந்தச் செடியும் கொடிகளும் எவ்வாறு இசைவாயிருக்கின்றன என்பதைப் பார்த்தீர்களா? நீங்களும் கனிகொடுக்க வேண்டுமானால், நீங்கள்

என்னிலும் நான் உங்களிலும் இருக்கவேண்டும். என்னாலேயல்லாமல் உங்களால் எதுவும் செய்யமுடியாது. நீங்கள் இல்லாமல் எதையும் செய்யாதிருப்பதை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன். உங்கள் மூலமாக வரும் உங்கள் கனிகொடுத்தலின் மூலமாக எனது சீடர்களாக மாறுகிறவர்களின் மூலமாகவும் எனது வார்த்தைகளை அறிவித்து, எனது கிரியைகளைச் செய்து உலகத்தில் எனது ஊழியத்தை நிறைவேற்றுவதைத் தவிர வேறு எந்தத் திட்டத்தையும் நான் வைத்திருக்கவில்லை.''

பதினைந்தாம் அதிகாரத்தின் இந்த முதல் பதினாறு வசனங்களைக் கடந்து நாம் முன்னேறும்போது, சில பழைய ஏற்பாட்டு நிபுணர்கள் இது ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளின் எழுத்திலும் பிரசங்கத்திலும காணப்பட்ட உருவகத்துக்கு இயேசுவானவரின் விளக்கவுரையே என்று நம்புவதை நான் குறிப்பிட்டாக வேண்டும் (ஏசாயா 5:1-7). தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலே திராட்சச் செடி என்றும் இது கனிகொடுக்கவில்லை என்றும் கூறுகிறார்கள். கனிகொடுக்காத திராட்சச் செடி குறித்த தீர்க்கதரிசிகளின் போதனை தீமைக்கும் ஒரு சித்திரமாக இருக்கிறது; தேவனுடைய மக்களும் இனத்தாரும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இஸ்ரவேல் இருக்கவில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இயேசுவானவர் தமது சில உவமைக்கதைகளில் பயன்படுத்துவது போலவே தீர்க்க தரிசிகளின் வழியில் இந்த உருவகத்தைப் பயன்படுத்துகிறார் (மத். 21:33-40).

எனவேதான் இயேசுவானவர் தோட்டத்தில் தமது பெரிய உருவகத்தை ''நான் மெய்யான திராட்சச் செடி (தீர்க்கதரிசிகள் கூறுகிறபடியான கனிகொடுக்காத திராட்சச் செடி அல்ல)'' என்று கூறித் துவக்கினார் என்று பழைய ஏற்பாட்டு நிபுணர்கள் நம்புகிறார்கள். இந்த நேர்த்தியான உருவகத்தில், இரட்சிப்பு, சமாதானம், ஆவியின் கனி, தாம் வாக்குத்தத்தம்பண்ணின பரிபூரணமான நித்திய வாழ்வு இவை வெறுமனே பயபக்தியுள்ள யூதராக இருப்பதின் மூலம் கிடைக்காது என்று இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களுக்குக் கூறுகிறார் என்று சிலர் சொல்லுகிறார்கள். இயேசுவானவரை அப்போது அவர்கள் அறிந்திருப்பதிலும், பின்னர் இவரை உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்துவாக அறிவதிலும் அவரோடுள்ள உயிர்த்துடிப்புள்ள உறவின் மூலமாக மட்டுமே இந்த இயல்புக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடியும்.

அத்தியாயம் மூன்று

அச்சுறுத்தக் கூடிய பணி ஒப்படைப்பு
(15:18-27)

இயேசுவானவர் மேல் அறையில் அளித்த போதனையின் சாராம்சத்தைப் பொருத்திக்காட்டுவதாக திராட்சச் செடி மற்றும் கொடிகளின் உருவகம் அமைந்துள்ளது. இப்போது இயேசுவானவர் தமது துவக்கச் செய்தியில் அவர்களுக்குக் கொடுத்த கட்டளையைச் செயல்படுத்தும்போது அவர்கள் எத்தகைய கடினங்களை எதிர்நோக்கு வார்கள் என்ற கடினமான உண்மைகளை அவர்களோடு பகிர்ந்துகொள்கிறார். அவர்கள் சந்திக்கப்போகிற எதிர்ப்புகளையும் பாடுகளையும் குறித்த முன்னறிவிப்பைத் தொடர்ந்து, அவர்கள் தேற்றரவாளனைப் பெறும்போது, அவர்களிலும் அவர்கள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவர் செய்யப்போகிற கிரியைக் குறித்த சில திட்டவட்டமான செய்தியையும் அவர் கொடுக்கிறார்.

''உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொண்டிருங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.

''நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக் குறித்துப் போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள். முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.

''பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவிடனத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார். நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' (யோவான் 15:18-27).

வரவிருந்த பாடுகளுக்கும் துன்பங்களுக்கும் எற்ற வகையில் இயேசுவானவர் எவ்வாறு தமது சீஷர்களை ஆயத்தப்படுத்தினார் என்பதை இந்த வசனங்கள் கூறுகின்றன. சபை வரலாற்றின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் கிறிஸ்தவனாக இருப்பது சட்ட விரோதமாகக் கணிக்கப்பட்ட பல ஆண்டுகளை அனுபவிக்க வேண்டியிருந்தது. இரண்டு கொடூரமான பாடுகளின் காலகட்டத்தைச் சபையானது கடக்க வேண்டியிருந்தது. கான்ஸ்டன்டைன் பேரரசர் மனமாற்றம் பெறும்வரையிலும் ஆலயக்கட்டிடங்களே இருக்கவில்லை. அவர் கிறிஸ்தவ விசுவாசத்தைத் தழுவிக்கொண்டு இயேசுவானவரைப் பின்பற்றி அவருக்குச் சீஷராவதைச் சட்டரீதியாக்கினார் (கி.பி. 312). கான்ஸ்டன்டைன் பேரரசரின் காலம் வரை சபையானது வீடுகளில் (பெரும்பாலும இரகசியமாக) கூடிவந்தது. அல்லது பாதாளக் கல்லறைகள் போன்ற மறைவான இடங்களில் கூடிவந்தார்கள். இந்தப் பாதாளக் கல்லறைகள் ரோமப் பேரரசின் தலைநகரின் கீழாக அமைந்திருந்த கல்லறைகளாகும்.

சபை வரலாற்றின் இந்தத் துவக்க நாட்களிலிருந்து, இயேசுவானவரின் சீஷர்களுக்கு ஒன்று சேருவது சட்டவிரோதமாக இருந்த இடங்களில் இவ்வாறு இரகசியமாகக் கூடிவரும் வழக்கம் இருந்து வருகிறது. இந்தச் சபைகள் ''இரகசிய சபைகள்'' என்று அழைக்கப்படுகின்றன. இப்போது பலருக்கு அது தெரியாவிட்டாலும், இன்றும் இலட்சக்கணக்கான விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறர்வளாக வெளியரங்கமாகக் கூடிவராத கலாச் சாரங்களில் இப்படி இரகசிய சபைகளிலேயே கூடிவருகிறார்கள்.

வீடு என்பதைக் குறிக்கும் கிரேக்கச் சொல் ''ஐக்கோஸ்'' (Oikos) என்பதாகும். எனவே நிபுணர்கள் சபையானது சிறு குழுக்களாக இரகசிய சபைகளிலோ அல்லது வீட்டு சபைகளிலோ கூடிவருவதை ''ஐக்கோஸ் இயக்கம்'' என்று அழைக்கிறார்கள். சபையானது இந்தச் சிறு குழுப் பின்னணியிலேயே கூடிவந்தது என்பதின் அடிப்படையிலேயே புதிய ஏற்பாட்டில் சபையின் ஒழுங்கு, வடிவமைப்பு மற்றும் செயல்பாடு குறித்த வழிமுறைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன (1 கொரி. 14:26-40). இன்றும் உலகெங்கும் விசுவாசிகள் கொடூரமாகத் துன்புறுத்தப்படுகிறபடியால், சபை வரலாற்றின் இந்த இறுதி அத்தியாயங்கள் எழுதப்படும் வேளையில் சபையானது மறுபடியுமாக ''ஐக்கோஸ் இயக்கத்தின்'' திசையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது.

‘‘உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்’’ என்று இயேசுவானவர் கூறியபோது (யோவனா 15:18), அவர் உலகத் தத்துவம் என்ற உணர்வில்தான் ‘‘உலகம்’’ என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இது உலகச் சிந்தனை ஒழுங்கை அல்லது நன்னெறிக்கு முக்கியத்துவம் கொடுக்காத உலகப்பிரகாரமான மதிப்பீட்டு ஒழுங்கைக் குறிக்கிறது. எனவேதான் தமது சீஷர்கள் மறைக்க முடியாதபடி மலையின்மேல் இருக்கிற பட்டணத்தைப் போலிருப் பார்கள் என்று இயேசுவானர் கூறினார் (மத். 5:14). இயேசுவானவரைப் பொருத்தவரையில் உலகம் அவர்களைப் பகைக்கும்; ஏனென்றால், அவர்கள் இருப்பதும் விசுவாசிப்பதும், மதிப்பாகக் கருதுவதும்,உலகம் விசுவாசிப்பதற்கும் மதிப்பதற்கும் விரோதமானதாக இருக்கிறது. இன்று தனிப்பட்ட முறையில் இயேசுவானவரின் சீஷர்களாக இருக்கும் உங்களுக்கும் எனக்கும் இதுகுறித்த செயல்படுத்துதல் தெளிவாக இருக்கிறது.

பத்தொன்பதாம் வசனத்தில் அவர் தனிப்பட்ட விசுவாசி மற்றும் சபையைக் குறித்த தெளிவான விவரிப்பைக் கொடுக் கிறார். ‘‘நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்ட படியினாலும்’’ என்று அவர் கூறும்போது ‘‘உலகத்திலிருந்து’’ என்பது சபை குறித்த வரையறையாகும். யோவான் சுவிசேஷத்தை எழுதிய மொழியில் சபையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட வார்த்தை ‘‘எக்லீசியா’’ என்பதாகும்; ‘‘அழைக்கப்பட்டவர்கள்’’ என்பதே இதற்கு அர்த்தமாகும். அந்தச் சபையாக இருக்கும் நாம் ‘‘அழைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.’’ எதிலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம்? உலகப்பிரகாரமான தத்துவத்திலிருந்து, சிந்தனையிலிருந்து, மதிப்பீடுகள் மற்றும் வாழ்க்கை முறையிலிருந்து நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக நாம் உலகத்திலிருந்து அழைக்கப் பட்டவர்களாக, (other worldly) ‘‘மறு உலகத்தைச்’’ சேர்ந்தவர்களாக இருக்கிறோம் என்பதை உணரவேண்டும். ஏனென்றால், நாம் விசுவாசத்தில் அவரைப் பின்பற்றும்படி நம்மை ஒப்புக் கொடுக்கும்போது அவர் இந்த உலகத்திலிருந்தே வெளியே நம்மை அழைத்திருக்கிறார். உலகம் கிறிஸ்துவின் மதிப்பீடுகளைப் பெற்றிருக்கவில்லை என்பதை நாம் காணும்போது அதிர்ச்சியடையக் கூடாது. நாம் மற்றொரு இசைக்கு அணிவகுத்துச் செல்கிறோம் என்பதை உலகம் ஒரு போதும் மறந்துபோக விடாது. உலகத்தின் மக்கள் நமது மதிப்பீடுகளையும், நன்நெறிகளையும், நோக்கங்களையும், இலக்குகளையும் பெற்றிராததை நாம் காணும் போது வியப்படையக் கூடாது. நாம் மெய்யாகவே இயேசுவானவரின்

இந்த வார்த்தைகளைக் கேட்போமானால் அந்த அனுபவத்துக்கு ஆயத்தமாக இருப்போம்.

மேலும் அவர் ‘‘ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொண்டிருங்கள்’’ என்றும் கூறினார் (20). இந்த வார்த்தைகளை அவர் கூறியபோது, அவர் ஒரு வாசகத்தை மறுபடியுமாகக் கூறுகிறார் (13:16). பிறகு மேலும் அவர் தொடர்ந்து ‘‘அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்’’ என்று கூறுகிறார். என்றாலும், இந்த ஆக்கபூர்வமான வலியுறுத்தலையும் கவனியுங்கள்: ‘‘அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்’’ (20).

வேறு வார்த்தைகளில் கூறுவோமானால் ‘‘நான் வாழ்ந்து ஊழியம்செய்த அதே உலகத்தில் நீங்களும் வாழ்ந்து ஊழியம்செய்ய வேண்டியிருக்கிறது. நான் அனுபவித்தபடியே நீங்களும் மக்களிடமிருந்து இதே எதிர்மறையானதும் ஆக்கபூர்வமானதுமான பதில் வினையைப் பெறுவீர்கள். அநேகர் என்னைப் புறக்கணித்து, துன்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால் சிலர் விசுவாசித்திருக்கிறார்கள். பலர் உங்களையும் துன்புறுத்துவார்கள் என்பதை எதிர்பாருங்கள். ஆனால் உங்கள் பிரசங்கம் மற்றும் போதனையின் மூலமாகப் பலர் என்னை விசுவாசித்துப் பின்பற்றுவதையும், என் மதிப்பீடுகளுக்கு ஏற்ற வகையில் வாழ்வதையும்கூட எதிர்பாருங்கள்.’’

தனிப்பட்ட செயல்படுத்துதல்

‘‘சாட்சி’’ என்ற சொல்லுக்குரிய கிரேக்கப்பதத்தின் உண்மையான பொருள் ‘‘இரத்தச்சாட்சி’ என்பதாகும். எனவே, நாம் தினந்தோறும் இயங்கும் உலகத்தில் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவரைப் பிரசங்கித்து, போதிக்கும்போது, அவர்கள் கிறிஸ்துவின் போதனை மற்றும் மதிப்பீடுகளுக்கு எதிரான வகையிலான சிந்தனைகளோடு நம்மை எதிர்நோக்கும்போது, நாம் வியப்படையக்கூடாது. இயேசுவானவர் இந்த மனிதர்களுக்குக் கொடுத்த நம்பிக்கையான ஆக்கபூர்வமான வாக்குத்தத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது: ‘‘எனது பிதாவிடமிருந்து நான் பெற்ற என்னுடைய போதனைக்குச் சிலர் கீழ்ப்படிந்திருக்கிறார்கள் என்பதற்கு நீங்களே மகிமையான எடுத்துக்காட்டாக இருக்கிறீர்கள். இதேபோன்று உங்கள் ஊழியத்துக்கும் நீங்கள் ஆக்கபூர்வமான பலனைப்பெறுவீர்கள். நீங்களும் என்னிடமிருந்து பெற்ற போதனைக்குக் கீழ்ப்படியக்கூடிய சீஷர்களை உருவாக்குவீர்கள்’’ என்பதே இயேசுவானவரின் வார்த்தைகளின் சாராம்சமாகும்.

சாதாரண மக்களும் வேதாமத்தை வாசிக்க வேண்டும் என்பதற்காக வில்லியம் டின்டேல் ஆங்கில மொழியில் வேதாகத்தை மொழிபெயர்த்த போது அவர் சித்திரவதை செய்யப்பட்டார். அப்போது அவர் ''இதைத்தான் நான் மிகச் சரியாக எதிர்பார்த்தேன்'' என்று கூறினார். நாம் கிறிஸ்துவை அறிவிக்கும்போது மக்கள் கேலிசெய்யும்போது, நாம் வாழ்ந்து அறிவிக்க முயலும் மதிப்பீடுகளுக்காக நம்மைத் துன்புறுத்தும் போது, நாமும் வியப்படையாமல் வில்லியம் டின்டேலைப் போல இதை எதிர்பார்கிறவர்களாக இருக்க வேண்டும்.

உலகம் எப்போதுமே உண்மையான தீர்க்கதரிசிகளிடமும் சாட்சிகளிடமும் இவ்வாறு தான் நடந்துகொண்டிருக்கிறது என்ற இயேசுவானவரின் எச்சரிப்பையும் நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும். அவர்களோடுள்ள தமது உறவில் அவர் துவக்கத்திலேயே அவர்களுக்கு எச்சரிப்பு விடுத்திருக்கிறார்: ''எல்லா மனுஷரும் உங்களைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பேசும்போது உங்களுக்கு ஐயோ; அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்க தரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்'' (லூக்கா 6:26). எனவே நாம் அலட்சியமான, விரோதமான பதில்வினையை எதிர்பார்க்க வேண்டும். உலகப்பிரகாரமான மக்கள் நம்மைப் புகழும்போதும், பரிசளித்து நம்மை மகிமைப்படுத்தும்போதும் நாம் கவனமாக இருக்க வேண்டும். இந்த உலகத்து மக்களுக்கு நாம் வெளிப்படுத்தும் கிறிஸ்துவைக் குறித்து விரோமான பதில்வினையையே நாம் எதிர்பார்க்க வேண்டும்.

ஆனால் நம்பிக்கை இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கு ஏற்றபடி வாழ்ந்து அதை அறிவிக்கும்போது, பாவகரமானவர்களின் மத்தியிலும் துன்புறுத்துகிறவர்களின் மத்தியிலும் சிலர் நமது போதனையை விசுவாசித்து, கீழ்ப்படிவார்கள். இது நமது ஆண்டவரின் அனுபவம் மட்டுமல்ல, நடபடிகளின் நூலை வாசிக்கும்போது அப்போஸ்தலர்களின் அனுபவமும் அப்படித்தான் இருந்தது என்பதை நாம் கண்டுகொள்வோம்.

கிறிஸ்து ஒருபோதும் பிரசங்கிக்கப்படாத, பாவமும் ஊழலும் நிறைந்த கொரிந்து பட்டணத்துக்குப் பவுல் வந்தபோது, அங்கு அவருடைய சபை ஸ்தாபிக்கும் ஊழியம் துவங்கப்படுவதற்கு முன்பாக, ஆண்டவர் அவருக்குக் காட்சியளித்து உற்சாமூட்டும் வார்த்தைகளைக் கூறினார். அதன் சாராம்சம் இதுவே: ''பவுலே பயப்படாதே. இந்தப் பட்டணத்திலும் எனக்கு அநேக மக்கள் இருக்கிறார்கள். நீ சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அவர்கள்யாரென்பதைக் கண்டுகொள்வாய்'' (அப். 18:9-10).

இது எவ்வளவாக உற்சாகமூட்டும் காரியமாக இருக்கிறது! நாம் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, அவர்கள் யாரென்பதை அறியமாட்டோம். ஆனால்

இயேசுவானவர் அளிக்கும் இந்த நம்பிக்கையையும் வாக்குத்தத்ததையும் நாம் பெற்றிருக்கிறோம்: சிலர் கண்டிப்பாக ஆக்கபூர்வமாகச் செவிசாய்க்கப் போகிறார்கள். நாம் மற்றவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ளவும், பிரசங்கிக்கவும் விசுவாசமும் துணிவும் கொண்டிருப்போமானால், அவர்கள் யாரென்பதைக் கண்டுகொள்வோம்.

ரோமாபுரியில் சுவிசேஷத்தை அறிவிக்கும்போது, விசுவாசிகள் வருவதை எதிர்பார்த்த பவுல் அவர்களுக்கு இவ்வாறு எழுதியிருக்கிறார்: ''நான் உங்களிடத்தில் வரும் போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத் தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்'' (ரோமர் 15:29). நாம் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி ஓரிடத்துக்கு அழைக்கப்படும்போது, அல்லது தனிப்பட்ட ஒருவருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப் படும்போது, நம்மை அழைத்தவர்களுக்கு நாம் வாக்குப்பண்ணக் கூடிய மிக முக்கியமான காரியம் நாம் கிறிஸ்துவின் ஆசீர்வாதத்தின் முழுமையோடு வருவோம் என்பதாகும். பெரும்பாலானவர்கள் நம்மை எதிர்த்து எதிர்மறையாக நடந்துகொண்டாலும், நம்மைச் சித்திரவதை செய்தாலும், ஒரு சில ''அழைக்கப்படட்வர்கள்'' நமது பிரசங்கத்துக்குச் செவிசாய்த்துக் கீழ்ப்படிவார்கள் என்ற அறிவோடு நாம் அந்த வாய்ப்பை அணுக வேண்டும். அவர்கள் இயேசுவானவர் மற்றும் அப்போஸ்தரின் பிரசங்கத்தைக் கேட்டுச் செவிசாய்த்ததுபோல நமக்கும் செய்வார்கள்.

இயேசுவானவர் மேலும் ''அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்'' என்று கூறினார் (யோவான்15:21). அவர்தம்மைப்புறக்கணிப்பதையும் பிதா அல்லது பரிசுத்த ஆவியானவரைப் புறக்கணிப்பதையும் பிரிக்கமுடியாதபடி ஒன்றாக்கிக் கூறுவதைக் கவனியுங்கள்: ''நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (13:20; 14:9-11). அவரும் அவருடைய பிதாவும் ஒன்றானவர்களே; உங்களால் அவர்களைத் தனித்தனியாகப் பிரித்து ஏற்றுக்கொள்ளமுடியாது. இதை வலியுறுத்தும் படியாக அவர் இதைத் திரும்பத்திரும்பக் கூறுகிறார். தம்மைப் புறக்கணிப்பது தம்மை அனுப்பினவரைப் புறக்கணிக்கிறதாக இருக்கிறது என்று அவர் கூறுகிறார்; இது அவர்கள் அறியாத இன்னும் ஆழமான பிரச்சினையை வெளிப்படுத்துகிறது.

பிறகு இருபத்தியிரண்டாம் வசனத்திலும் அடுத்துவரும் வசனங்களிலும் அவருடைய வாசகங்கங்கள் இந்தச் சுவிஷேத்தின் ஒன்பதாம் அதிகாரத்தின்

முடிவில் அவர் கொடுத்த வாசகங்களுக்கு ஒத்தவையாக இருக்கின்றன. பார்வையற்றவனைக் குணமாக்கிய பிறகு அவர் கூறியதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அதன் சாராம்சம் இதுவே: ''நான் ஒரு சிறப்பான வகைப்பட்ட ஒளியாக இருக்கிறேன். பார்வையற்றவர்களுக்கு நான் பார்வையைக் கொடுக்கிறேன். ஆனால் தங்களால் பார்க்கமுடியும் என்று கூறிக் கொள்பவர்களின் குருட்டுத் தன்மையையும் நான் வெளிப்படுத்துகிறேன்.''

சமயத் தலைவர்கள் அவர் கூறியதைப் புரிந்துகொண்டு, ''நாங்கள் (ஆவிக்குரியரீதியாக) குருட்டுத்தன்மையோடு இருக்கிறோம் என்று கூறுகிறீரே?'' என்று கேட்டார்கள். ''இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்'' (9:40, 41). பாவத்தைக் குறித்த எவ்வளவு ஆழமான வரையறையாக இது இருக்கிறது! குருட்டுத் தன்மை இல்லாவிட்டால் பாவம் இல்லை. இந்த அதிகாரத்தின் 22-ஆம் வசனத்திலும் யோவான் சுவிசேஷத்தின் ஒன்பதாம் அதிகாரத்திலும், இயேசுவானவர் தாமே உலகத்துக்கு ஒளியாயிருப்பதாக உரிமைகொண்டாடுகிறார். அப்படியானால், பாவம் என்பது உலகத்துக்கு ஒளியாயிருக்கிறவரைப் புறக்கணிப்பதாகும். எனவே, அனைத்துப் பாவத்திலும் தீவிரமான பாவம் இயேசுகிறிஸ்துவைப் புறக்கணிப்பதாகும்.

இது ஒரு கேள்வியை எழுப்புகிறது. எந்தவித ஆவிக்குரிய ஒளியும் இல்லாத எவரும் உலகத்தில் இருக்கிறார்களா? ஒவ்வொருவரும் ஓரளவாவது ஒளியைப் பெற்றிருக்கிறார்கள் என்று பவுல் அப்போஸ் தலன் எழுதியிருக்கிறார் (ரோமர் 1:20). அறிஞர்கள் இதை ''இயல்பான வெளிப்பாடு'' என்று குறிப்பிடுகிறார்கள். இயேசுவானவரின் போதனை மற்றும் பவுலின் போதனையின் சாரம்சம் என்னவென்றால், நாம் பெற்றிருக்கும் ஒளிக்கேற்றபடி நாம் வாழ்வோமானால் நமக்கு அதிகமான ஒளி கொடுக்கப்படும்: ''ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்து கொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக'' (பிலி. 3:16). நாம் பெற்றிருக்கும் ஒளிக்கேற்றபடி முன்னே செல்லாமல் இருப்போமானால், அதுவும் பாவம் குறித்த ஒரு வரையறையாக இருக்கிறது.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர், நான் ஒரு சுவிசேஷ வேதாகமப் பள்ளி வகுப்பை நடத்திக்கொண்டிருந்தபோது, வீட்டில் கூடியிருந்த அநேகர் மத்தியில் ஒரு ஜப்பானியப் பெண்ணும் இருந்தாள். வேதாகமத்தின் முதல் அதிகாரத்தை நான் போதிக்கும்போது அவள் ஆர்வத்தோடு அதற்குச் செவிசாய்த்தாள்.

அவளுடைய முகம் பிரகாசமாக இருந்தது. மற்றவர்கள் செல்லும்வரை காத்திருந்து, என்னுடன் பேசுவதற்கு அனுமதி கேட்டாள்.

அந்த உரையாடலை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. ''இரண்டாம் உலகப்போரின் இறுதி நாட்களில், B 29 விமானங்கள் குண்டுமழை பொழிந்துகொண்டிருந்தபோது பதுங்கு குழிகளில் இருந்த நான் மற்றொரு கடவுளை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தேன். மற்றொரு மெய்யான தேவன் இருக்கிறார் என்பதையும் நான் அறிந்திருந்தேன். அவரை நோக்கி நான் ஜெபித்தேன். இப்போது இத்தனை ஆண்டுகளாக என்றாவது ஒரு நாள் அவரைப் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்வேன் என்ற வலுவான உணர்வு எனக்குள் இருந்து வந்தது. இன்றிரவு வேதாகமத்திலிருந்து நீங்கள் போதித்த போது, அந்தப் பதுங்கு குழிகளில் நான் ஜெபித்த மெய்யான தேவன் இவரே என்று கண்டுகொண்டேன்'' என்று அவள் கூறினாள்.

பாவத்தின் சாரம்சம் ஒளியைப் புறக்கணிப்பதாகும். அதாவது, நாம் பெற்றுக்கொண்டிருக்கும் ஒளிக்கு நாம் பொறுப்பாகவும், கணக்குக்கொடுக்க வேண்டியவர்களாகவும் இருப்போம். நமக்கு ஆவிக்குரிய ஒளி அறிமுகம் செய்யப்படும் போது அது தீவிரமான காரியம் ஆகிவிடுகிறது; ஏனென்றால், நாம் பெறும் ஆவிக்குரிய பயன்கள் நமது ஆவிக்குரிய பொறுப்பை அதிகரிக்கச் செய்கின்றன. நாம் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, தேவனுடைய அற்புதங் களைக் கண்ட பிறகு, நாம் கண்டதற்கும கேட்டதற்கும் நாம் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அறிந்ததைக் கொண்டு நாம் என்ன செய்கிறோம் என்பதற்கு நாம் கணக்குக்கொடுக்கவேண்டும் என்று வேதாகமம் முழுவதிலும் பார்க்கிறோம். குறிப்பாக இங்கே இயேசுவானவரின் போதனை யிலும், இந்தச் சுவிசேஷத்தின் ஒன்பதாம் அதிகாரத்தின் இறுதியிலும் அது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

தேற்றரவாளன் வருகிறார்

பதினைந்தாம் அதிகாரத்தின் கடைசி வசனங்களில் இயேசுவானவர் ''தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்'' என்றார் (26). இயேசுவானவருக்குச் சாட்சி கொடுப்பது பரிசுத்த ஆவியானவரின் மிக முக்கயமான செயல்பாடுகளில் ஒன்றாகும். பரிசுத்த ஆவியானவர் தம்மை நோக்கிக் கவனத்தைத் திருப்புவதில்லை. அவர் இயேசுவானவரையே உயர்த்துகிறார். இயேசு மேலும் ''நீங்களும் ஆதிமுதல் என்னுடைனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்று கூறினார் (27).

ஒரு சாட்சி என்றால் யார், அவன் என்ன செய்கிறான் என்பதை மறுபடியுமாக நினைவுபடுத்திப் பாருங்கள். சாட்சி என்பவன் ஒரு காரியத்தைக் கண்டவனாக

அல்லது அனுபவித்தவனாக இருக்கிறான். ''நீங்கள் துவக்க முதலே என்னோடு இருந்தீர்கள். இப்போது பரிசுத்த ஆவியானவர் வந்து, எனக்குச் சாட்சி கொடுப்பார். ஆனால் நீங்களும் எனக்குச் சாட்சி கொடுக்கவேண்டும்'' என்று இயேசுவானவர் கூறுகிறார் (26).

ஒரு சாட்சியாக இருப்பது என்பது நாம் தேவ கிருபையில் யாராக இருக்கிறோம் என்பதைப் பொருத்த காரியமாகும். இயேசுவானவர் நம்மை வைத்திருக்கும் இடத்தில் நாம் விளக்குத் தண்டின்மேல் வைக்கப்பட்ட விளக்கைப் போலப் பிரகாசிக்கவேண்டும். ஆனால் ஒரு சாட்சியாக இருக்கும்படி மட்டும் நமக்குக் கட்டளை கொடுக்கப்பட வில்லை. நாம் நமது வாயைத் திறந்து, நாம் கண்டவைகள், கேட்டவைகள் மற்றும் அனுபவித்தவைகளைக் குறித்துப் பேச வேண்டும் . ஒரு விசுவாசி அடிப்படையில் சாட்சியாக இருந்தாலும்கூட அவன் தன் வாயாலும் சாட்சி கூறவேண்டும். இயேசுவானவர் கூறுகிறபடி பரிசுத்த ஆவியானவர் சாட்சி கூறுவார், நாமும் சாட்சி கூறவேண்டும்.

அத்தியாயம் நான்கு

''தேற்றரவாளனின் பண்பு''
(16:1-15)

பதினைந்தாம் அதிகாரத்தின் இறுதி வசனங்களை நாம் வாசிக்கும்போது, அடுத்த அதிகாரம் துவங்கும் வேளையிலும் இயேசுவானவரின் போதனையின் உள்ளடக்கத்தில் எந்த இடை வெளியும் காணப்படவில்லை என்பதை நாம் உணர வேண்டும். ''நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும். அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை'' (1-4).

பதினாறாம் அதிகாரத்தை நீங்கள் வாசிக்கும்போது, இந்த வேளையில் அவர், தாம் ஏன் அந்தச் சத்தியங்களை அவர்களோடு பகிர்ந்து கொள்கிறார் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறார். ''நீங்கள் இடறலடையாதபடிக்கு நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். காலம் வரும்போது நான் உங்களை எச்சரித்தேன் என்பதை நீங்கள் நினைவுகூரும் படியாக இவைகளை உங்களுக்குச் சொன்னேன். இந்தக் காரியங்களை நான் சொன்னபடியால் நீங்கள் துக்கப்படுகிறீர்கள். இன்னுமதிகமாகவும் நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்போது தாங்கமாட்டீர்கள்'' என்று இயேசுவானவர் அவர்களிடம் கூறினார்.

இந்த அதிகாரத்தின் துவக்க வசனங்களிலிருந்து, அவர்கள் ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்கப்படுவார்கள் என்கிற படியால் இயேசுவானவர் இந்தக் காரியங்களைக் கூறுகிறார் என்பது தெளிவாகிறது. ஒன்பதாம் அதிகாரத்தில் இயேசுவானவரால் பார்வையைப் பெற்ற பிறவிக்குருடனும் இவ்வாறு தான் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்பட்டான். அவர்களைக் கொல்லும் எவனும் தான் தேவனுக்கு ஊழியம் செய்வதாக நினைக்கும் காலம் வரும் என்று அவர் அவர்களை எச்சரித்தார்.

''அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்'' (3, 4).

இயேசுகிறிஸ்துவோடு கூட நீங்கள் உங்களை ஒருமுகப்படுத்திக் கொண்டிருக்கிறபடியால் எப்போதாவது துன்புறுத்தப்பட்டிருக்கிறீர்களா? இன்றும் உலகத்தில் பல பகுதிகளில் துன்புறுத்தப்படும் விசுவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் மேல் நாடுகளிலுள்ள சபைகளுக்காக ஜெபித்து வருகிறார்கள்; இந்த நாடுகளில் சபைகள் அரசின் தயவைப் பெற்றிருக்கின்றன, மற்ற நாடுகளிலுள்ள சபைகளைப் போல இவை துன்புறுத்தப்படுவதில்லை. துன்புறுத்தப்படும் விசுவாசிகள் தங்கள் அனுபவத்தின் மூலமாக தேவனோடு நெருக்கமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்; பல வழிகளில் அவர்கள் முதிர்ச்சியடைந்திருக்கிறார்கள். துன்புறுத்தலை அனுபவிக்காத விசுவாசிகளால் எவ்வாறு ஆவிக்குரிய முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் பெற முடிகிறது என்று அவர்கள் வியப்படைகிறார்கள்.

துன்புறுத்தலை அனுபவிக்காத ஒரு சபை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிப்பதில் வெற்றிபெற்று, இந்த உலகத்தில் அவருடைய சபையை நிறுவுமானால், சபை வரலாற்றிலேயே அதுதான் முதன் முதலில் நடைபெறும் ஒன்றாக இருக்கும் என்று சபை வரலாற்று அறிஞர் ஒருவர் கூறியிருக்கிறார்.

சபை வரலாற்றின் முதல் மூன்று நூற்றாண்டுகளில் விசுவாசிகள் துன்புறுத்தப்படுவதைத் தேவன் அனுபவித்ததற்குக் காரணம், சபை அப்போது வலுவாகவும், வல்லமையுள்ளதாகவும், ஆரோக்கியமுள்ளதாகவும் இருக்கவில்லை என்பதாக இருக்குமோ? இப்போது நான் வாழ்ந்து ஊழியம் செய்யும் இடத்தில் காணப்படும் சமாதானத்துக்காக நான் ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். ஆனால் பாடுகளும் துன்புறுத்தலும் வருமானால், நாம் பேதுருவின் வார்த்தைகளை நினைவில் வைத்திருக்க வேண்டும். நம்மைச் சோதிக்கும்படி நம் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று நாம் திகைக்கக்கூடாது என்று அவர் கூறியிருக்கிறார் (1 பேதுரு 4:12). தேவன் இப்படிப்பட்ட பாடுகளையும் துன்பங்களையும் அனுமதிக்கிறார்.

இயேசுவானவர் இந்த வார்த்தைகளைப் பேசிச் சில மணிகளுக்குள்ளாகத் துவங்கப் போகிற பாடுகளுக்காக, அவர் பதினொரு அப்போஸ்தலர்களையும் ஆயத்தம் பண்ணும் விதமாக, மேல் அறையில் கூறிய இந்த வார்த்தைகளையும் நினைவில் வைத்திருங்கள்.

பரிசுத்த ஆவியானவரின் மூன்று - அடுக்கு ஊழியம்

பதினாறாம் அதிகாரத்தின் வசனங்களை நாம் வாசிக்கும் போது இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களிடம் இவ்வாறு கூறுவதைக் காண்கிறோம்: ''இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீரென்று உங்களில் ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது. நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்.

''இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்ட யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப் படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்றேன். நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார்'' (5-16).

அவர்கள் அவரை இழந்துபோகப் போகிறார்கள் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியபடியால், அவர்கள் துக்கத்தில் ஆழ்ந்து போயிருந்தார்கள். ஆனால் இந்தப் பின்னணியில் பரிசுத்த ஆவியான வரைக் குறித்த பெரியதொரு வாசகத்தையும் நாம் காண்கிறோம்: ''நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்'' (16:7). இதை

இவ்வாறு கூறலாம்: ''நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன். நான் போவது உங்களுக்கு நன்மையாகவே இருக்கும். ஏனென்றால், நான் போகாவிட்டால் தேற்றரவாளன் உங்களிடத்தில் வரமாட்டார். ஆனால் நான் போனால், அவரை உங்களிடம் அனுப்புவேன்.''

இயேசுவானவர் இந்த உலகத்திலிருந்த போது அவரது தனிப்பட்ட ஈர்ப்புத் தன்மையைக் குறித்தும், அவர் தமது பூவுலக சரீரத்தோடு இங்கே இருந்தபோது நாம் அவரோடிருந்திருந்தால் அது எப்படியிருந்திருக்கும் என்றும் எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? ''அப்போது அவரோடு இருந்திருப்பது எனக்குப் பிடித்தமான காரியமாக இருந்திருக்கும்'' என்று நினைத்திருக்கிறீர்களா? அவருடைய சரீரத் தோற்றத்தைக் குறித்துச் சிந்தித்துப் பார்ப்பதை நான் விரும்புகிறேன். இந்தச் சுவிசேஷங்களிலும் தீர்க்கதரிசிகளின் நூல்களிலும் அவருடைய தோற்றத்தைக் குறித்துக் கிடைக்கும் செய்திகளின்மூலம் அவருடைய தோற்றத்தை ஓரளவு நம்மால் கணிக்க முடியும்.

சுவிசேஷத்தில் நமக்கு அறிமுகம் செய்யப்படும் இயேசுவானவர் முப்பது வயதானவர் என்பதை நாம் அறிவோம். அவரை ஒரு யூதராக எளிதாக இனம்கண்டுகொள்ளலாம். அவர் துக்கம் நிறைந்த மனிதராக இருப்பார் என்று தீர்க்கதரிசிகள் கூறுகிறார்கள். அவருடைய சாயல் மற்றெந்த மனிதருடையதை விடவும் அதிகக்கேடு அடைந்திருக்கும் என்றும் தீர்க்கதரிசிகள் கூறுகிறார்கள் (ஏசாயா 52:14). யூத வரலாற்றாசிரியராகிய யோசபஸ் இயேசுவானவர் பேதுருவைவிடவும் உயரத்தில் அதிகமானவராக இருந்தார் என்று கூறுகிறார். அவர்கள் அவரைச் சுற்றி நிற்கும் வேளையிலும் மற்றவர்களால் இயேசுவான வரைப் பார்க்க முடிந்தது.

அவருடைய தோற்றம் ஒரு சந்தோஷமான மனிதனின் சித்திரமாக இருந்தது என்று நாம் வாசிக்கும்போது சற்றே வியப்படைகிறோம். அவர் ஆயக்காரர் களோடும்பாவிகளோடும் சேர்ந்து போஜனபானம் பண்ணுகிறார் என்று அவரைக் குறை கூறினார்கள். ஒருவரது தோற்றம் அவரது பண்பை வெளிப்படுத்துகிறது. எனது படிப்பறையில் நான் சிரித்துக் கொண்டிருக்கும் இளவயது இயேசுவானவரின் படத்தை மாட்டி வைத்திருக்கிறேன். ''சரிக்கும் இயேசு'' என்று அந்த ஓவியத்துக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது.

அதைப் பார்க்கும் பலருக்கு இந்தச் சித்திரம் திகைப்பை அளிக்கிறது. அநேகர் இயேசுவானவரை அவர் உண்மையில் இருந்த வயதைவிட அதிக வயதானவராகவும், சோகமானவராகவும் தீவிரமான தோற்றம் கொண்டவராகவும் சித்திரிக்கிறார்கள். உலகத்தின் பாரமே அவருடைய தோள்களில் இருப்பதுபோல

அவர் காட்சியளிக்கிறார். யோசுவா என்ற புத்தகம் ''இன்று இயேசு நமக்கு நடுவே இருப்பாரானால் அவர் எப்படி இருப்பார்?'' என்ற கேள்வியை எழுப்புகிறது. நாம் இயேசுவானவரைச் சித்திரிப்பதில் ஒரு சார்பான எண்ணத்தைக் கொண்டிருக்கிறபடியால், அவருடைய தோற்றம் நிச்சயமாக நமக்கு வியப்பை அளிக்கும் என்றே நூலாசிரியர் முடிவாகக் கூறுகிறார்.

ஆனால் இந்த மனிதருக்கு இயேசுவானவர் கூறிய இறுதி வார்த்தைகள், அவர்கள் மூன்றாண்டு காலம் அவரோடு இருந்ததைவிட இன்னும் மேன்மையான அனுபவத்தைப் பெறுவார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அவர் கூறுவதின் சாராம்சம் இதுவே: ''இது உங்களுடைய நன்மைக்காகவே. நான் என் சரீரத்தை விட்டுவிட்டு தேற்றவராளனின் ஆள்தத்துவத்தில் உங்களிடம் திரும்புவது விரும்பத் தகுந்ததாகும்.''

இயேசுவானவர் மானிட சரீரத்தில் வாழ்ந்தபோது, எங்கும் இருப்பது போன்ற தமது சில தெய்வீகப் பண்புகளைத் தாமாகவே விட்டுக் கொடுத்தார். அவரால் ஒரே வேளையில் ஒரே இடத்தில் மட்டுமே இருக்க முடிந்தது. ஆனால் அப்போஸ்தலருக்கும், சபைக்கும், உங்களுக்கும் எனக்கும் உகந்ததான இந்த மாற்றத்துக்குப் பிறகு, அவரால் எங்கெல்லாம் விசுவாசி இருக்கிறானோ அங்கெல்லாம் ஒரே வேளையில் இருக்க முடியும். அதைத் தான் அவர் இங்கே கூறுகிறார். ''நான் போகாவிட்டால், நான் இந்தச் சரீரத்தை விட்டுவிடாவிட்டால், தேற்றரவாளனால் வர முடியாது. ஆனால் இதை நான் விட்டுவிட்டால் என்னால் அவரை உங்களிடம் அனுப்ப முடியும், அது உங்களுக்கு அதிக நன்மையாக இருக்கும். நான் போய் தேற்றரவாளனை அனுப்புவது உங்களுடைய நன்மைக்காகவேயாகும்'' என்றே இயேசுவானவர் கூறுகிறார் (7).

ஏன் அது அதிக நன்மையாக இருக்கும் என்பதையும் அவர் எடுத்துக் கூறுகிறார். ''அவர் வரும்போது அவர் பாவத்தைக் குறித்து உலகத்தை உணர்த்துவார்'' (8). அதாவது, அவர் உலகத்தின் குற்றத்தை வெளியரங்க மாக்குவார். குற்ற உணர்வு என்பது எப்போதுமே எதிர்மறையான உணர்வாக இருக்கவேண்டும் என்பதில்லை. குற்ற உணர்வு ஒரு வகையில் ஆரோக்கியமானது என்றும் நாம் கூறலாம். குற்ற உணர்வைப் பெறுகிறவன் ஓரளவு நன்னெறி நேர்மை உடையவனாயிருக்கிறான். சில காரியங்கள் முற்றிலும் தவறானவை, சில காரியங்கள் முற்றிலும் நன்மையானவை என்ற நம்பிக்கையுடையவனா யிருக்கிறான். குற்ற உணர்வையே அனுபவிக்காத ஒருவன் எது சரி எது தவறு என்பதைக் குறித்தே அலட்சியமாக இருக்கிறான். அவன் நன்னெறியில் நம்பிக்கை வைத்திருப்பதில்லை.

இது பெரும்பாலும் ''நன்னெறிச் சார்பியல் கோட்பாடு'' (Moral Relativity) என்று அழைக்கப்படுகிறது. அதாவது நன்னெறி சார்பாக முழுமையானது எதுவுமே கிடையாது என்று கூறுவதாகும். இன்று அநேகர் சரியானது, தவறானது என்று எதுவும் கிடையாது என்று சொல்லி, தங்கள் சொந்தக் குற்ற உணர்வையும் மற்றவர்களின் குற்ற உணர்வையும் தவிர்க்க முயலுகிறார்கள். அவர்கள் சரி, தவறு என்றெல்லாம் எதுவுமில்லை என்கின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் எழுப்புதலைக் குறித்து வாசிப்பது எனக்குப் பிடித்தமான காரியமாகும். இங்கிலாந்தில் ஜார்ஜ் ஒயிட்பீல்டும், வெஸ்லியும், அமெரிக்காவில் யோனத்தான் எட்வர்ட்சும் இயல்புக்கு அப்பாற்பட்ட (supernatural) விளைவுகளோடு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். ஜார்ஜ் ஒயிட்பீல்டு அமெரிக்காவுக்கு வந்தபோது, நியூஇங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு விவசாயி அவருடைய பிரசங்கத்தைக் கேட்க நேர்ந்தது. ''அவர் பேசத் துவங்கியபோது, என் இருதயத்தில் பயங்கரமான வேதனையை நான் உணர்ந்தேன். அங்கே அந்த வயலிலேயே நான் முழங்காலில் விழுந்தேன். அழுது, அறிக்கையிட்டு, மனந்திரும்பி, என் பாவத்தை விட்டுவிட்டேன்'' என்று அந்த விவசாயி எழுதியிருக்கிறார்.

இவ்வாறுதான் பரிசுத்த ஆவியானவர் இந்த உலகத்தின் பாவத்தையும் குற்றத்தையும் வெளியரங்கமாக்குகிறார். ஒருவர் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் கேட்கும்போது ஒரு விவசாயி ஏன் தனது இருதயத்தில் அதிகமான வேதனையை உணரவேண்டும்? இயேசுவானவர் கூறியபடி அது பரிசுத்த ஆவியானவரின் பல செயல்பாடுகளில் ஒன்றாக இருக்கிறது. அந்த விவசாயியின் இடத்தில் இருக்கும் பலர் குற்ற உணர்வைப் பெறாமல் இருக்கலாம். அவர்கள் அதே சுவிசேஷச் செய்தியைக் கேட்டுக் கேலிசெய்து சரிக்கலாம்.

அமெரிக்காவில் இதே எழுப்புதலின் ஒரு அங்கமாக யோனத்தான் எட்வர்ட்ஸ் ''கோபமுள்ள தேவனுடைய கரங்களில் பாவிகள்'' என்ற தலைப்பில் பிரசங்கம் செய்தார். நியூஇங்கிலாந்தில் இருந்த தனது சபையில் அவர் இந்தச் செய்தியைக் கொடுத்தபோது, மக்கள் தங்கள் பாவங்களினால் உணர்த்தப் பட்டவர்களாக எதிரிலிருந்த நாற்காலியைப் பற்றிக் கொண்டார்கள். தாங்கள் நரகத்துக்குச் சென்றுகொண்டிருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பை அனுபவிப்பதுதான் என்று திட்டவட்டமாக உணர்ந்தார்கள்.

யோனத்தான் எட்வர்ட்சின் மீதிருந்த பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் இப்போது இல்லாமல், அதே பிரசங்கத்தை நாம் இப்போது செய்வோமானால்,

மக்கள் அதை ஒரு வேடிக்கையான காரியமாகவே எடுத்துக்கொள்வார்கள் என்றே நான் நினைக்கிறேன். பரிசுத்த ஆவியானவரின் ஊழியமும் செயல்பாடுமே இந்த மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அவருடைய வருகை பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு எவ்வளவு உறுதுணையாக இருக்கும் என்பதையே இயேசுவானவர் எடுத்துக் கூறினார். நடபடிகள் நூலில் கூறப்பட்டுள்ளபடி, சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட போது இதே அற்புதமான விளைவுகள் ஏற்பட்டதை நாம் காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கம் தொடங்கி, சபையின் இந்த முதல் தலைமுறையின் வரலாற்றில் எங்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது இயல்புக்கு அப்பாற்பட்ட காரியங்கள் நடந்ததை நாம் காண்கிறோம் (அப். 2:37; 1044-46).

நாம் கிறிஸ்துவுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்கும் தொடர்ந்து ஒரு கலவையான செவிசாய்ப்பு காணப்படுவதைப் பார்க்கிறோம். வேறுபாட்டை உண்டாக்குவது எது? சிலர் தங்கள் இருதயத்தில் வேதனையை உணர்ந்து, இரட்சிப் புக்காகத் தேவனை நோக்கிக் கதறும் வேளையில், ஏன் சிலர் கேலிசெய்து சிரிக்கிறார்கள்? இந்த இரண்டிலும் காணப்பட்ட வேறுபாட்டுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஊழியமும் செயல்பாடுமே காரணமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.

தேற்றரவாளன் வரும்போது அவர் மூன்று காரியங்களைக் குறித்து, உலகத்தின் குற்றத்தை உணர்த்துவார் அல்லது வெளியரங்கமாக்குவார் என்று இயேசுவானவர் கூறினார்: பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு. ''அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் குறித்தும், கண்டித்து உணர்த்துவார்'' (9-11).

பரிசுத்த ஆவியானவர் மூன்று வழிகளில் மக்களின் பாவத்தைக் குறித்து உணர்த்துவார் அல்லது அவர்களின் குற்றத்தை வெளியரங்கமாக்குவார். இயேசுவானவர் கூறியபடி, அவர்கள் அவரை விசுவாசியாததின் பாவத்தை அவர்களுக்கு உணர்த்துவார். இயேசுவானவர் நிக்கொதேமுவிடம் தாம் தேவனுடைய ஒரேபேறான குமாரனாக இருப்பதையும், தேவனுடைய ஒரே இரட்சகராகவும், உலகத்தின் பாவப் பிரச்சினைக்குத் தேவனுடைய ஒரே தீர்வாகவும் இருப்பதையும் வெளிப்படுத்தியபோது, அவர் தம்முடைய மாபெரும் கோட்பாட்டுறுதி மிக்க வாசகத்தைக் கூறினார் என்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா? (யோவான் 3:14-21). இந்தக் கோட்பாட்டை

உறுதிப்படுத்தியபிறகு இயேசுவானவர் இன்னுமதிகக் கோட்பாட்டுறுதி கொண்ட வாசகங்களையும் கூறினார். அவைகளின் சாராம்சம் இதுவே: ''இந்த உரிமைகொண்டாடலை விசுவாசிப்பவன் நித்திய வாழ்வைப் பெறுவான். ஆனால் நான் கூறும் உரிமைகொண்டாடலை விசுவாசிக்காதவன் குற்றத்தீர்ப்பை அடைவான். அவனுடைய பாவங்களின் காரணமாக அல்ல, நான் தேவனுடைய ஒரே பேறான குமாரன் என்றும், தேவனுடைய ஒரே இரட்சகர் என்றும் நான் உரிமை கொண்டாடும்போது, அதை விசுவாசியாதபடியால் அவன் இந்தத் தீர்ப்பைப் பெறுகிறான்'' (3:18).

பவுல் அப்போஸ்தலன் ஒரு சிறந்த சுவிசேஷப் பகுதியில், தேவன், கிறிஸ்துவில் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார் என்றும், அவர் இனிமேலும் அவர்களின் பாவங்களை அவர்களுக்கு விரோதமாகக் கொண்டு வருவதில்லை என்றும் எழுதியிருக்கிறார். அவர் நமக்கு இந்தச் செய்தியையும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தையும் ஒப்படைத்திருக்கிறார். நாம் உலகத்தாரிடம் அவர்கள் தங்கள் பாவங்களுக்காக நரகத்துக்குச் செல்வார்கள் என்று கூறுவதற்காகச் செல்ல வேண்டியதில்லை. ஒரு நற்செய்தியை அவர்களுக்குக் கூறும்படியாகச் செல்ல வேண்டும்: அதாவது நீங்கள் நரகத்துக்குச் செல்ல வேண்டியதில்லை. ஏனென்றால், இயேசுவானவர் சிலுவையில் மரித்த கணத்திலிருந்தே பிதாவாகிய தேவன் உங்கள் பாவங்களை உங்களுக்கு விரோதமாகக் கொண்டு வருவதில்லை. அவர் அனைத்தையும் தமது ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மீது சுமத்தினார்'' (2 கொரிந்தியர் 5:13-6:2).

இயேசுவானவர் மற்றும் பவுலின் இந்த வார்த்தைகளை நாம் புரிந்துகொண்டு விசுவாசிப்போமானால், மக்களில் அநேகர், தங்கள் பாவங்களுக்காக நரகத்துக்கு அனுப்பப்பட போவதில்லை என்று நாம் உணர்ந்து கொள்வோம். அவர்கள் தாம் செய்த பாவங்களுக்காக நரகத்துக்குச் செல்லமாட்டார்கள். அவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்ற ஒரே பாவத்துக்காக அவன் நரகத்துக்குச் செல்ல நேரிடும். அவன் இயேசுகிறிஸ்துவையும் அவர் யார் என்பதையும், அவருடைய போதனைகளையும், வாழ்க்கைத் தத்துவத்தையும் இழிவுபடுத்தினான். அவன் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்காத படியால் நரகத்துக்குச் செல்வான்.

இயேசுவானவர் கூறுகிறபடி, நம்மைக் குற்றப்படுத்தும் ஒரே பாவம், இயேசுகிறிஸ்துவே தேவன் அனுப்பிய ஒரே இரட்சகர் என்று விசுவாசியாத பாவமாகும். நிக்கொதேமுவுக்குத் தாம் உணர்த்திய கோட்பாட்டை இங்கே அவர் மறுபடியுமாக உறுதிப்படுத்துகிறார். தம்மில் விசுவாசம் வைக்காத பாவத்தைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவார் என்று அவர் தமது

அப்போஸ்தலர்களிடம் கூறினார். பரிசுத்த ஆவியானவர் உண்மையில் மூன்று காரியங்களைக் குறித்து மக்களை உணர்த்துவார்: பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு. இதில் முதலாவது கிறிஸ்துவை நமது ஆண்டவராகவும் இரட்சகராகவும் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாத பாவமாகும். ''நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக் குறித்தும் ... உணர்த்துவார்'' (10). எது சரி, எது தவறு என்பதை நாம் எப்படி அறிவோம்? எது சரி, எது தவறு என்பதற்கு ஒரு முழுமையான தகுதிநிலை இருக்கிறதா? கிறிஸ்துவைப் பயபக்தியுடன் பின்பற்றுகிறவர்கள் இதற்குப் பதிலாக பத்துக் கற்பனைகளையும், மலைப் பிரசங்கத்தையும் நினைக்கிறார்கள். பவுலைப் பொருத்த வரையில் நீதியில் நம்மை அறிவுறுத்தும்படியாகவே அனைத்து வேத வசனங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன (2 தீமோ. 3:16, 17). முழு வேதாகமமும் எது சரி, எது தவறு என்பதை நமக்குக் காட்டுகிறது.

ஆனால், இந்தச் சுவிசேஷத்தின் துவக்கத்தில் யோவான், எந்த மனிதரும் தேவனை ஒருக்காலும் கண்டிராதபோதிலும், ஒரேபேறான குமாரன் அவரை முழுமையாக அறிவித்திருக்கிறார் என்று எழுதியிருக் கிறார். தேவன் எவ்வாறு மனிதனுக்குத் தம்மை வெளிப்படுத்தப்பட முடியுமோ அவ்வளவு முழுமையாக அவரை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தச் சுவிசேஷத்தில் ஜீவனுள்ள வார்த்தையாக நாம் சந்திக்கும் இயேசுவானவர், நீதி குறித்த தேவனுடைய முழுமையான நீதியின் தகுதிநிலையாக இருக்கிறார். அவருடைய வாழ்க்கையே எது சரி, எது தவறு என்பதற்கு நடமாடும் வரையறையாக இருக்கிறது.

ஆங்கில நாட்டுக் கவிஞர் தான் எழுதிய கவிதை ஒன்றில், பாவியான ஒரு போர்வீரன் போரில் மரித்து, தவறாகப் பரலோகத்துக்குக் கொண்டு செல்லப்படுவதாக எழுதியிருக்கிறார். அவன் இயேசுவானவரைச் சந்தித்தபோது, அவரை நிமிர்ந்து பார்க்கக்கூட அவனுக்குத் துணிவில்லை. ''ஐயா, என்னைத் தயவுசெய்து நரகத்துக்கு அனுப்பிவிடுங்கள்'' என்று அவன் கெஞ்சினானாம். இயேசுவானவரின் தோற்றமும் அவருடைய வாழ்க்கையும் இங்கே அவர் இருந்தபோது பரிசுத்தமானதாக இருந்த படியால், அவர் நீதிக்கான முழுமையான தகுதிநிலையாக இருந்தது மட்டுமின்றி, மக்களை அவர்களுடைய அநீதியைக் குறித்தும் அவர் உணர்த்தினார். புதிய ஏற்பாட்டை நாம் வாசிக்கும்போது, வரலாற்று பூர்வமான இயேசுவின் நீதியான வாழ்க்கை நமது தனிப்பட்ட அநீதியைக் குறித்து இன்றும் நமக்கு உணர்த்துகிறது.

இங்கே இயேசுவானவர் தாம் பிதாவிடம் திரும்பிச் செல்லுகிற படியாலும், அவர்களால் தம்மை இனிப் பார்க்க முடியாது என்கிற படியாலும், பரிசுத்த

ஆவியானவர் மக்களுக்கு நீதியைக் குறித்து உணர்த்தும் பணியை எடுத்துக் கொள்வார் என்றும் கூறுகிறார் (16, 17, 19). அவர் உலகத்தில் இருக்கும் வரையில், நீங்கள் சரியான மதிப்பீடுகள் எவை என்று அறிய விரும்பினால், அவரைப் பின்பற்றினால் போதுமானது. அவர் ஒன்றை மதிப்புள்ளதாக அறிவித்தால், நீங்களும் அதை மதிப்புள்ளதாக அறிவிக்கலாம். நீங்கள் வாழ்க்கை குறித்த சரியான தத்துவத்தை அறிய விரும்பினால், அவர் தமது எளிய ஆனால் பொருள்பொதிந்த போதனையைக் கொடுக்கும்போது அதற்குச் செவி கொடுக்க வேண்டும்.

நன்னெறிப்படி எது சரியானது என்று நீங்கள் அறிய விரும்பினால், எது சரி என்பதற்கு இயேசுவானவரின் வாழ்க்கை முழுமையான தகுதிநிலையாக இருந்தது. ஆனால் இப்போதோ அவர் ‘‘நான் போகிறேன். நான் என் பிதாவிடம் திரும்பிப் போகிறேன். நீங்கள் என்னை இனிமேல் காணமாட்டீர்கள். நான் இங்கே இராத வேளையில், பரிசுத்த ஆவியனவரே எது சரி எது தவறு என்பதை இந்த உலக மக்களுக்கு உணர்த்துவார்’’ என்று கூறுகிறார் (7-8).

பிறகு அவர் பரிசுத்த ஆவியானவர் நியாயத்தீர்ப்பைக் குறித்து உணர்த்துவார் என்று முன்னறிவிக்கிறார். ஏனென்றால் இப்போது இந்த உலகத்தின் அதிபதி குற்றஞ்சாட்டப் பட்டவனாக நிற்கிறான். சாத்தான் தோற்கடிக்கப்பட்டுவிட்டான் என்று இயேசுவானவர் இப்போதே அறிவிக்கிறார்! இப்போது உலகத்தில் இயேசுகிறிஸ்துவின் நாமத்துக்கு மேலான வல்லமை எதுவும் கிடையாது. உலகத்தில் நடப்பதின் பெரும்பகுதியைச் சாத்தானின் சக்தி கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாலும், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படும் சீஷனுக்கு உயிர்த்தெழுந்து ஜீவிக்கும் கிறிஸ்துவில் காணப்படும் வல்லமையை விட மேலான வல்லமை எதுவும் கிடையாது.

‘‘உலகத்தின் அதிபதி’’ அல்லது சாத்தான் பரிசுத்த ஆவியானவரால் தோற்கடிக்கப்படுவான் என்று இங்கே அவர் அறிவிக்கிறார். இயேசுவானவரின் இந்த வார்த்தைகளைக் கருத்தில் கொண்டே அப்போஸ்தலனாகிய யோவான் இவ்வாறு எழுதினார்: ‘‘உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்’’ (1 யோவான் 4:4). நாம் தனிப்பட்ட முறையில் சாத்தானால் தோற்கடிக்கப்பட்டவர்களாகவோ அல்லது கட்டுப்படுத்தப்படுகிறவர்களாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. இயேசுவானவர் இந்த வார்த்தைகளைப் பேசும்போது பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைக் குறித்த மேன்மையான அறிக்கையைக் கொடுக்கிறார்.

பிறகு அவர் ‘‘இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க

மாட்டீர்கள்’’ என்று கூறினார் (12). இயேசுவானவரின் ஒவ்வொரு வாசகமும் ஆழமான அர்த்தத்தைக் கொண்டதாகும். அவருடைய இந்த வசனங்களில் எந்த வசனத்தைக் குறித்தும் நாம் பக்கம் பக்கமாக எழுத முடியும்.

தங்களுக்குச் செவிகொடுக்கிறவர்கள் ஒவ்வொரு முறை தேவனுடைய வார்த்தையைக் கேட்கும்போதும், அதைக் கற்றுக் கொள்வதற்குக் குறுகிற திறனையே அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை ஒவ்வொரு பிரசங்கியும் போதகரும் உணர வேண்டும். ஒரே வேளையில் அளவுக்கு அதிகமாகப் போதிப்பது விரும்பிய பயனைத் தராது. சீஷர்களை உருவாக்குவதில் இயேசுவானவர் பரிபூரணமான தலைவராக இருந்தார். குறுகிய காலத்தில் அவர்கள் தாங்கள் கற்றுக் கொண்டதைச் செய்வதின் மூலம், மேலும் கற்றுக்கொள்ளும்படி செய்வதே இயேசுவானவரின் வழிமுறையாக இருந்தது. அவர்களுடைய பெரும்பாலான கல்வி செயல் முறைக் கல்வியாகவே இருந்தது; அவர் அதிகமான விரிவுரைகளைக் கொடுக்கவில்லை. எனவேதான் அவர் கேள்விகளையும் உரையாடலையும் ஊக்குவித்தார். ஒரு குறிப்பிட்ட வேளையில் அவர்களால் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியும் என்பதைத் திட்டவட்டமாகப் புரிந்து கொண்டிருந்தார்.

அந்த வேளையில், அந்தப் பின்னணியில், அவர்களால் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியும் என்று தான் உணர்ந்திருப்பதை அவர்களுக்கு அறிவித்த பிறகு, அவர் ‘‘சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டயாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்’’ என்று கூறினார் (13). பரிசுத்த ஆவியானவரின் இந்த வருங்கால ஊழியத்தைக் குறித்த தீர்க்கதரிசனம், இயேசுவானவரின் உவமைக் கதைகளிலும், ஒலிவ மலைப் பிரசங்கம் (மத்தேயு 24, 25) போன்ற பிரசங்கங்களிலும் அவரது இரண்டாம் வருகையைக் குறித்துப் போதித்த போதனைகளையும் நிச்சயமாக உள்ளடக்கி யிருக்கிறது. என்றாலும், நிச்சயமின்மையும் அபாயமும் நிறைந்த ஒரு காலகட்டத்துக்குள் இந்த அப்போஸ்தலர்கள் நுழையப் போகிறார்கள் என்ற உண்மையையும் அது குறித்தது.

தாங்கள் அனைவருமே இயேசுவானவருக்காக இரத்தச் சாட்சிகளாக மரிக்க வேண்டியிருக்கலாம் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள் - இந்தச் சுவிசேஷத்தின் ஆசிரியராக யோவானைத் தவிர மற்ற அனைவரும் அப்படியே மரித்தார்கள். ஆனால், சுவிசேஷத்துக்கு விரோதமான ஒரு கலாச்சாரத்தில், அவருடைய பிரதான கட்டளையை நிறைவேற்றுவதற்கான இயேசுவானவரின் செயல் திட்டத்தையும் திட்டங்களையும் அவர்கள் எப்படி அறிவார்கள்? அவர்

கைதுசெய்யப்பட்டு, கொல்லப்பட்டால் அவர்கள் என்ன செய்யவேண்டும்? இயேசுவானவர் இதற்குக் கூறும் பதில் என்ன? வருங்காலத்தில், அவர் அவர்களை விட்டுச் சென்றபிறகு பரிசுத்த ஆவியானவர் இவைகளை அவர்களுக்கு உணர்த்துவார் என்பதே அவருடைய பதிலாகும்.

நாம் நடபடிகளின் நூலை வாசிக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் வருங்காலப் பங்கு மற்றும் செயல்பாட்டைக் குறித்த இந்தத் தெளிவான முன்னறிவிப்பு அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறுவதை நாம் காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் வந்தபோது அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறியாத நிலையில் இருந்தார்கள்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குத் தேவையான ஞானத்தைக் கொடுத்தார்; செய்யும்படியான கிருபையையும் துணிவையும் கொடுத்தார். தாம் அவர்களுக்குக் கொடுக்கும் ஞானத்தின்படி எவ்வாறு செயலாற்றுவது என்பதற்கான கிருபையையும் அவர் அருளுகிறார். மேலும் வரவிருப்பதையும் அவர் அவர்களுக்குக் காட்டுகிறார். அப்போஸ்தலர்களால் எழுதப்பட்ட நிருபங்களின் உண்மையான ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே. இந்த நிருபங்கள் வரவிருக்கும் காரியங்களை அற்புதமான வகையில் அறிவிக்கின்றன.

உங்களுக்கும் எனக்கும் தனிப்பட்டதும், தியானரீதியானதும், செயல்பூர்வமானதுமான செயல்படுத்துதல் இதுவே: இயேசுவானவர் இந்த வார்த்தைகளில் தீர்க்கதரிசன ரீதியாக அறிவிக்கும் அதே பரிசுத்த ஆவியானவர் இன்று நமது வாழ்க்கையிலும் அதே பங்கையும் செயல்பாட்டையும் பெற்றிருக்க முடியும். நாம் வேதவசனங்களைப் படிப்பதின்மூலம் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த காரியங்களை அவரால் காட்ட முடியும். இன்றும், நாளையும், மறுநாளும், நாம் பெற்றிராத ஞானத்தை நமக்குக் கொடுத்து, அதைச் செயல்படுத்துவதற்கான கிருபையையும் துணிவையும் கொடுத்து, நமது வாழ்க்கையை வழிநடத்த அவரால் முடியும். எதைச் செய்வது என்று நாம் அறியாமலிருக்கும்போது, ஞானத்துக்காகத் தேவனிடம் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு கூறுகிறார்; ''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்... தேவனிடத்தில் கேட்கக் கடவன்.'' நாம் வேண்டிக்கொள்ளும் பூரணமான ஞானத்தை தேவன் நமக்கு அருளுவார் என்று அவர் வாக்குத்தத்தமாகக் கூறுகிறார் (யாக். 1:5).

தேவனுடைய உதவியில்லாமல் நம்மால் அந்த ஞானத்தைச் செயல்படுத்த முடியாது என்று நாம் உணரும்போது, அவர் நமக்குக் கொடுக்கும் ஞானத்தைச்

செயல்படுத்துவதற்கான கிருபையையும் நமக்குக் கொடுப்பார். அவருடைய உதவியில்லாமல் நம்மால் ஞானத்தைச் செயல்படுத்த முடியாது என்று உணரும்போது தேவன் சகலவித கிருபையையும் நமக்குக் கொடுப்பார் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். ''நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாக இருக்கும் படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (2 கொரி. 9:8).

பரிசுத்த ஆவியானவரின் வருங்கால ஊழியத்தைக் குறித்த செய்திகளைப் பகிர்ந்து கொண்ட பிறகு இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களிடம் ''நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள்'' என்று கூறினார் (16). இப்போதும் அவர் கேள்வி கேட்கும்படி அவர்களைத் தூண்டுகிறார் என்பது தெளிவாகிறது. ''அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதுமன்றி, கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.''

நான் ஏற்கனவே கூறியபடி, இந்த உரையாடல் முழுவதிலும் அவர் தாம் மரிக்கப் போவதைப் பற்றிக் கூறியது மட்டுமின்றி, தமது மரணத்துக்குப் பிறகு அவர்களோடுள்ள உறவு நெருக்கமாகும் என்றும் அவர் சொல்லிக் கொண்டிருந் தார். நமக்கு அவர் என்ன கூறுகிறார் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. என்றாலும், அந்த மனிதர்களின் இடத்தில் உங்களை வைத்துப் பார்ப்பீர்களானால், அவர் கூறியதைப் புரிந்து கொள்வது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதை உங்களால் உணரமுடிகிறது அல்லவா?

''கொஞ்சக் காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள்'' என்பதைக் குறித்து அவர்கள் கேள்விகளைக் கேட்டபோது, ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுக்கும் அற்புதமான எடுத்துக்காட்டை அவர் எடுத்துக் கூறுகிறார் (21-22). இது அவர்கள் அவரைக் காணாதிருக்கும் கொஞ்சக் காலத்தைப் பற்றியதாகும்; அப்போது அவர் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டு, அவருடைய உயிர்த்தெழுதலுக்கு முன்பாக அடக்கம் பண்ணப்பட்டிருப்பார்.

அவர் தம்முடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு நாற்பது நாட்கள் அவர்களோடிருந்து, தாம் உயிரோடிருப்பதை தெளிவான திருஷ்டாந்தங் களினாலே

அவர்களுக்குக் காண்பித்தபோது, அதிக வேதனைக்குப் பின் ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்கும் ஒரு பெண் அடையும் சந்தோஷத்தை இவர்களும் பெற்றார்கள். தனது குழந்தையின் பிறப்பினால் கிடைக்கும் சந்தோஷம் அந்தத் தாய் அதுவரை அனுபவித்த வேதனைகளை மறக்கும்படி செய்வதைப்போல, சிலுவையில் அவருடைய மரணத்தின் மூலமாக அவர்கள் பெற்றிருந்த வேதனையை இந்தச் சந்தோஷம் மறந்து விடச் செய்யும். இந்த சந்தோஷம் ஒருபோதும் அவர்களைவிட்டு எடுக்கப்படாது. அப்போது அவர்கள் தம்மிடம் எந்தக் கேள்வியும் கேட்கமாட்டார்கள் என்றும் அவர் கூறுகிறார்.

சீஷர்களின் ஜெபத்தைப் போலவே (''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பரம பிதாவே'' மத்தேயு 6:9-13), அவர்கள் ஜெபிக்கும்போது பிதாவானவரை நோக்கி ஜெபிக்கவேண்டும் என்றும், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் பிதாவானவரிடம் விண்ணபங்களை ஏறெடுக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். தமது நாமத்திலேயே அவர்கள் பிதாவான வரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும் என்று அவர் போதிக்கிறார். நமது தனிப்பட்ட மற்றும் கூட்டு ஜெபத்தைக் குறித்தக் காரியங்களை இந்தப் பகுதி கூறுகிறபடியால் இது முக்கியமான பகுதியாக இருக்கிறது. ஆண்டவர் இந்த அப்போஸ்தலர்களுக்குப் போதித்தது போல நாம் ஜெபிக்கும்போது நாம் பிதாவானவரிடம் (இயேசுவிடம் அல்ல) ஜெபிக்கிறோம், இயேசுவானவரின் நாமத்தில் ஜெபிக்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் ஆங்காங்கே காணப்படும் வசனங்களைக் கொண்டால் ஜெபம் என்றால் நம் தேவைப் பட்டியலைக் கையில் எடுத்துக்கொண்டு தேவனிடம் அதை ஒப்புவித்து நமக்கு வேண்டியதைக் கேட்கலாம் என்ற எண்ணத்தைப் பெறலாம். ஆனால் இதுவே ஜெபத்தைக் குறித்த நமது கருத்தாக இருக்குமானால் நாம் கிறிஸ்து கூறுவதுபோன்ற ஜெபத்தின் சாராம்சத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்றே அர்த்தமாகும்; இயேசுவான வரின் நாமத்தில் ஜெபிப்பது என்றால் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இயேசுவானவரின் நாமத்தில் ஜெபிப்பது என்றால், இயேசுவானவர் யாராக இருந்தார், யாராக இருக்கிறார் என்பதின் சாராம்சத்தோடு ஒத்துப்போகும் வகையில் ஜெபிப்பதாகும். ''ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படியே ஆகக் கடவது'' என்பதே இயேசுவானவரின் திட்ட வட்டமான ஜெபமாக இருந்தது (மத்.26:39). இயேசுவானவர் ஜீவித்து ஜெபிப்பதைப் போல நாம் ஜெபிக்க வேண்டுமானால், தேவனுடைய சித்தத்துக்கு இசைவாக ஜீவிப்பதாகும்.

இயேசுவானவரின் நாமத்தில் ஜெபிப்பது என்றால், அது தேவனுடைய இருதயத்தைத் திறக்கும் ஏதோ மந்திரக்கோல் போல விரும்பிய எதையும்

கேட்பது அல்ல. அவருடைய நோக்கங்களுக்கு ஏற்ப நமது தேவைகளைக் குறித்த விண்ணப்பங்களை ஏறெடுப்பதாகும். பவுல் அப்போஸ்தலனும் இதே கருத்தைப் போதிக்கும்போது இந்த அருமையான வாக்குத்தத் தத்தையும் கொடுக்கிறார்: ''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்ட வர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோமர் 8:28).

எடுத்துக்காட்டாக, நாம் அவருடைய பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, உலகத்தில் அவருடைய அருட்பணியின் நிறைவாக அவருடைய சபையைக் கட்டியெழுப்பும்போது, அப்போது நாம் தேவனுடைய சித்தத்துக்கு ஏற்றபடி எதையாவதுகேட்போமானால், அதை நாம் பெற்றுக் கொள்வோம். மக்கள் சுவிசேஷத்தை விசுவாசிக்கும்போதும், உயிர்த்தெழுந்த இயேசு இந்த உலகத்தில் தமது சபையைக் கட்டும்போதும், நாம் அவரோடு உறவுகொண்டிருக்கும் போதும் நமது சந்தோஷம் நிறைவாக இருக்கும். நாம் இயேசுகிறிஸ்துவின் மெய்யான சீஷர்களாக இருப்போமானால் நாம் விரும்புவது அனைத்தும் இதுவேயாகும்.

இந்தப் போதனையை அவர் முடித்துவைக்கும்போது, ''இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக் குறித்து வெளிப்படையாய் உங்களுக்கு அறிவிப்பேன். அந்த நாளிலே நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வேனென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்தி லிருந்து புறப்பட்டு வந்தேனென்று விசுவாசிக்கிறபடியினால் பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன்'' என்று கூறினார். (25-28).

பிறகு இயேசுவானவரின் சீஷர்கள் அவரிடம் ''இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினாவ வேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதனாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள். இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள். இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும், நான்தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.

''என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாகும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்'' (29-33). இயேசுவானவரின் மேல் அறைப் பிரசங்கம் இப்படியாக முடிகிறது.

தாம் உவமைகளாய் அவர்களுடனே பேசுவதாகக் கூறியபோது, அவர் தனது உவமைக்கதைகளையும், ஆழமான அர்த்தம்கொண்ட உருவங்களையும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உருவகங்களையும், உவமைக்கதையையும், உருவகக் கதையையும் பயன்படுத்தி வந்திருக்கிறார். ஆனால் இப்போது இனி தான் அவர்களோடு வெளிப்படையாய்ப் பேசும் காலம் வரும் என்று கூறுகிறார் (25). இந்த வேளையிலும் கூட அவர் பல ஆழமான சத்தியங்களை அவர்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்றே நான் நினைக்கிறேன்.

என்றாலும் அவர்கள் அவரிடம் ''இதோ, இப்பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படையாய்ப் பேசுகிறீர். நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மை வினவ வேண்டுவதில்லையென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதனாலே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்கிறோம் என்றார்கள்'' (29). இந்தப் பகுதி அதிகமான முக்கியத்துவம் கொண்டதாக இருக்கிறது. மற்றவர்கள் அவரை மறுதலித்தாலும் தான் அவரை மறுதலிக்கமாட்டேன் என்று பேதுரு பெருமையடித்துக் கொண்டபோது இயேசுவானவரின் முகபாவனையும், குரலின் தொனியும் எப்படியிருந்தது என்று நமக்குத் தெரியாது. இப்போதும், மூன்றாண்டுகள் அவரோடு நெருக்கமான உறவு கொண்டு பயிற்சியைப் பெற்ற பிறகு இறுதியாக, அவர்கள் தாங்கள் விசுவாசிப்பதாகக் கூறியபோதும் அவருடைய முகபாவனை எப்படியிருந்திருக்கும் என்று நமக்குத் தெரியாது. அதிகமான மனதுருக்கம் மற்றும் அன்போடு, கண்களில் ஒளியோடும், உதட்டோரத்தில் புன்னகையோடும் அவர் ''அப்பாடா, கடைசியாக நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்'' என்று கூறியிருப்பார் என்றே நான் நினைக்கிறேன்.

பிறகு அவர் அச்சுறுத்தும் ஒரு முன்னறிவிப்பைக் கொடுக்கிறார்; அது மிக விரைவில் நடக்கப்போகிறது. மற்ற சுவிசேஷங்களில் நாம் பார்க்கும்போது, இந்த வேளையில் யூதாஸ் சமயத்தலைவர்களோடும் போர்வீரர்களோடும் வருவான் என்று நாம் அறிகிறோம். அப்படி நேரிடும்போது என்ன நடக்கும் என்று அவர் கூறுவதைக் கவனியுங்கள்: ''இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்;

அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும், நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்.'' பேதுரு இயேசுவானவரை மறுதலித்துவிட்டான் என்று அவனை மட்டும் குறைகூறாதீர்கள். இயேசுவானவர் கைதுசெய்யப் பட்டபோது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப்போனார்கள் (மத்.26:56; மாற்கு 14:50). இயேசுவானவர் கைதுசெய்யப்பட்டபோது, இயேசுகிறிஸ்துவின் சபையின் உறுப்பினர் எண்ணிக்கை பூஜ்யமாகவே இருந்தது.

பவுல் அப்போஸ்தலனுக்கும் இதே காரியம் நேரிட்டது. அவரது இறுதி உயிலாகவும் ஆகமமாகவும் கருதப்படும் 2 தீமோத்தேயு நிருபத்தில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறார்: ''நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக'' (2 தீமோ. 4:16). அவரும் தான் தனித்திருக்கப்போவதில்லை என்று கூறுகிறார்: ''கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று... என்னைப் பலப்படுத்தினார்'' (17). இயேசு வானவர் இவ்வாறு கூறுகிறார்: ''இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப்போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்'' (யோவான் 16:32).

''இப்பொழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்'' என்று இயேசுவானவர் கூறியபோது, உண்மையில் அது ''அப்படியானால், இப்போது நீங்கள் மெய்யாகவே விசுவாசிக்கிறீர்களா?'' என்ற கேள்வியாகவே இருந்திருக்க வேண்டும். அல்லது ''இப்போதாவது நீங்கள் என்னை விசுவாசிக்கிறீர்களா?'' என்றிருக்கலாம். இந்த மனிதரோடு அவர் மூன்றாண்டுகளைச் செலவழித்தபிறகு இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். அப்போஸ்தலர் கள் எப்போது உண்மையில் விசுவாசித்தார்கள்? இந்தச் சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்தில் அவர்கள் அவரைப் பின்பற்றத் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள் என்று வாசிக்கிறோம். ஆனால் இரண்டாம் அதிகாரத்தில் அவர் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியபோது அவருடைய சீஷர்கள் முதன்முதலாக அவரை விசுவாசித்தார்கள் என்று பார்க்கிறோம்.

அவரோடு சில காலம் இருந்து அவர் பல அற்புதங்களைச் செய்வதைப் பார்த்த பிறகும், அவர்கள் புயலில் அகப்பட்ட போது, பயந்துபோய் அவரிடம் ''போதகரே, நாங்கள் மடிந்து போகிறது உமக்குக் கவலையில்லையா'' என்று கேட்டார்கள். ''ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று?'' என்று அவர் அவர்களிடம் கேட்டார். அதாவது ''இன்னும்

நீங்கள் என்னை விசுவாசிக்கவில்லையா?'' என்று அவர் அவர்களிடம் கேட்டார் (மாற்கு 4:40).

நடபடிகளின் நூலை நாம் வாசிக்கும்போது, இயேசுவானவரைத் தான் அறிந்திருப்பதைக்கூட மூன்று முறை மறுத்து சபிக்கத் தொடங்கிய அதே பேதுரு சில வாரங்கள் கழித்து, இயேசுவானவரின் சீஷர்களின் பயமில்லாத துணிவான தலைவனாக இருப்பதைக் காண்கிறோம். பேதுரும் யோவானும் யூத சமயத்தலைவர்களின் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்னால் வரும்படி அழைக்கப்பட்டார்கள் என்று நாம் வாசிக்கிறோம். ஆலோசனைச் சங்கத்தார் அவர்களைச் சுற்றிலும் நின்றுகொண்டார்கள். எந்தப்பக்கம் திரும்பினாலும் கடுமை யான முகத்தோடு கூடிய பரிசேயர்களும், வேதபாரகர்களும் அவர்களை வெறித்துப் பார்த்துக் கடினமான கேள்விகளைக் கேட்பதையே அவர்களால் காண முடிந்தது. இந்தக் கேள்விகளுக்கு அவர்கள் தவறான பதில்களைக் கொடுப்பார்களானால், கொடூரமாக அடிக்கப்பட்டு, கொல்லப்படலாம், ஆலோசனைச் சங்கத்தாருக்கு முன்னால் வரும்படி அழைக்கப்படுவது ஒரு அச்சுறுத்தும் அனுபவமாகும்.

எழுதப் படிக்கத் தெரியாத இவர்கள் பயமில்லாதவர்களாக நின்றார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அவர்கள் அமைதியாகவும் நம்பிக்கையோடும் பேசினார்கள். பேசும்போது அதிகமான ஞானத்தை வெளிப்படுத்தினார்கள். இவர்கள் இயேசுவானவரோடுகூட இருந்தவர்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தபோது ஆலோசனைச் சங்கத்தார் வியப்படைந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். இயேசுவானவர் கைதுசெய்யப்பட்டபோது, கோழைகளாக ஒளிந்துகொண்ட இந்த மனிதரின் இயல்புக்கு அப்பாற்பட்ட சாட்சியைக் குறித்து அவர்களால் இந்த ஒரு வழியில்தான் விளக்கம் கொடுக்க முடிந்தது (அப்.4).

சுவிசேஷத்தில் நாம் வாசிக்கிறபடி பயந்துபோன கோழைகளாக இருந்த இவர்களை ஒரு சில வாரங்களுக்குள்ளாகத் துணிவான சாட்சிகளாக மாற்றியது எது? பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் வந்தபோது தேற்றரவாளனைக் குறித்த வாக்குத்தத்தம் நிறைவேறியது என்பதே இதற்கு ஒரே விளக்கமாகும். யோவான் சுவிசேஷத்தின் இந்த ஆய்வு முழுவதிலும் நாம் கேட்டுவந்த ''விசுவாசம் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு இந்த அப்போஸ்தலர்களின் அற்புதமான நடத்தையே பதிலாக இருக்கிறது.

பதினாறாம் அதிகாரத்தின் சுருக்கம்

மேல் அறைப் பிரசங்கத்தின் இந்தப் பகுதியில் இயேசுவானவர் தமது அப்போஸ்தலர்களை அவர்கள் எதிர்நோக்கவிருக்கும் பாடுகளுக்காக

ஆயத்தப்படுத்துகிறார். அவர் இந்தப் பாடுகளைக் குறித்துக் கூறுவதும், அவர்கள் அதற்குப் பதில் கூறுவதும் இந்த அதிகாரத்தின் இறுதி வசனத்தோடு முடிவடைகிறது. அப்போது அவர் ''என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாகும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்'' (33). பதினைந்தாம் அதிகாரம் பதினெட்டாம் வசனத்தி லிருந்து பதினாறாம் அதிகாரத்தின் முடிவுவரையில் இயேசுவானவர் தமது அப்போஸ்தலருக்குக் கூறியதை நாம் இந்த மூன்று தலைப்புகளின் கீழ் தொகுத்துக் கூறலாம்:

உலகத்தைக் குறித்த பார்வை

''உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்... அவர்கள் என்னைத் துன்பப்படுத்தின துண் டானால், உங்களையும், துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்'' (15:18, 20). ''அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங்காலம் வரும்'' (16:2).

பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைக் குறித்த பார்வை

அப்போஸ்தலர்கள் விரோதிக்கும் உலகிலிருந்து பாடுகளையும் துன்பங்களையும் எதிர்பார்க்க வேண்டியிருக்கும் என்று இயேசுவானவர் போதித்த அதே பின்னணியில், அவர் அவர்களிலும் அவர்கள் மூலமாகவும் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைக் குறித்து விரிவாகக் கூறுவது கவனிக்க வேண்டி முக்கியமான காரியமாகும் (16:5-11). ''நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்'' (16:7).

பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைக் குறித்த அவருடைய அறிமுகம் இந்த வசனங்களில் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது: ''அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாத படியினாலே பாவத்தைக் (குற்றத்தை வெளிப்படுத்துவார்) குறித்தும், நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினாலே நீதியைக் (குற்றத்தை வெளிப்படுத்துவார்) குறித்தும், இந்த உலகத்தின் அதிபதி நியாயந்

தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக் (குற்றத்தை வெளிப்படுத்துவார்) குறித்தும், கண்டித்து உணர்த்துவார்'' (16:8-11)

நான் உங்களுக்குக் கூறும் காரியங்களைக் குறித்த பார்வை

இரண்டு கருப்பொருள்களைக் குறித்து இயேசுவானவர் கொடுக்கும் வாசகங்களை இவ்வாறு தொகுத்துக் கூறலாம். அந்த இரண்டு கருப்பொருள்கள்: வரவிருக்கும் துன்புறுத்துதல். அந்தத் துன்புறுத்து தலைத்தாங்கும்படி பெலப்படுத்தும் பரிசுத்த ஆவியானவர். ''நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்'' (16:1). 'அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்'' (16:4). ''நான் உங்களுடனே கூட இருந்தபடி யினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை. இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.''

அதாவது ''இந்தக் காரியங்களை நான் இப்போது கூறுவதற்குக் காரணம் என்னவென்றால், அப்போது நான் சரீரப்பிரகாரமாக உங்களோடுகூட இருக்கமாட்டேன்'' 16:4, 5). ''ஆனாலும் நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது'' (16:6). ''இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய தாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்'' (16:12). ''இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசுகிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைகளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக் குறித்து வெளிப்படையாய்உங்களுக்கு அறிவிப்பேன்'' (16:25). ''என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாகும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்'' (16:33).

முடிவுரை

இந்தச் சிறிய நூலில் இயேசுவானவர் தமது சீஷர்களுக்குக் கூறிய சில இறுதி வார்த்தைகளைக் குறித்து நான் விளக்கம் கொடுக்க முயன்றிருக்கிறேன். இவை அவருடைய ஆழமான போதனைகளில் சிலவாகும். அடுத்த சிறு நூலோடு அற்புதமான யோவான் சுவிசேஷத்தின் ஆய்வு முற்றுப்பெற்றுவிடும். நீங்கள் அந்தச் சிறுநூலை எழுதிப் பெற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

நாம் இந்தச் சுவிசேஷத்தை ஒன்றாகச் சேர்ந்து ஆய்வு செய்யும் போது, நீங்கள் இயேசுவானவரை உங்கள் இரட்சகராக அறிந்து, கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு முன்னர் அவருடைய சீஷர்கள் அனுபவித்த பரிசுத்த ஆவியானவரின் அற்புதமான கிரியையை உங்கள் வாழ்க்கையிலும் அனுபவிக்க வேண்டும்

என்பதே என்னுடைய ஜெபமாகும். நீங்கள் தேவனுடைய வார்த்தையை அறியவும் தேவனுடைய வார்த்தையினால் நிரப்பப்படவும் இந்தச் சிறுநூல்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பதுவும் என் ஜெபமாகும். இதுவே எனது இடைவிடாத ஜெபமாக இருக்கிறது. ஏனென்றால் தமது மக்கள் தமது வார்த்தையில் தொடர்ந்து தரித்திருக்கும்போதும், தமது வார்த்தை தமது மக்களில் தரித்திருக்கும்போதும், தேவன் அற்புதமான காரியங்களைச் செய்கிறார் என்று நான் அறிந்திருக்கிறேன்.